திருஞானசம்பந்தர் திருப்பாடல்கள்

டாக்டர் தி. லீலாவதி

WITH COURAGE AND FAITH

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்
1987

திருஞானசம்பந்தர் திருப்பாடல்கள்

டாக்டர் தி. லீலாவதி,
பேராசிரியர்,
தமிழ்த் துறை,
இராணி மேரி கல்லூரி
சென்னை.

பேராசிரியர் முனைவர் இரா. இளவரசு
நூலக நூல்கள்
நூற்கொடை : பேராசிரியர் இரா. வேலம்மாள்
பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்

முதற்பதிப்பு: டிசம்பர் 1987

© அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

திருஞானசம்பந்தர் திருப்பாடல்கள்

ஆடூர் திரு. எம். இரத்தின சபாபதிப்பிள்ளை

அறக்கட்டளைப் பொழிவு

விலை: Rs 10 = 00

அச்சிட்டோர்:

அபிராமி அச்சகம்

சிதம்பரம்

பொருளடக்கம்

முன்னுரை

1. இலக்கிய நெறிகள் 1

2. சமுதாய நோக்கம் 59

3. சமயக் கோட்பாடு 88

துணை நின்ற நூல்கள் 117

சம்பந்தர் தேவாரம் - யாப்பும் பண்ணும் 120

அண்ணாமலைநகர்
14. 12. 87

பேராசிரியர், தமிழாகரர், கலைமாமணி

டாக்டர். **ஆறு. அழகப்பன்** எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.

தமிழ்த்துறைத் தலைவர், இந்தியமொழிப்புல முதன்மையர்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

முன்னுரை

ஆடுர் திரு. எம். இரத்தின சபாபதிப்பிள்ளை சைவசித்தாந்த பன்னிருதிருமுறை அறக்கட்டளையின் கீழ் 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28,29 ஆம் நாட்களில் நடைபெற்ற மூன்று பொழிவுகளே ‘திருஞானசம்பந்தர் திருப்பாடல்கள்’ என்ற தலைப்பில் நூலாக வெளிவருகின்றது. இப்பொழிவுகளை நிகழ்த்திய அம்மையார் சென்னை இராணிமேரி கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை டாக்டர் தி. லீலாவதி அவர்கள் ஆவர்.

பேராசிரியை டாக்டர். தி. லீலாவதி சங்க இலக்கியத்திலும் பக்தி இலக்கியத்திலும் மிகுந்த ஈடுபாடுடையவர்; சொல்லாற்றலும் குறிப்பாக ஆராய்ச்சியறிவு மிக்கவர்; நல்லாசிரியர்.

சைவ உலகில் கடவுட்காட்சி தரும் சைவச் சான்றோர்கள் பாடிய திருப்பாடல்கள் பன்னிரு திருமுறைகளாகப் பகுக்கப்பெற்று அனைவராலும் போற்றிப் புகழப் பெறுவதை நாடு நன்கறியும். இத்திருமுறைகளுள் முதல் மூன்று திருமுறைகள் ஞானசம்பந்தப் பெருமான் பாடிய தேவாரப்பதிகங்களாகும். இத் தேவாரத் திருப்பதிகக் கருத்துக்களை உள்ளடக்கி ‘திருஞானசம்பந்தர் திருப்பாடல்கள்’ என்ற பொது நோக்கில் டாக்டர். தி. லீலாவதி அவர்கள் மூன்று பொழிவுகளை அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் நிகழ்த்தினார்கள். இவை ‘இலக்கிய நெறிகள்’, ‘சமுதாய நோக்கம்’, ‘சமயக் கோட்பாடு’ என்பனவாகும்.

பண்ணார் இன்தமிழ்ப் பாடல்களால் உலகினரைக் குளிரச் செய்த திறமே திருஞானசம்பந்தர் தம் தனித்திறம் என்பதனை 'இலக்கிய நெறிகள்' என்ற தலைப்பின் கீழ் அம்மையார் அழுத்தமாக விளக்கிக் காட்டியுள்ளார். பண்ணும் பாட்டுமாய்ப் பரமனை வழிபடும் திருஞானசம்பந்தர் திருப் பாடல் நெறிக்கான வித்தாக விளங்குபவை சங்க இலக்கியக் குறிப்புகளும், காரைக்கால் அம்மையாரின் படைப்புக்களுமே எனப் போற்றியுள்ளார். ஞானசம்பந்தர் திருப்பாடல்களின் பாடுபொருள் அமைதியும் பாடுநெறிக் கூறுகளும் மரபுவழிப் பட்டும் தனிநிலைப் போக்குக்கொண்டும் அமைந்துள்ள திறத் தினைப் 'பொதுநிலை', 'மொழிநிலை', 'புனைவுநிலை' என்ற உட் தலைப்புக்களில் விரிவாக விளக்கியுள்ளார். இரு மொழிப் புலமைமிகு ஞானசம்பந்தர் வடசொல் வழக்குகளை மிகுதியும் பயிலாத திறத்தினைச் சுட்டிக்காட்டி அவர் தம் புதுச் சொல்லாக்கத்திறத்தினையும் இலக்கணச் சிறப்பு மற்றும் பிற சிறப்புக்களையும் போற்றி மகிழ்ந்துள்ளார்.

ஞானசம்பந்தர் திருப்பாடல்களின் வழி சமயஞ்சார் இலக்கிய நோக்கங்கள் இடைக்காலத்தில் புத்துணர்வுடைய புதுச் சமுதாய உருவாக்கத்திற்குக் காரணங்களாய் அமைந் துள்ளமையை 'சமுதாய நோக்கம்' என்ற தலைப்பின் கீழ் எடுத்துரைத்துள்ளார். ஞானசம்பந்தர் காட்டும் அடிப்படை வாழ்வியல் கோட்பாடு பெண்ணும் ஆணுமாய் இணைந்து அறங்காத்துப் பெருமானின் அருளைப் பெறுதலே என்பதனைத் திட்பமாக எடுத்துரைத்துள்ளார். புறச்சமயப் போக்குகளைச் சம்பந்தர் வெறுத்ததற்கான சமுதாயச் சூழலையும் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

'சமயக் கோட்பாடு' என்ற மூன்றாவது தலைப்பில் நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டிய வழிபாட்டு நெறிகள், தத்துவப் பொருண்மை நோக்கில் அமைகின்ற கோட்பாட்டு நெறிகள் என்ற இருவகைப் போக்கில் சம்பந்தர் திருப்பாடல்கள் முன்னதன் கூறுகளை மிகுதியும் கொண்டுள்ளன என்பதனை வெளிப்படுத்துகின்றார். தேவாரப்பாக்களைச் சீர்பிரித்துப் பதிப்பிக்கும் முறையினை மேற்கொண்டால் புதிய ஆய்வு முடிவுகளைக் காணலாம் என்பது இவர் தம் விழைவாகும்.

தில்லைத் திருக்கோயில் திருப்பணிச் செல்வர் என அனைவராலும் போற்றப்பெறும் ஆடூர் திரு. எம். இரத்தின சபாபதிப் பிள்ளையின் நினைவாக இவ் அறக்கட்டளையை நிறுவிய அவர் தம் குடும்பத்தார் அனைவரும், சிவசிந்தனையும் சைவப்பணியும் கொண்டொழுகுபவர்கள்; தமிழ்வளர்ச்சியில் ஆர்வலர்கள்; அறம் தழைக்க விழையும் பண்பாளர்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் அவர்கள் ஏற்படுத்தியுள்ள இவ் அறக் கட்டளையே இப்பொழிவு நிகழத் துணையாயிற்று. மேலும் தமிழ்த் துறையின் 60ஆவது நிறைவு விழா ஆண்டான இவ்வாண்டில் இச் சொற்பொழிவு நூலாக வெளிவருவது சாலச்சிறந்தது. இந் நல்வாய்ப்பினை ஏற்படுத்தித்தந்த அறக்கட்டளையினருக்குத் தமிழ் உலகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பல்துறை வளர்ச்சியிலும் குறிப்பாகத் தமிழ்த் துறை வளர்ச்சியிலும் நாளும் சிந்தை செலுத்துகின்ற நமது பெருமைக்குரிய இணைவேந்தர் டாக்டர். எம். ஏ. எம். இராமசாமி அவர்களுக்கும், பல்கலைக் கழகப் புகழைச் சிறக்கச் செய்வதில் பெரிதும் கவனம் செலுத்திவரும் நமது சிறப்பு மிகு துணைவேந்தர் பேராசிரியர் திரு. இராம. சேதுநாராயணன் அவர்களுக்கும் தமிழ்த்துறையின் சார்பில் எனது உளமார்ந்த நன்றியைப் புலப்படுத்துகின்றேன். இந் நூலினை விரைவில் அச்சிற்குக் கொண்டுவரப் பெரிதும் முயன்ற தமிழ்த்துறை நூல்வெளியீட்டுப் பொறுப்பாளர் டாக்டர். வெ. பழநியப்பன் பாராட்டிற்கும் நன்றிக்கும் உரியவராகிறார்.

1. இலக்கிய நெறிகள்

''உடலுக்கு உணவு இன்றியமையாததுபோலப் பண்பாட்டு வாழ்க்கைக்குப் பாட்டு இன்றியமையாதது. வயிற்றுப் பசியைத் தீர்ப்பது சோறு; உள்ளப் பசியைத் தீர்ப்பது பாட்டு; குறைமனம் நிறைமனமாகிறது; இந்த நிறை நிலையே பாட்டின் நற்செய்தி. துண்டு துணுக்காய் இருக்கும் உலகம் கலங்கிக் குழம்பிக் கிடக்கின்ற உலகம் நிறைநிலையாய்த் தெளிந்து உயிர்பெற்று ஒளிர்வது பாட்டில்தான்''[1]. என்று தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், உள்ளத்தினை முழுநிலையில் வைத்து உலகத்தினையும் முழுநிலையில் காட்டும் உணர்வு வெளிப்பாடான பாட்டின் நற்செய்தியை விளக்குவார். பொதுவாக நெஞ்சினைப் பண்படுத்தி, அமைதி ஊட்டி இன்ப ஆழத்தில் அமிழ்த்தித் திளைக்கச் செய்யும் பாட்டுக்கள் எப் பொருண்மையன வாயினும், அவற்றின் பயன்பாடு இன்ப அனுபவமே யாகும். பாட்டுக்களின் பொதுமைப் போக்கி னின்றும் தனித்துக் கடவுட்காட்சி தரும் திருப்பாடல்கள் இன்னும் மனிதனை மேன்மைப்படுத்துவன என்பது உண்மை,

இங்குக் கலைஞன், கவிஞனாய்த் தன்னை வெளிப் படுத்துவதைக் காட்டிலும், இறை அன்பில் அடிமைப்பட்டு அடியனாய் வெளிப்படுத்தும் திறத்தில் தற்சார்புடைய. ஆன்மீக அனுபவ இன்பங்களைக் காண முடிகிறது. மனப் பண்பாட்டிற்கும் உயிர்நிலை ஆக்கத்திற்கும் இத்திருப்பாட்டுக் களின் பொருண்மையும், உண்மையும் பெரிதும் துணைநிற் கின்றன. ''உள்ளம் குளிர்ந்த போதெல்லாம் உவந்துஉவந்து உரைப்பனே'' என்பார் ஞானசம்பந்தர். இங்குக் கடவுட் காட்சியில் திளைத்து இன்புற்று நிறைவடையும் உள்ளம், குளிர்ந்து உவகையில் பெரிதும் மகிழ்கின்றது. இவ் உள்ளக் குளிர்ச்சி. பண்ணார்ந்த இன்தமிழ்ப் பாடல்களால் உல கினரைக் குளிரப் பண்ணிய திறமே திருஞானசம்பந்தர்தம் தனித் திறமாம். இனி ''உள்ளம் குளிர்ந்த போதெல்லாம் உகந்து உகந்து உரைப்பனே'' எனப் பாடங் கொண்டு

பொருள் காணுதலும் அமையும். இங்கு உள்ளம் உகக்கின்றது. ''உகப்பே உயர்வு''[2] என்பது தொல்காப்பியம். எனவே, உள்ளம் உலகியல் நிலையினின்றும் உயர்ந்து ஆன்ம உயர்வு தேடுகின்றபோது பெறுகின்ற இறைமைக் காட்சியில் உயர் சிந்தனைகள் பெறப்படுகின்றன. மனநல உயர்விற்கும் மதிநல உயர்வுக்குமான தெய்வச் சிந்தனைகள் இறையுணர்வு ஊட்டும் இன்றமிழ்ப் பாடல்களாய் மலர்கின்றன. ஆகவே, செந்தமிழ் வல்ல ஞானசம்பந்தப் பெருமான் உள்ளம் குளிர்ந்து உவந்தும் உகந்தும் பாடியவை பண் சுமந்த திருப்பாட்டுக்களாய் மானுட உயர்விற்கான உயர்தமிழ்ச் செல்வங்களாய் நின்று நிலவுகின்றன.

இங்கு அடியார் என்ற தற்சார்பு நிலையிலும் இறைப் பற்றினைச் சமுதாயத்திற்கு ஊட்ட வேண்டும் என்ற புறநிலை நோக்கிலும் சைவசமய குரவர்கள் உணர்த்திய பக்திப் பனுவல் கள், தனிநிலைப்பட்ட சமயச் சார்பான அனுபவ உண்மை களை எடுத்துரைக்கின்றன. இவ் அனுபவம் அவர்கள் தம் பக்தி ஆளுமைத்திறத்து வழிப்பட்டது என்பது கருதத் தக்கது. தமிழில் தோன்றிய இறைப்பற்றிலக்கியங்களில் பேசப்படும் பக்தி உணர்வின் அடிப்படை பற்றி ஒன்று அறிதல் வேண்டும். 'தெய்வத்தைத் தன்னிலைப்படுத்தி, மனித உறவுப் படிம அடிப் படையில் அத்தெய்வத்துடன் உறவு கற்பித்துக்கொண்டு அந்த உறவின் அடிப்படையில் தோன்றும் உணர்ச்சிகளை வெளிப் படுத்துவதே பக்தியனுபவத்தின் அச்சாணியாகும்''[3] என்ற கா. சிவத்தம்பி கூற்று இதனை விளக்கும். தெய்வத்தை 'எளிவந்த பிரானாய்' மனிதனுக்குள் அண்மைப்படுத்தி ஆண்டான் அடிமைத்திறத்தில், காதலன் காதலி இன்ப அனுப வத்தில், தகப்பன் பிள்ளை எனும் மகன்மை நோக்கில், நண்பன் என்ற தோழமைத் திறத்தில், தனிமனித பக்தி உணர்வு சமூக அனுபவக் கூறுகளாக விளக்கம் பெறுகின்றன. இத்தகைய உணர்வுநிலை வெளிப்பாடுகளே தமிழ் இறைப் பற்றிலக்கியங் களை மக்கள் இலக்கியங்களாக மலரச் செய்ய வழிவகுத்தன.

வாழ்வினின்றும் சமயம் வேறாகித் தத்துவ தரிசனமாய் விலகிச்செல்லாது, சமயமும் வாழ்வும் ஒருங்கிணைந்த ஒருமைக்

காட்சி உணர்விற்கு இவ் உறவுநிலைக் கூறுகளே வழிவகுத்தன என்பதில் சிறிதும் ஐயமில்லை. எனவேதான், சங்க காலம் தொடங்கி வாழ்வில் ஒரு பகுதியாய், ஒரு கூறாய் நினைப்பதற்குரிய சமய உணர்வுகள், சம்பந்தர் காலத்தில் நிறுவன (ஸ்தாபன) முறையிலான சமயக் கோட்பாட்டு நெறிப்பட்டன. வாழ்வும் சமயமும் பின்னிப் பிணைந்து, மக்களை ஒருங்கிணைத்துத் தமிழ்ச் சமய நிலைநாட்டல் முயற்சிக்கு வழிகோலும் இலக்கியப் படைப்பாக்கப் போக்குகளாக இறைப்பற்றிலக்கியத் தோற்றங்களைக் கொள்ளலாம்.

இனி, வரன்முறையிலான சமயக்கோட்பாடுகள், வழிபாட்டு,நெறி முறைகள், பக்தி உணர்வு வெளிப்பாடுகள் போன்ற நெறிமுறைக்குட்பட்ட சைவ, வைணவ சமய உண்மைகள் சமுதாயத்தில் ஆழங்காற்படாத காலத்துப் புறச் சமயங்கள் இவ் இடைவெளியினைப் பயன்படுத்தித் தம் சமயக் கோட்பாடுகளைப் பண்பாட்டுக் கலப்பு வழி முறையில் ஊடுருவச் செய்த, மறைமுகமாகன அக உணர்வு மாற்றத்தினைக் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் தமிழினப் பண்பாட்டு வரலாறும் இலக்கியங்களும் எடுத்துக் காட்டுகின்றன.

சங்க இலக்கியங்களில் சமண, பௌத்த சமயக் குறிப்புக்களைக் காணுகின்ற நாம், சிலப்பதிகாரத்தில் சமயப் பொதுமைப் போக்கிற்கும் அப்பால் கவுந்தியடிகள் வாயிலாய்ச் சமணப் பிரசாரத்தை உணர்கின்றோம். மணிமேகலையில் பௌத்த சமய நிலைநாட்டல், சமய வாதங்கள் வழி, "ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள் பட்டி மண்டபம் பாங்கறிந்தேறுமின்" என்ற அறைகூவல்கள்வழி உணர்த்தப் படுகின்றது. இங்குச் சைவவாதி, பௌத்த வாதத்திற்கு முன் தோற்று நிற்கும் குறிப்பினையும் சாத்தனார் எடுத்துரைப்பது, அகச்சமயமான சைவத்தின் செல்வாக்குக் குறைவினைச் சுட்டுகின்றது. அன்றியும் இறை உணர்வினை ஊட்டுதலினும் அறஉணர்வினை ஊட்டுதலே குறிக்கோளாய்க் கொண்ட கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பாலனவும்

சமணர்கள் இயற்றியவை என்பதும் குறிக்கத் தக்கது. எனவே, அற உணர்வினைப் பரப்புதல் வாயிலாகச் சமயப் பரப்பலுக்கு அடிகோலினர் எனக்கொள்ளலும் பொருந்தும்.

இப்பின்புலத்தில்தான் முதல் ஆழ்வார்களின் இயற்பாக் களும், காரைக்கால் அம்மையாரின் மூத்த திருப்பதிகங்களும், அற்புதத் திருவந்தாதியும், திருவிரட்டை மணிமாலையும் முதன் முறையாக இறைப்பற்றினை உணர்த்தும் சமயஞ்சார்ந்த இலக்கியப் படைப்புக்களாக முறையே மாலின் பெருமையை யும், சிவனின் சீர்மையையும் நிலைநாட்ட முற்பட்டன. இவ் வகை இறை உணர்வு பரப்பும் இலக்கியங்களே பின்வந்த சைவசமய குரவர்களுக்கும் ஆழ்வார்களுக்கும் முன்னோடி களாக அமைந்தன. சமுதாயச் சிந்தனைப்போக்கில் மாற்றத் தையும் சமய உண்மைகளை உணர்த்தும் புதுத்தடம் வகுக்கும் போக்கினையும் உருவாக்க மேற்குறித்த திருப்பாடல்கள் பெரிதும் வழிவகுத்தன என்பதை நினைத்தல் வேண்டும். ஞானசம்பந்தப் பெருமானின் திருப்பாடல்களின் கருத்துப் பொருண்மையினையும் வெளியீட்டுப் பாங்குநெறிமுறை களையும் உணர்தற்குக் காரைக்கால் அம்மையாரின் படைப்புக் கள் மூல இலக்கியங்களாய் வழிகாட்டிய முன்திறனையும் நோக்குதல் வேண்டும்.

மரபும் தாக்கமும்

அம்மையாரின் பதிக அமைப்பு, அந்தாதிப் பாடல்களின் கருத்துப் பொருண்மைப் போக்குக்கள்பற்றி விளக்குதற்கு முன், சங்கமலி செந்தமிழ் மரபுகள் சில, அம்மையின் படைப்பு உருவாக்கத்திற்குத் துணை நின்றன என்பதும் கருதத் தக்கது

சங்க இலக்கிய மரபுகள் தொல்காப்பிய நெறிப்பட்டன: எனினும், சங்கப் பாக்களுக்கே உரிய தனிநிலைப் போக்குகளும் சுட்டிக் காட்டற்குரியனவாம். ஒருபொருள்மேல் பத்தடுக்கிப் பாடும் முறைமையினைப் புறப்பாடல் நிலையில் பதிற்றுப் பத்தில் காண்கிறோம். சேரமன்னர்களின் வீரம், கொடை நலம், மனைநலம் ஆகியன மன்னர்க்குப் பத்துப் பாடல்கள் என்ற வகையில் சிறப்பிக்கப்படுகின்றன. அன்றியும் அவை

யாப்பு நெறிக்குட்பட்டனவாய் அமைதலோடு இசை நீர்மை கொண்டு வண்ணம் வகுக்கப் பெற்ற இசையியல்பு கொண்ட இயற்பாக்கள் என்பதும் குறிக்கத்தக்கது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடிய பாக்களில் முதல் பாட்டிற்கு 'ஒழுகு வண்ணம்' என்ற வண்ண வேறுபாடு குறிக்கப் பெறுகிறது. 'ஒழுகு வண்ணம் ஓசையி னொழுகும்' என்பது தொல்காப்பியம். 'வண்ணம் என்பது சந்த வேறுபாடு' என்றும் 'யாப்புப் பொருள் நோக்கியவாறு போல, இது பொருள் நோக்காது ஓசையே கோடலானும், அடியிறந்து கோடலானும் யாப் பெனப் படாது' என்றும் பேராசிரியர் விளக்குதலால், இது செய்யுள் வகையுள் அடங்காதெனவும் எனவே ஒரு செய்யுளில் ஒன்றே யன்றிப் பல வண்ணங்களும் வருமெனவும் அறிக'' என்று சந்தநயஞ்சார்ந்த பதிற்றுப் பத்தின் ஓசைநயச் சிறப்பினை விளக்குவார் ஔவை. துரைசாமிப் பிள்ளை[4] எனவே, பொருண்மைப் போக்கில் ஒன்றன்மேல் பத்தடுக்கிப் பாடுதல், வெளியீட்டு முறையில் சந்த நயத்தோடு பாடும் இசைத்தன்மை என்ற இருகூறுகளும் பதிற்றுப்பத்தில் காணக் கிடைக்கின்றன.

இனி பரிபாடல் வெண்பா யாப்பிற்று எனினும் பிற வகைப் பாக்களினுடைய உறுப்புக்களைப் பெற்றும், கலிப்பா உறுப்புக்களையும் பெரிதும் ஏற்றும் வரும் என்ற யாப்புக் கூறுகள் ஒருபுறம் அமைய, இப்பாடல்கள் பெரிதும் விரிவான இசையுரிமை பெற்றிருத்தல் காணத் தக்கது. இசைவாணர்கள் இவற்றிற்குப் பண்வகுத்துப் பாடினர் என்பதும் கருதத் தக்கது. பொருண்மை நிலையில் 'காமங் கண்ணியதாகு'ம் எனத் தொல்காப்பியர் இலக்கணம் வகுத்தன ராயினும் கிடைத்துள்ள பரிபாடல்கள் அவ்வுரிப் பொருளினும் சிறந்த தாகக் கடவுள் வாழ்த்தினைத் தழுவிக் கொண்ட புதுமைநிலை யுடையதாகும். சங்கப் பனுவல்களில் இறைச் சார்பு கொண்ட இசைப் பாடல்கள் என்ற தனிச் சிறப்பிற்கும் உரியவை இவை.

''தைய லவரொடுந் தந்தா ரவரொடும்
கைம்மக வோடுங் காத லவரொடும்
தெய்வம் பேணித் திசைதொழுதனிர் சென்மின்''

என இளம்வழுதியார் பரிபாடல் 15-இல் மக்களை இறைவழிப் படுத்தும் ஏமமார் போக்கினை உன்னுதல் வேண்டும். மருத்துவன் நல்லச்சுதனார் இசைப்படுத்தி நோதிறப் பண்ணில் அமைந்த இசைமிகு அரும்பாடல் இது. எனவே, பண்ணும் பாட்டுமாய்ப் பரமனை வழிபடும் பாடல்நெறிக்கான வித்தினைப் பரிபாடல் விதைக்கக் காண்கின்றோம்.

அன்றியும் சங்கத் தமிழ் மரபில் புறப்பாடல்களில் மட்டு மல்லாது அகம்தழுவிய பாடல்களும் ஒன்றன்மேல் பத்தடுக்கிப் பாடும் ஐங்குறுநூற்றுப் பத்துக்களையும் இங்கு நினைவிற் கொள்ளலாம். தொண்டிப் பத்து அந்தாதி முறைமையில் அமைந்த திறமும் கருதத் தக்கது. இவற்றிற்குப் பின்னர் திருக்குறள் ஒருபொருள் மேல் பத்துக் கருத்துநிலைகளை விளக்கும் அமைப்புடையது என்பதும் தெளிவு. எனவே, இப் பண்டைய மரபுகள் அம்மையார் பாடல்களில் பதிந்து சில மாற்றங்களைப் பெற்றுப் பின்வந்த தெய்வத்தமிழ் மாலை பாடிய அருளாளர்களுக்கு வழிகாட்டின.

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிக அமைப்பு முறையில் 'எரியாடும் எம்மானாரின்' காட்டரங்கத் திருக்கூத்தில் பேய்க் கணங்களுடன் நட்டமிடும் திருக்கோல அழகு பெரிதும் பாராட்டப் பெறுகிறது. அம்மையார் சுடுகாட்டரங்கக் கூத்தினையே முதன்மைப்படுத்துவார். ''புறநானூற்றுக் காலத்தி லேயே ஈமப்புறங்காட்டைச் சுட்டி வாழ்க்கை நிலையாமை பேசப்பட மணிமேகலையிலே சக்கரவாளக்கோட்டம் காட்டி அதே பிரசாரம் நடைபெற்றுள்ளது. இவ்வாறு மக்களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கை தளர்ந்து கொண்டிருந்த சமயம், காரைக்காலம்மையார் பாடல் புதிய வலிமையையும் புதிய நம்பிக்கையையும் தருவதாக அமைந்தது. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்களில் அம்மையார் ஈமப்புறங்காடு பற்றி நிறையப் பாடுகிறார். ஈமப்புறங்காட்டைக் கண்டு அம்மையார் அஞ்சவில்லை. ஈமப்புறங்காடு, எல்லாம் வல்லவனும் அடியார்க்

கெளியானும் கருணைக் கடலுமான இறைவனுடைய கோவிலாகக் காட்சிதரத் தொடங்கியதும், வாழ்க்கையில் ஓர் ஒளி, நம்பிக்கைச் சுடர்விட ஆரம்பித்தது.''[5] ஆடல் வல்லான் திருக்கூத்து, பின்னர் சமயகுரவர்களில் மூவர் முதலிகளால் பல்வேறு பரிமாணங்களில் வாழ்த்திப் பாராட்டப்பெறுகின்றது.

அம்மையார் பதிக அமைப்பில் 11-ஆம் பாடல்,

''அப்பனை அணிதிரு ஆலங்காட்டுள்
அடிகளைச் செடிதலைக் காரைக்காற்பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்
சிவகதி சேர்ந்தின்பம் எய்துவாரே.''

''ஆடும் அரவம் அரையில்
ஆர்த்த அடிகள் அருளாலே
காடு மலிந்த கனல்வாய்
எயிற்றுக் காரைக் காற்பேய்தன்
பாடல் பத்தும் பாடி
ஆடப் பாவம் நாசமே.''

என்ற முறையில் முத்திரைப் பாடல்களாக அமைகின்றன. பாடல் இயற்றியோர், பாடுபொருள் சிறப்பு, சமுதாயப் பயன்பாடு என்ற முத்திறப் பொருண்மைகளைச் சுட்டிக் காட்டிப் பக்திப் பாடல் நெறியில் புதுமுறை வகுத்துக் காட்டுவார். அன்றியும் பதிகப் பாடல்கள் பண்வழிப்பட்ட இசைப் பாக்கள் என்ற வகையில் முதற்பதிகம் நட்டபாடைப் பண்ணிற்குரிய தென்றும், இரண்டாம் பதிகம் இந்தளப் பண்ணிற்குரிய தென்றும் குறிக்கப்பட்டிருப்பதும் நோக்குதற்குரியது. இப்பதிகப் புதுநெறியே சம்பந்தரால் பாடல்தோறும் பயன்படுத்தப்பட்டிருப்பதும், சுந்தரரால் பெரிதும் பின்பற்றப் பட்டிருப்பதும், மரபுவழித் தாக்கத்திற்குச் சான்றாகின்றது.

எனவே, சம்பந்தர் தம் இலக்கிய நெறிகளை முறைப் படுத்திக் காண்பதற்குப் பழந்தமிழ்ப் பாடல்நெறிக் கூறுகள் பின்புல மரபுகளாய்ச் செயற்பட்டமை அறிதற்குரியது. இப்

பின்னணியினைக் கொண்டு, சம்பந்தரின் ஒருநெறிய திருப் பாடல்களின் இலக்கியப் பெருநெறிகளைக் காண்பது பொருந் துவதாகும்.

மரபுகளைப் போற்றுதல், புதுமரபுகளை உருவாக்குதல், பழம் மரபுகளுக்குப் புதுக்கோலம் புனைதல், வேறுசில மரபு களை முற்றாகப் புறக்கணித்தல் என்ற பல்வேறு படிநிலை களில் காலந்தோறும் இலக்கிய வகைமை வளர்ச்சியினைக் காணுதல் கூடும். காலத் தேவைக்கும் பொருண்மை வெளிப் பாட்டிற்கும் படைப்பாளியின் தனி ஆளுமைத் திறத்திற்கும் ஏற்ப, இலக்கிய வடிவங்களும் உள்ளடக்கங்களும் வெளியீட்டுத் திறன்களும் நிர்ணயிக்கப்படுகின்றன. இவையே குறிப்பிட்ட படைப்பாளியின் படைப்புகளின் இலக்கிய நெறிகளை வகைப் படுத்திக் காட்டவும் துணை செய்கின்றன.

சம்பந்தர் தம் பக்திப் பனுவல்களில் காணலாகும் இலக் கிய வெளியீட்டு நெறிகளை வகைப்படுத்தியும், தொகுத்தும் அறிதற்கு அடிப்படையான கருதுகோள் ஒன்றை நினைவிற் கொள்ளல் வேண்டும். குடந்தை ப. சுந்தரேசன் இதனை மிகத் தெளிவாகத் தம் கட்டுரை ஒன்றில் விளக்கிக் காட்டுவார். சம்பந்தரின் "முதல் மூன்று திருமுறைகள், முந்நூற்று எண் பத்து நான்கு பதிகங்களுடன் நூல் வடிவில் இக்காலம் நம் மிடையே விளங்குகின்றன. இவற்றில் பொதிந்து கிடக்கும் சிவ நெறியும் தமிழ்மொழியின் நீர்மையும் மொழிவழி அமைந் துள்ள சொற்களும் அவற்றின் எழுத்துக்களும் இக்காலத்து நூல்வழக்கு, மக்கள் வழக்கு யாவற்றிலும் விரவிக் கிடந்த போழ்தினும். பாடல்களின் வடிவில் பண்டைய பரிபாட்டு, வரிப்பாட்டு, வண்ணவகை, இயற்பா, இசைப்பா, இயலி சைப்பா, இசையியற்பா, இசையளவு பா எனும் வகைகளில் இசைத் தமிழ்ப் பாக்களாகவே அமைந்து, தெய்வஞ் சுட்டிய பாடல்களாகத் திகழ்கின்றமையினாலே 'அளபிறந்து உயிர்த்து ஒற்றிசை நீண்டு இசையொடு சிவணும் நரம்பின் மறைக்கேற்ப நிறைமொழிமாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழியாகி விளக்கமுற்று நன்கு நிலவுகின்றன என்பதைச் சிறப்புற உணர் தல் வேண்டும்." [8] எனவே, சம்பந்தர் திருப்பாடல்களின் பாடு

பொருள் அமைதியும் பாடுநெறிக் கூறுகளும் மரபுவழிப்பட்டும் தனிநிலைப் போக்குக் கொண்டு அமையும் திறம் தெளிவுபடுத் தப்படுகிறது. அவர்தம் பாடுபொருள் அமைவுகள் 'சமுதாய நோக்கம்', 'சமயக் கோட்பாடுகள்' என்ற இரு தலைப்புக்களில் பின்னர் விரிவாக்கம் செய்யப்பெறும். ஈண்டு அவர்தம் திருப்பாடல்களின் வெளியீட்டுப் பாங்கு நெறிமுறைகள், கலை நுட்பக் கூறுகள், படைப்பாக்கச் சிறப்புக் கூறுகள் எல்லாம் மூவகைப் பாகுபாட்டில் எடுத்துரைக்கப்படுகின்றன.

1. பொதுநிலை அமைப்பு
2. மொழிநிலை அமைப்பு
3. புனைவுநிலை அமைப்பு

என்ற தலைப்புகளில் முதல் பகுதி, திருப்பாடல்களின் பொது வான அமைவுக் கூறுகளை எடுத்துரைக்கும். இரண்டாம் பகுதி மொழிவழிப்பட்ட யாப்புக் கூறுகளையும், இசைவழிப் பட்ட பண் அமைவுகளையும், நடைவழியிலான மொழி அமைதிகளையும் பெரிதும் விளக்க இருக்கின்றது. கலை நுட்பச் செய்நேர்த்தித் திறன்வழிச் சம்பந்தர் பாடல்களில் காணலாகும் புனைவுப் போக்குகள் அணிநலத்திறன்கள், வருணனை வெளியீடுகள் என மூன்றாம் பாகுபாட்டில் தொகுத்துரைக்கப் பெறும். இவற்றில் அடங்கியும், பொதுமைப்படுத்தியும் தனித்து மேம்படுத்தியும் காட்டவல்ல சம்பந்தர்க்கே உரிய சிறப்பு நெறிமுறைகள் இறுதியில் தொகுத்துச் சுட்டப்பட்டு, பக்திப் பாவாணர் வரிசையில் சம்பந்தர் தம் படைப்பாக்க ஆளுமைத்திறனை மதிப்பிட்டுக் காட்டுதற்கான முயற்சி மேற்கொள்ளப் பெறுகிறது. இவ் வகைப்பாட்டுத் திறனாய்வு நெறியினைப் பின்பற்றுவதன் அடிப்படை நோக்கம் இறைப்பற்று இலக்கியங்களின் கருத்துப் பொருண்மை மேம்பாடுகளை வெளிப்படுத்தப் பக்தன் என்ற நிலையினும், பாவலன் என்ற நிலையிலும் கலைஞன் கையாளும் இலக்கிய நெறிகளைத் தனிப்படுத்திக் காட்டுவது, காலந் தோறும் இலக்கியப் படைப்பாக்கத் திறன் வளர்ச்சிகளை முறைப் படுத்திக் காட்டுவதற்கான வழியினைத் தெளிவு படுத்தும் என்பதாம்.

பொது நிலை அமைப்பு

காலமும் சூழலும் விளைக்கும் மாறுதல்கள் விரிந்து பரவிக் குவிந்து உணர்ச்சிகளாய் நெஞ்சிலே அலைமோதிக் கிளர்ச்சி யூட்டித் தணிவுற்று செறிவுற்றுக் கவிதையாய், திருப் பாட்டாய்க், காப்பியமாய், உரைநடையாய் இன்னபிற கலை வடிவக் கோலங் கொள்ளுகின்றன. வடிவ அமைப்பில் புற வடிவக் கூறுகளையும், அகவடிவப் பொருண்மைப் பொதி வினையும் காண்கின்றோம். இங்குப் புறவடிவ அமைப்பில் பாவலன் கையாளும் பொதுநிலை அமைவுகள் குறிக்கத் தக்கன. நமக்குக் கிடைத்துள்ள சம்பந்தர்தம் 383 பதிகங் களுடன் திருவிடைவாயிற் கல்வெட்டுக் காட்டும் ஒரு திருப் பதிகத்துடன் கிடைத்துள்ளவை 384 ஆகும். இப்பதிகங்களின் திருப்பாடல்கள் எண்ணிக்கை 4158 ஆம்.

பதிகப் பெருவழி கண்ட பெருமானின் திருப்பதிகப் பாடல் எண்ணிக்கைகள் மாறுபாட்டிற்குட்படுவன.

1. பெரும்பான்மையான பதிகங்கள் பதினொரு பாடல் கள் கொண்டவை.
2. சீகாழிக்குரிய பதிகங்கள் சில பன்னிரண்டு பாடல்கள் கொண்டு விளங்குவன.
3. திருமுகப் பாசுரம் பன்னிரண்டு பாடல்கள் கொண்டது.
4. திருவெழு கூற்றிருக்கை ஒரே ஆசிரியப்பாவான் இயன்றது.
5. 54 குறைப்பதிகங்கள் உள்ளன. அடிக்குறைபாடுகள் கொண்டனவும், பாடற் குறைபாடுகள் கொண்டனவு மாக இக்குறைப் பதிகங்கள் அமைகின்றன.[9]

எனவே, பத்துப்பாடல்கள் கொண்டமைவது பதிகம் எனினும், சம்பந்தர் பாடல்களில் கருத்தமைவுகள் பத்துப் பாடல்களிலும் நிறைவுறப் பதினோராம் பாடல் பயன்முடிவு கருதியதாய்த் தொடர்ந்தமைகிறது. 12 பாடல்கள் அமைதற்

கான காரணம், சீகாழிப் பதி பன்னிரெண்டு திருநாமங்களைக் கொண்டமைவதால், பதிக நீட்சி கொள்ள இடம் அமைகிறது.

திருமுகப் பாசுரம் சைவசமய நுண்பொருட் பதிகமாய்ச் சாத்திர உண்மைகளைச் செப்புவதால் சிவஞானபோதத்தின் பன்னிரண்டு சூத்திரக் கருத்துகளை எடுத்துக் காட்டும் மூலபாடமாய்த் திகழ்கின்றது என்பர். சாத்திரப் பொருண்மையின் பொதுமைத் தன்மையையும் சிறப்புநிலையினையும் எடுத்துக் காட்ட முதல் மூன்று பாட்டுக்கள் ஒருவித யாப்பும சந்தமுமாகவும், மற்றையவை வேறு யாப்பும் சந்தமுமாகவும் பிரிந்து அமைந்த சிறப்புடையன. இவ்வாறு அமைந்த பதிகம் இஃது ஒன்றேயாகும். இதனை ‘மெய்ஞ்ஞானம்’ என்று அருணந்தி சிவாச்சாரியார் போற்றுவார். உலகத்து உயிர் யாவையும் துன்பம் நீங்கி இன்பம் எய்தல் வேண்டும் என்ற மானுடப் பயன்பாட்டு நோக்கில் அமைந்த திருமுகப்பாசுரம் திருஞானசம்பந்தரின் உலகநேய ஒருமைப்பாட்டுணர்வினுக்குச் சான்றாக அமைகிறது. எனவே பதிகங்கள் பெரிதும் ஒருவழிப்-பட்டனவேனும், சில இடங்களில் சம்பந்தர் தனிநிலைப் போக்கில் சிறப்புப் பதிகங்கள் செய்தருளிய திறமும் பாராட்டிற் குரியதாகிறது.

இனி, ஏறக்குறைய நாலாயிரம் திருப்பாடல்கள் பாடிய சம்பந்தர்தம் தேவாரப் பாடல்களை அமைப்பு முறை நோக்கி முப்பெரும் பிரிவாக்கிக் காணலாம்.

1. நேரில்கண்ட தலங்களைச் சிறப்பித்துப் பாடும் பதிகங்கள்
2. அறிந்த தலங்களைப் பாராட்டும் பதிகங்கள்
3. பொதுநெறிப் பதிகங்கள்

பெரும்பான்மையான பதிகங்கள் சோழநாட்டின் காவிரிக்கு வடபுறத்திலும் தென்புறத்திலும் அமைந்த திருத்தலங்களையும், பாண்டி நாட்டுத் தலங்களையும், தொண்டை நாட்டு, நடு நாட்டுத் தலங்களையும் சிறப்பித்துப் பேசுகின்றன. சம்பந்தர்

நேரில் கண்டு மகிழ்ந்து திருவருளில் கனிந்து பாடியதலங்களின் சிறப்புக்களையே இங்கு மிகுதியும் காணல் இயலும்.

நேரில் கான இயலாத, கேட்டு இன்புற்று, விரும்பிப் பாடிய ஈழநாட்டுத் தலங்கள், வடபுலத்துத் தலங்கள் பற்றிய பதிகங்கள், தமிழகத்துத் தலங்கள் சிலவற்றை வைப்புத் தலங்களாகச் சுட்டிக்காட்டும் பதிகங்கள் என்ற பாகுபாட்டிற்குரியவை இரண்டாம் பிரிவில் அடங்குகின்றன.

இனி மூன்றாம் பிரிவிற்குரியன தலவழிபாடன்றிப் சைவப் பொதுமை நெறி காட்டும் ஏழு பதிகங்கள்:

1. திருக்கொடிமாடச் செங்குன்றூரில் அடியார்கள் சுர நோய் நீங்கப் பாடிய 'அவ்வினைக் கிவ்வினை' என்ற பதிகம்;

2. திருத்தலங்களைக் கோவைப்படுத்தி 'ஆரூர் தில்லையம்பலம்' என்று எடுத்துப்பாடிய க்ஷேத்திரக் கோவைப் பதிகம்;

3. 'வேயுறு தோளி பங்கன்' எனத் தொடங்கும் கோளறு பதிகம்;

4. தமக்குப் பூணுல் அணிவிக்கும் சடங்கில், எல்லா மந்திரங்கட்கும் மேலானது திருவைந்தெழுத்து எனப் பாடிய பஞ்சாக்கரப் பதிகம்;

5. வேதப் பொருள் நலம் பாடிய 'கல்லானீழல்' எனத் தொடங்கும் தனித்திருவிருக்குக் குறள்;

6. 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' என நெஞ்சுருகிப் பாடிய நமச்சிவாயப் பதிகம்;

7. சிவஞானப் பொருண்மைப் பிழிவான திருப்பாசுரம்.

இவை சைவசமய உண்மைகளைப் பொதுமைநிலையில் விளக்கிக் காட்டும் திறத்தனவாகலின் பொதுநெறிப் பதிகங்கள் என அழைக்கப்படுகின்றன.

அடுத்து, தொகுப்பு அமைப்பு முறையில் பண்ணார் செந்தமிழ்த் திருப்பாடல்களைத் தலமுறையாகவும் பண் முறை

யாகவும் என இருவகைப் போக்கில் தொகுத்து வெளியிடும் முறை உண்டு. பண்முறை என்பது மூவர் முதலிகள் பாடிய பண்களை வகைப்படுத்தி ஒவ்வொரு பண்ணிற்கும் உரிய பதிகங்களைத் திருமுறை கண்ட புராணத்திற் கூறப்பட்ட கட்டளை விகற்பத்திற்கேற்பத் தொகுத்த தொகுப்பு முறை.

தலமுறையென்பது திருப்பதிகக் கோவையில் 'கோயில் திருவேட்களம்' முதலாகக் குறித்த முறைமையில் தலங்களை நிரல்படுத்தி அவற்றிற்கேற்ற மூவர் பதிகங்களைச் சேர்த்து இணைத்துத் தொகுத்த முறை.

இவ்விரண்டனுள்ளும் பண்முறையமைப்பே பழஞ்சுவடி களில் பெரிதும் இடம் பெற்றதென்பர்.

தொகுப்பு முறை அமைப்பு இருபெரும் குறிப்புகளைக் காட்டும். ஒன்று இறையருளை முதன்மைப்படுத்தித் தலப் பெருமையினைச் சிறப்பித்துக் காட்டுதல் சைவசமய மேன்மைக்கு முதன்மை நல்குவதாக அமைகிறது.

மற்றொன்று பண் அமைப்பில் தொகுப்பது பாடுநெறிய மைப்பிற்கு முதன்மை நல்கி, இலக்கிய வகைமைத் திறத்தில் இசைப்பாட்டு நெறிமுறைமைக்கு முதன்மை தருவதாக அமையும்.

எனினும், தலத்துவழி இறைவன் பெருமையும் பண்வழி பாடற் சிறப்பும் பெரிதும் பாராட்டப் பெறுதலும், இறைவன் திருவார் மேன்மைகளைப் பண்ணார் செழுந்தமிழ்ப் பாடல் களில் பாடும் திருநெறிய தமிழ்வழியில் ஒன்றில் ஒன்று இணைந்து கலக்கும் ஒத்திசைவுக் கோட்பாட்டினை வலியுறுத் தும். இப்பாகுபாடெல்லாம் தொகுப்பாளர் தொகுப்பமைவிற் கடைப்பிடிக்கும்நெறிமுறைகள் என்ற அளவிலும் கட்டமைப் புப்பாங்கின் திறத்தினைத் தெளிந்து கொள்ளலாம்.

பதிகக் கட்டமைப்பு - ஒரு பார்வை

திருப்பதிகங்களில் பெரிதும் பின்பற்றப்படும் பொது நிலை அமைப்புக் கூறு இப்பதிகங்களின் புறவடிவ அமைப் பினை எடுத்து விளக்கும்.

1. முதல் ஏழு பாடல்கள் தலச்சிறப்பு, இறைவன் திருக்கோல அழகு, திருவருட் பேறு, பேற்றின் பயன் எனக் பக்தி உணர்வினையும், சமயஞ்சார்ந்த உண்மைத் தெளிவினையும் விளக்குவனவாகப் பெரிதும் அமைவன.
2. எட்டாந் திருப்பாடல் இராவணனைச் சிவன் அயர்ந்து அருளிய பெருங்கருணைத் திறம் பேசும்.
3. ஒன்பதாந் திருப்பாடல் மாலும் பிரமனும் அடி முடி காணாது அமைந்து நிற்க அவர்க்கரியனாய் நிற்கும் சிவனின் பெரியனாந் தன்மை பேசும்.
4. பத்தாந் திருப்பாடல் 'வெஞ்சமண் பாட்டு' எனத் தகும். புறச்சமயப் பூசல் உரைத்து, அதனைப் புறங் காண வழிவகுத்து நிற்கும்.
5. பதினொராம் திருப்பாட்டு, பாடினோர் திறமும் பாடற் பொருண்மை வழிப் பெறலாகும் பயன்பாடும் எடுத்துக் கூறி நிறைவு செய்யும் திருக்கடைக் காப் பாகும்.

இவ் அமைப்பு முறையின் உள்ளார்ந்த பொருள் அமைவு பற்றி அறிஞர்கள் பலரும் விளக்குவர். சேக்கிழார் பெரிய புராணத்தில் விளக்கம் காட்டுவார்.[10] மண்ணுலகில் வாழ்வார் பிழை செய்யினும் பின் உணர்ந்து கண்ணுதலான் கருணை வேண்டின் அவன் மன்னித்தருள்வான் என்பது இராவணன் செயல்வழி உணர்த்தப்படுகிறது.

அவன் அருளே கண்ணாகக் காணின் அல்லால் அவனை அடைதல் அருமை என அடிமுடி கண்டு அயர்ந்த மால்அயன் செயல் உணர்ந்தும் என்பார்.

பொய்தீர் சிவநெறியன்றிப் புன்மைச் சமயநெறி புக்கு உழலவேண்டாம் என மக்களை வேண்டி பௌத்த சமணப் பொருந்தாப் பொய்ம்மைப் போக்குகளை எதிர்த்து முரணுதல் சமண், பௌத்தர் பற்றிய பழிப்புரைகள் உணர்த்தும்.

இங்கு ஆணவ முனைப்புடன் செயல்படும் மனிதன் முனைப்பு அடங்கிச் செய்த பிழையையும் உணர்வானெனின்

இறையருள் எளிமையில் கிடைக்கும் என்ற குறிப்பினைக் காட்டுவது, பிழை செய்வது மனித இயல்பு என்பதையும், பிழை உணர்வது தெய்வத்தன்மை என்பதையும், பிழை பொறுத்தல் இறை இயல்பு என்பதையும் ஒருசேரக் குறிப்ப தாகக் கொள்ளலாம். டாக்டர் வேலுப்பிள்ளை, இராவண னாகிய அரசனைச் சம்பந்தர் சுட்டுவது, அவர் காலப் பாண்டிய, சோழப் பேரரசுகளுக்கு ஓர் எச்சரிக்கையான குறியீட்டு விளக்கம் எனக் குறிப்பதும் சிந்திக்கத்தக்கது[11]

மாலயன் செருக்கழிவு ஒருவகையில் சைவசமய நிலை நாட்டலில் வேதநெறிப்பட்ட பிற தெய்வ வழிபாட்டினின்றும் சிவனின் முதன்மையையும் மேன்மையையும் வற்புறுத்தி 'வானவர் தானவர் வணங்கிட' ஓங்கி நிற்கும் உலகெலாம் நெறி கலந்ததொரு நீர்மையனாய அவன் திறம் செப்புதற்கு எனக் கொள்ளினும் அமையும். சைவத்தின் மேல் சமயமில்லை என நிலைநாட்ட வைணவ சமயப் பரப்பலை ஒருவாறு புறந் தள்ள சம்பந்தர் மேற்கொண்ட உத்தியென விளக்கவும் கூடும்

இனிப் புறச்சமயத் தாக்குதல் பற்றி விரிவாகச் 'சமுதாய நோக்கம்' என்ற பகுதியில் விளக்க இருப்பதால் இங்கு விரிவிற்கு இடமில்லை.

இராவணன் பற்றிய குறிப்பு, காரைக்கால் அம்மையார் திரு இரட்டைமணிமாலையில் வருவது கருதத்தக்கது.

> ''அடித்தலத்தின் அன்றரக்கன் ஐந்நான்கு தோளும்
> முடித்தலமும் நீ முரித்த வாறென் – முடித்தலத்தில்
> ஆறாடி ஆறா அனலாடி அவ்வனலின்
> நீறாடி நெய்யாடி நீ''

எனச் சுட்டிச் செல்வார். இம்மணிமாலையிலேயே

> ''வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்
> காதியனை ஆதிரைநன் னாளானைச் – சோதிப்பான்
> வல்லேன மாய்ப்புக்கு மாலவனும் மாட்டாது
> கில்லேனமா என்றான் கீழ்''

என மாலவன் அடி தேடிய குறிப்பும் காணப்படுவது கருதற் குரியது.

ஆணவ அழிவு நீக்கமும் பிழை பொறுத்தாள்வதுமான செயற் பாட்டுக் குறியீடாக இராவணச் செயலும், மும்மூர்த்தி களிலும் மூவா முதல்வனாய ஆதிப்பிரான் சிவன் எனும் நிலை நாட்டல் செயற் பாட்டுக் குறியீடாக மாலயன் செருக்கழிவுப் மரபுவழிப் போற்றப்படும் கருத்துக்கள் எனக் கொள்ளுதல் பொருந்துவதாகும். அப்பரும் இராவணச் செருக்கழிவினைச் சுட்டுவார். பின்வந்த சுந்தரர், மணிவாசகர், குமரகுருபரர் போன்றோர் இதனைச் சிறப்பாகப் போற்றவில்லை என்பதும் நினைவிற் கொள்ளக் கூடியதாம். ஆனால், சம்பந்தர் அவர் காலச் சூழல் அமைவிற்கேற்பச் சைவசமயப் பரப்பலுக்கும், அந்நெறி உயர்வினுக்கான செயற்பாட்டிற்கும் மேற்குறித்த மூன்று செய்திகளையும் மறவாது ஓர் அமைப்பு முறை இலக்கிய நெறியாகப் பதிகந்தோறும் பெரிதும் கடைப்பிடித் தமை அவர்தம் தனி இலக்கிய இயல்பு எனவே கருத இட மேற்படுகிறது.

இவ்அமைப்பு முறை நெறியில் பிறழ்ந்து காணப்படும் பதிகங்களும் சில உள. இராவணன் பற்றிய குறிப்பு எட்டாம் பாடலில் அன்றி ஒன்பதாம் பாடலில் உரைக்கப்படும் இடங் களும் உண்டு. அவை 17 என வரையறை செய்வார். சொ. சிங்காரவேலன்.[12] பத்தாம் பாடலில் ஒரு பதிகத்திலும், பதினோராம் பாடலில் மற்றொரு பதிகத்திலும் இக்குறிப்பு இடம் மாறிப் பாடப்பட்டுள்ளது (முறையே பதிகம் 371, 18). இது பற்றிய வேறு குறிப்பு உடைய பதிகம் 349 ஆகும். எட்டாம் பாட்டில்லாத பதிகம் 304. இராவணனைப் பற்றிய குறிப்பே இல்லாதவை 27 பதிகங்களாம்.

மாலயன் பற்றிய செய்திகள் ஒன்பதாம் பாட்டினின்றும் பத்தாம் பாடலில் சொல்லப்படும் முறையும் உண்டு. அவை 19 பதிகங்கள்.[13] 367-ஆம் பதிகம் முழுவதும் இச்செய்தியே குறிக்கப்பெறும் அருமையும் இங்குக் குறிக்கத்தக்கது. இக் குறிப்பே இல்லாத பதிகங்களும் பன்னிரண்டு உள.

சமண பௌத்தக் குறிப்புகள் பதினோராம் பாடலில் குறிக்கப்படும் முறை ஆறு பதிகங்களில் உண்டு. இவை போன்ற அமைப்பு முறை மாற்றங்களை விரித்தெழுதி,

ஏடெழுதுவோர் பிழையாலோ அன்றிச் சம்பந்தரே ஆயிரக் கணக்கான பாடல்களில் சில மாற்றங்களைப் புகுத்த நினைத்த தாலோ இம்முறைமாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம் எனக் காரணங்களை ஆராய்ந்துரைப்பார் சொ. சிங்காரவேலன்.[16] நினைந்து பின்பற்றும் இலக்கியநெறி அமைவுகளிலும் ஆங்காங்கு மாற்றங்கள் ஏற்படுவது படைப்பாக்கத் தொழிலில் தவிர்க்க முடியாதது என்ற அளவில் அமைதி கூறி அமையலாம்.

இனி, அமைப்பு முறை நெறிப்பாட்டில் நிறைவுப் பாடலான திருக்கடைக்காப்பு பற்றி அறிதல் வேண்டும். காரைக்கால் அம்மையார் பதிகநெறி இஃது என்பது முன்னரும் சுட்டப்பட்டது. இதனைச் சம்பந்தரும், சுந்தரரும் பெரிதும் பின்பற்றுகின்றனர். அப்பர் இந்நெறியினைப் போற்றாமை மனங்கொள்ளத் தக்கது. உளவியல் கண்ணோட்டத்தில் சம்பந்தர் தம் சமய நிலைநாட்டல் முனைப்பில் பெருமித உணர்வுடனும், சுந்தரர் தம்பிரான் தோழர் என்ற உரிமைப் பெருமிதத்தின் நிமிர்வில் இயல்பாகவும் பதிகப் படைப்பாளர் பெயரையும் பாட்டின் பயன்பாட்டையும் பாடிப் பயன்பெற வேண்டும் என்ற வேட்கை விருப்பினையும் முன்வைத்து முத்திரையிட்டுப் பாடியமை அவர்கள் இருவருக்கும் இயல்பாய் வரும் தன்மைகளாகின்றன. ஆயின், அப்பர் ''சமணரொடு அயர்த்து நாளும் மறந்து அரன் திருவடிகள் நினைய மாட்டா'' 'அறிவிலி'யாய் வாழ்ந்த காலங்களை நினைந்து சோர்ந்து தளர்கின்றபோது, தாமே மிகுசைவத் துறை விளங்க முன் நின்று செயற்படும் தொண்டராய் நிமிர்வில் பேச இடம் இல்லாமல் போகிறது. தன்னிலை உணர்ந்து உணர்வு வடிவாய் உள்ளத்தெழும் ஒரு முதலை நினைந்து, கசிந்து, இரங்கிப் பாடும் உணர்வுநிலைப் பெருக்கே அப்பரின் தேவாரப் பாடல்களின் அடிநாதமாய் ஒலிப்பதும் கருதத்தக்கது.

'சமணர் பௌத்தர் வயப்பட்டுத் தமிழ் மக்கள் மனமயங்கிக் கிடந்த தடுமாற்றக் காலம் ஆதலின், அத்தடுமாற்றம் நீங்கி அருள்நெறி விளக்கம் காண இம்முறை பெரிதும் பயன் பட்டிருத்தல் வேண்டும்' என்பார் சொ. சிங்காரவேலன்.[16]

திருக்கடைக்காப்பு ஒரு வகையில் பதிகத் தொகுப்பாக அமைகிறது. வழிபாட்டு நெறி காட்டும் தெய்வத் தமிழ்ப் பாடல்களுக்கான மங்கல வாழ்த்தாகவும் இதனைக் கொள்ள லாம். சமுதாயத்தினை நோக்கிச் சம்பந்தர் எடுத்துரைக்கும் அறிவுரையாகவும் கொள்ள இடமுண்டு.

அன்றியும் நூற்பயன் கூறலால் மக்கள் எளிதாக நன்மை பெற இறையுணர்வுப் பாடல்களில் நெஞ்சம் வைத்து நெக்குருகவும் வாய்ப்புண்டு. தலந்தோறும் பாடிச் செல்லுகை யில் அடியார் திருக்கூட்டம் சம்பந்தப் பெருமானின் சமயத் தொண்டினைநினைவுகூர்ந்து பெருமிதத்துடன்இத்திருக்கடைக் காப்பினைச் சொல்லி ஏத்தி உகந்திருப்பர். இவற்றிற்கும் மேலாக, தமிழ் இலக்கிய வரலாற்றில் சம்பந்தர்தம் இத்திருக் கடைக் காப்பு, வரலாற்றுப் போக்கில் பாடியவர் உண்மையை நிலைநாட்டும் சிறந்த சான்றாதாரமாவதும். தொகுப்பார்க்கு எளிமையாய்த் திருப்பாடல்களில் சம்பந்தரை இனங்காட்டு தற்குரிய குறிப்பாவதும் கருதத் தக்கது. இலக்கியப் படைப் பாளியின் உண்மைத் தன்மையை நிலைநாட்ட இது பெரும் சான்று என்பதையும் நினைத்துப்பார்க்க வேண்டும். சமகாலத் தவரான அப்பர் திருப்பாடல்களினின்றும் சம்பந்தர் பாடல் களைப் பிரித்துணரச் செய்யவும் இது வழி வகுத்துள்ளது. ‘சம்பந்தன் தன்னைப் பாடினான்’ என்ற மொழி, காலச் சூழலின் தேவை என்ற வகையில் அடிபட்டுப் போகிறது. தற்சார்பு நிலையில் அன்பில் கனிந்து அகங் குழைந்து பாடுகை யில், தம் பாட்டினால் தமிழ்ச் சமுதாயம் தலை நிமிர்ந்து திருவருட் பேற்றிற்கு ஆளாக வேண்டும் என்று சமயத் தொண்டாற்றிய அருளாளர் தம்மைப் பெயரிட்டுக் கூறி உண்மையை நிலைநாட்டுவதில் தவறில்லை எனவும் அமைதி காணல் வேண்டும்.

திருப்பதிகங்கள் சிவபரம்பொருளின் திருவாக்கெனவே சம்பந்தர் கருதியதால், திருக்கடைக்காப்பில் மானுடம் உய்யும் நெறிகள் இவை என முறைப்படுத்திக் காட்டுவார்.

1. திருவடிப் பேறு சித்திக்கும். 'முக்கணான் அடி', எந்தைதன் கழலடி', 'பரமன் அடி' என ஈசன் திருவடி நீழலில் சென்றடையும் பேறே பெருஞ்சிறப்பென விதந்தோதுவார்.

2. அழிதன் மாலையதாய இம்மை வாழ்வினின்றும் அழியாப் பேருலகு அடையப் பண்ணார் இன்தமிழ் மாலையினைப் பாடிப் போற்றிப் பரவ வேண்டுகிறார். விண்ணுலகப் பேரின்பம் அடைதல் ஒருதலை என மானுட சமுதாயத்திற்கு அறிவுறுத்தல் அவர் இயல்பாகின்றது.

3. எதிர்மறை முகத்தான் 'அல்லல் நீங்கல்', 'அவலம் அடையாதிருக்க', 'ஏத்துவார் இடர் கெட'. 'நெஞ்சிருள் நீங்க', 'ஊனத்தொடு துயர் தீர', 'கவலை களைய', 'குற்றம் குறுகாதிருக்க, 'தீயதிலராய்' வாழ, 'நடலையவையின்றி' வாழ, 'அருவினை நோய்' சாராதிருக்க, 'பந்தபாசம் அறுக்க', 'பாவம் கெட', 'கற்பவர் வல்வினை மாய' என இப்பிறவிப் பெருந்துன்பங்கள் நீங்க நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் தமிழ் பாடியாட வேண்டுமாய் வற்புறுத்தி நிற்பார். பாச நீக்கமும் பதிப்பேறும் உறுதியாய் வாய்க்கும் என்ற நிலையில் 'அரசாள்வர் ஆணை நமதே' எனவும் வலியுறுத்தும் நீர்மையும் காண்கின்றோம்.

இனி உடன்பாட்டு வழியில் செல்வம், அழகு, சீர்மை, புகழ், மானம், போகம் எல்லாம் கிடைத்து வையத்தார்க்கு மேலானவராய் விழுமிய நெறியில் வேர் கொள்ளலாம் எனக் காட்டும் திறமும் இங்குக் காணலாம்.

இதுவே 'துயரமில்லாத் தூ நெறி' என்றும், 'தமிழிவை வல்லார் நலங்கொள் சிந்தையராகி, நன்னெறி யெய்துவர்' என இதுவே நன்னெறி என்றும் நிலைநாட்டும் பயன்படு இறைநெறி விளைவுகளைச் சொல்லி மக்களை அன்புவழிப் படுத்தல் சம்பந்தர்தம் அருள்வழி எனக் கோடலே சாலும்.

மொழி நிலை அமைப்பு

யாப்பு அமைவு

இசை அமைவு

இனி இரண்டாம் பிரிவிற்குட்பட்ட மொழிநிலை அமைப்புப் பற்றிப் பார்த்தல் அமையும். யாப்பு வழிப்பட்ட இயற்பாப் போக்குக்களும், விகற்பங்களும், இசைவழிப்பட்ட பண்சார் இசையமைவுகளும் யாழ்நூலார் விபுலானந்தராலும், திருமுறை வித்தகர் க. வெள்ளைவாரணராலும், இன்னும் தேவார ஆய்வறிஞர் பலராலும் பெரிதும் எடுதுரைக்கப்பட்டு விளக்கம் பெற்றுள்ளன. எனவே, அவைபற்றி மீண்டும் எடுத்துக் காட்டுதல் முந்தைய விளக்க உரைகளின் தொகுப்புரையாகவே அமையும். ஆகலின் குறிப்பாக ஆய்விற்குரிய சில மேற் குறிப்புகளே இங்கு எடுத்துக் காட்டப்பெறுகின்றன.

“இயற்றமிழில் சீர்வகை பற்றிய செய்யுட்களின் அமைப் பினைப் பகுத்துணர்தல் எளிது. இசைத்தமிழில் ஓர் எழுத்து மிகினும் குறையினும் இசையமைப்பிற்குரிய தாளம் முதலியன மாறுபடும். ஆதலால் நெடில், குறில் ஆகிய எழுத்தளவு பற்றி இசைப்பாக்களின் அமைப்பினைப் பகுத்துணர்தல் வேண்டும். இங்ஙனம் இசைப்பாக்களின் சந்த அமைப்பினை அறிதற்குரிய கருவியாகத் தான, தன, தானா, தனா முதலாக உள்ள அசைச் சொற்கள் இசைத்தமிழ்ப் பாடல்களுக் குரிய சந்தக் குழிப்புச் சொற்களாக இசையாசிரியர்களால் எடுத் தாளப் பெற்றுள்ளன”[18] எனக்கொண்டு தேவார யாப்பமைதி யினை மேற்கூறிய சந்தக்குழிப்பு அசைச் சொல் வாய்பாடு வழிக் கட்டளையடிகளைப் பிரித்தறிந்து ஆய்கின்றார் க. வெள்ளைவாரணர்.

ஆயின், இயற்பாக்கள் அனைத்தும் இசைக்குரியனவே. இசைப்பாடல்கள் இயற்றன்மை கொண்டனவே. “முத்தமிழை வெவ்வேறாகப் பிரித்துப் பேசினாலும் பிரிக்க முடியாதபடி மனக்கருத்தாய் அரும்பி, இசையாய்ப் பூத்துக் கூத்தாய்ப் பழுத்து முற்றிய போதுதான் உயரிய வாழ்க்கையாய் இனிக்கக்

காண்கிறோம்...... முத்தமிழ் வழியே கடவுளை அடைதலுங் கூடும் எனக் கண்ட நற்றமிழ் ஞானசம்பந்தர் 'ஆடல் நெறி', 'பாடல் நெறி' 'எனப் புதியனவாகக் கூறியுள்ளார். பாடல் நெறி இயல், இசை என்ற இரண்டையும் குறிப்பதால் முத்தமிழும் இங்கே குறிக்கப்பட்டமை காண்க'' என்று தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் முத்தமிழ் ஒருமைக் காட்சியில் தமிழ்ப் பாக்களின் ஒத்திணைவுப் பான்மையை விளக்குவார். எனவே, தேவாரப் பாடல்களுக்குச் சான்றோர் கண்ட பண்வழிப்பட்ட யாப்பமைதிகளை ஏற்று அமைகின்ற போக்கு இருக்க, இயற்றமிழ் யாப்பமைவுகளை ஏற்றிப் பார்த்து பண்ணும், யாப்பு விகற்பங்களும் இணைந்து ஒருங்கமைகின்ற போக்கினை ஆராய்தலும் புதுவது பயக்கும் திறத்ததாகும். இதுவரைதேவாரப் பாக்களைச் சீர்பிரித்துப்பதிப்பிக்கும் முறை கடைப்பிடிக்கப்படவில்லை. இம்முயற்சி மேற்கொள்ளப் பெறின் புதிய ஆய்வு முடிவுகள் காணல் கூடும். இந்த அடிப்படையில் ஞானசம்பந்தர்தம் பண்ணார் இன்தமிழ்ப் பாக்களின் யாப்பு அமைதிகளை மரபுவழிக் காணும் முயற்சி மேற்கொள்ளப் பெறுகிறது. இசையமைதியுடன் யாப்பு விகற்பங்கள் இணைதல் கூடுமா எனக் கேள்வி எழுப்பி விடை காணும் வேட்கை எழுகிறது. இது ஞானசம்பந்தர் தம் இலக்கிய நெறிகளில் வடிவு பற்றிய யாப்புப் பாகுபாட்டினைக் காணுதற்கு மேற்கொள்ளும் முயற்சியாகிறது. முடிவுகள் மேல் ஆய்விற்கும், ஆய்வறிஞர்தம் கூர்த்த மதிக்கும் முன் வைக்கப்படுகின்றன.

ஔவை. துரைசாமிப் பிள்ளை அவர்கள் இத்திருப்பாட்டுக்கள் இயற்றமிழ் நெறியில் கொச்சக ஒருபோகு வகையில் அடங்கும் என்றும் இசைத்தமிழ் நெறியில் 'தெய்வஞ் சுட்டிய வாரப்பாட்டு' என்றும் இசையியக்கம் முதனடை, வாரம், கூடை, திரள் என்பனவற்றில் வாரம் சார்ந்தன என்றும் கூறி முடிப்பார். நடையினும் ஒலியினும் எழுத்தினும் நோக்கித் தொடையமைந்து ஒழுகும் தொன்மைத்து வாரம் என்று சிலப்பதிகார அரும்பத உரைகாரர் காட்டும் விளக்கத்தையும் தருவார்.[16]

திருஞானசம்பந்தர் திருப்பதிகங்களை ஓசையிட்டுச் சீர் பிரித்து யாப்போசைகளைச் செப்பமாகப் பட்டியலிடும் முயற்சியின் வெளிப்பாட்டின் அமைந்த பட்டியல் பின் இணைப்பில் இணைக்கப்படுகிறது. ஓசைவாய்பாடு, பண், தலமுறைப் பதிகம் என்ற அமைப்பில் நிரல்படுத்துகையில், யாப்பமைவுகள் பல உருவாக்கம் பெறுகின்றன. இவற்றிற்கும் ஏற்கனவே வகுப்பட்டுள்ள பண்களுக்கும் இடையிலான தொடர்புகளும் காணக் கிடைக்கின்றன. இவ் ஆய்வு வழிப் பெறலாகும் சம்பந்தர் யாப்பு பற்றிய கீழ்க்காணும் கருத்துக்கள் மீள் ஆய்வுப் பார்வைக்கு வைக்கப்படுகின்றன:-[17]

அடி எண்ணிக்கையைக் களனாகக் கொண்டு சம்பந்தர் பாடல்களை நால்வகையாக நோக்கலாம்.

அ. ஈரடிப் பாடல்கள்

ஆ. நான்கடிப் பாடல்கள்

இ. ஆறடிப் பாடல்கள்

ஈ. இணைக்குறளாசிரியப்பா

அ. ஈரடிப் பாடல்கள்:

ஈரடிப் பாடல்கள் இயல் யாப்புக் கண்ணோட்டத்தில் நான்காகப் பாகுபாடுறும்.

அவற்றுள் இரண்டடிகளும் சீரளவொத்து நிற்ய வருவது ஒரு பதிகம் மட்டுமே. அது திருப்பிரமபுரம் பற்றிய 47-ஆம் பதிகம். அதன் இயல் வாய்பாடு தேமா. 7. பண் கௌசிகம்.

எஞ்சிய மூன்று பகுப்புக்களின் வாய்பாடுகளும் அவை அமையும் பதிகங்களும் வருமாறு:—

1. முதலடி : மா கூவிளம் மா கூவிளம் மா கூவிளம் மா கூவிளம்

இரண்டாமடி : மா கூவிளம் மா கூவிளம் மா கூவிளங்காய்.

பதிகம் : திருவீழிமிழலை 50/12 "வேலினேர் தருகண்"

பண் : பழம்பஞ்சுரம்.

2\. முதலடி : புளிமா கூவிளம் புளிமா கூவிளம் புளிமா கூவிளம் புளிமா கூவிளம்

இரண்டாமடி : புளிமா கூவிளம் புளிமா கூவிளம் புளிமா கூவிளங்காய்

பதிகம் : திருப்பிரமபுரம் 66.

பண் : பழம்பஞ்சுரம்.

''பரசு பாணியர் பாடல் வீணையர்'' எனத் தொடங்கும்.

3\. முதலடி : மா கூவிளம் மா கூவிளம் மா கூவிளம் கூவிளம் கூவிளம்

இரண்டாமடி : மா கூவிளம் கூவிளம் கூவிளம் கூவிளங்காய்.

பதிகம் : திருப்பிரமபுரம் 10/2

பண் : பழம்பஞ்சுரம்.

'வரமதே கொளா உரமதே செயும்' எனத் தொடங்கும்

ஈரடிப் பாடல்களில் சீர் அளவொத்து வருவன குறைவாகவும் அளவொவ்வாதன மிகுதியாகவும் காணப்படுகின்றன. முதலடி நீண்டும் ஈற்றடி குறைந்தும் வருதல் அளவொவ்வாதவற்றின் இயல்பாகக் காணப்படுகிறது.

ஆ. நான்கடிப் பாடல்கள்

நான்கடிப் பாடல்கள் சீரெண்ணிக்கையொத்த அடிகளால் ஆனவும், சீரெண்ணிக்கை ஒவ்வாத அடிகளால் ஆனவும் என இருவகைப்படுகின்றன.

சம்பந்தர் தேவாரத்தில் சீரெண்ணிக்கை ஒத்து நிற்கும் அடிகளையுடையனவே மிகுதி. அவ்வாறு வரும் பதிகங்களின் தொகை ஏறத்தாழ 340.

இவற்றின் விழுக்காடு $\left\{ \frac{340}{384} \times 100 = \right\}$ 89%

ஒத்துவரும் பாடல்களைச் சீரெண்ணிக்கை நோக்கி வஞ்சித் துறை, வஞ்சி விருத்தம், கலி விருத்தம், கலித்துறை, ஆசிரிய விருத்தம் என இளம்பூரணர் கருத்தையொட்டி ஐவகையாகப் பகுக்க இயலும்.

வஞ்சித் துறை

இருசீரடி நான்கு கொண்டு வரும் வஞ்சித்துறை 'திரு விருக்குக் குறள்' எனச் சம்பந்தர் தேவாரத்தில் சுட்டப் பட்டுள்ளது, ஒன்பது பதிகங்கள் இவ்வமைப்பில் அமை கின்றன. அலை பெறும் வாய்பாடுகள் நான்கு.

1. தேமா, தேமா
2. புளிமா தேமா
3. மா கூவிளம்
4. மா காய்

முதலிரு வாய்பாடுகளும் கொல்லிப் பண்ணையும் பின்னிரு வாய்பாடுகளும் குறிஞ்சிப் பண்ணையும் கொண்டவை.

வஞ்சி விருத்தம்

வஞ்சி விருத்தமாக வருபவை 18 பதிகங்கள்.

ஓசை வாய்பாடுகள் 4. பண்கள் 3.

1. மா 2 புளிமாங்காய் – தக்கராகம்
2. விளம் 2 விளங்காய் – வியாழக் குறிஞ்சி
3. மாங்கனி கூவிளம் தேமா – தக்கராகம்
4. புளிமா 4/மாங்கனி கூவிளம் கூவிளங்காய் – இந்தளம்

இவற்றுள் பின்னிரு ஓசைவகைகளும் கட்டளையடிகள் கொண்டவை.

கலிவிருத்தம்

நாற்சீரடி நான்கு கொண்டு வரும் ஞானசம்பந்தர் பதி கங்களின் தொகை 116. இவற்றுள் கலிவிருத்தங்கள் 92

பதிகங்களிலும், இயற்சீர் மிகு வெள்ளைக் கொச்சகம் இரு பதிகங்களிலும், வெண்சீர்விரவு வெள்ளைக் கொச்சகம் 8 பதிகங்களிலும், தரவுகொச்சகக் கலிப்பா 14 பதிகங்களிலும் அமைந்துள்ளன.

நாற்சீரடிப் பாக்களில் பொருந்தும் பண்களின் தொகை 14. ஓசை வாய்பாடுகள் 23.

ஒரே பண் வெவ்வேறு யாப்போசைகட்கும் ஒரே யாப் போசையில் வெவ்வேறு பண்களும் கலந்து வருதலையும் காணலாம்.

எடுத்துக்காட்டாக இந்தளப் பண்,

மா புளிமா புளிமா புளிமா
மா கூவிளம் கூவிளம் கூவிளம்
மா கூவிளம் தேமா கூவிளம்
விளம் விளம் மா கூவிளம்
விளங்காய் விளங்காய் விளங்காய் தேமா
மாங்கனி கூவிளம் கூவிளம் மா.

ஆகிய ஓசை வகைகட்கும், வெண்சீர் விரவு வெள்ளைக் கொச்சகத்திற்கும் பொருந்தி வருகிறது. மற்றும் தரவு கொச்சகக் கலிப்பா மட்டும் பழந்தக்க ராகம், பஞ்சமம், சீகாமரம், கௌசிகம், காந்தாரம் ஆகிய ஐந்து பண்களால் இசைக்கப்படல் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு ஓசையும், பண்ணும் மயங்கிவருதல் நாற்சீரடிப் பாக்களுக்கேயன்றிப் பிறவாய பாக்களுக்கும் ஏற்புடையத யுள்ளது.

இனி, குறிப்பிட்ட ஓசைவகைக்கென்று குறிப்பிட்ட பண்ணையே கொள்ளலும் உண்டு.

சான்றாக,

விளங்காய், கூவிளங்காய், கூவிளங்காய், தேமா என்ற வாய்பாட்டு ஓசைவகை 6 பதிகங்களில் இடம் பெற்றும்

அவையாவும் இந்தளப் பண்ணாலேயே இசைக்கப் பெறுதல் உன்னத்தக்கது.

கலித்துறை

ஐஞ்சீரடி நான்கு பெற்று வரும் கலித்துறைப் பாடல்களில் ஒரு பதிகம் மட்டுமே கட்டளைக்கலித்துறையால் ஆனது· அதன் பண் வியாழக்குறிஞ்சி.

எஞ்சிய கலித்துறைகளின் ஓசை வாய்பாடுகள் 21. பண் 13. பதிகங்கள் 69.

கலித்துறைக்கண் பொருந்தும் பதிகங்களில் சாதாரிப் பண் மட்டும் பெரும்பாலும் திருவிராகம் எனத் தனிச்சிறப்புப் பெயரோடு அழைக்கப் பெறுகிறது, அவ்வகைப் பதிகங்கள் கருவிளம் அல்லது கூவிளங்காய்ச் சீர்களை மிகுதியாகப் பெற்றுப் பெரிதும் முடுகியவோசையோடு விளங்குகின்றன· விளங்காய்ச் சீரை மிகுதியாக உடைய கலிவிருத்தமும்; இந்தளப் பண்பெற்றுத் திருவிராகத்தோடு இசைக்கப் பெறல் இவண் சுட்டத் தக்கது.

ஆசிரிய விருத்தம்

ஆசிரிய விருத்த வகைகள் 5. அவை அறுசீர்க் கழிநெடிலடி எழுசீர்க்கழிநெடிலடி, எண்சீர்க்கழிநெடிலடி, ஒன்பதின்சீர்க் கழிநெடிலடி, பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங் களாம்.

பின்னைய யாப்பருங்கலத்தார் எண்சீரின் மிக்க அடி சிறப் பற்றது எனக் கூறினும், 9, 12 சீர்களாலான அடிகளைப் பெற்றுவரும் சம்பந்தர் பதிகங்கள் குறிப்பிடத் தக்கன-வாயுள்ளன. இப்பதிகங்கள் இடையறவின்றி ஒருபோக்காகச் செல்லலும்கருதத்தக்கது.

இவற்றுள் ஒன்பதின் சீரடி விருத்தம் "கூவிளம் கூவிளம் கூவிளம் கூவிளம் கூவிளம் கூவிளம் கூவிளம் மா கூவிளங்காய்', என வாய்பாடு பெறும். இதனை 'யாழ்முரி' என்ப. இப்பதிகப் பாடலின் தனித்தன்மை இடையறாது அராகம்போல ஓடுதல்

ஆகும். யாழுக்கு அடங்கா இசைநீர்மை கொண்டதெனக் கொள்வார். இதன் வழிப்படும் திருநீலகண்ட யாழ்ப்பாணர் பற்றிய நிகழ்ச்சியும் இதனை வலியுறுத்தும்.

பன்னிரு சீரடி விருத்தம், வியாழக் குறிஞ்சிப் பண்ணும் திருத்தாளச்சதியும் கொண்டமைந்தவை. ''மா 5 கூவிளம் மா 4 கூவிளம் கருவிளங்காய்'' என்பது அப்பதிக ஓசை வாய்பாடு. இதன் சிறப்பு நோக்கி இஃதொன்று மட்டுமே ''திருத்தாளச் சதி'' எனக் குறிக்கப் பெறுகிறது. இங்கு இயலும், இசையும், கூத்தும் இணைந்து 'பாடல்நெறி ஆடல்நெறியாய்'ப் பரிண மித்துக் கலக்கின்றது.

ஆசிரிய விருத்தங்களுள் அறுசீரடி விருத்தங்களே சம்பந்தர் தேவாரத்தில் மிகுதி. அவை அமையும் பதிகங்கள் 94; வாய்பாடு 22; பண் 10.

எழுசீரடி விருத்தங்கள் அமையும் பதிகங்களின் தொகை 17 ஓசை வாய்பாடு 6; பண். 5.

எண்சீரடி விருத்தங்கள் அமைந்த பதிகங்கள் 15; ஓசை வகை 6; பண் 5.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து சீரெண்ணிக்கை ஒத்துவரும் அடிகளைக் கொண்ட சம்பந்தர் திருப்பாடல்களில் அமையும் ஓசை வகைகள் 91 எனக் காண்கிறோம். இவ்வகை ஓசை களையே பின்வந்த திருத்தக்க தேவர், கம்பர் முதலியோர் காப்பியம் பாடக் கையாண்டனர். அவர்களும் இத்துணை ஓசை வகைகளைக் கையாண்டிலர் என்பதனைக் கம்பர் ஏறத்தாழ 50 ஓசை வகைகளைக் கையாண்டார் என தாட்சா யணி கூறுவதினின்றும், தேவர் 42 ஓசைவகைகளை மட்டும் கையாண்டார் என வேங்கடராமன் கூறுவதினின்றும் அறிய லாம். [18]அவை ஈண்டு ஒப்புநோக்கத் தக்கவை.

சீரெண்ணிக்கை ஒவ்வாத நான்கடிப் பாடல்கள்

அடிதோறும் சீரெண்ணிக்கை மாறுபட்டு வரும் ஞான சம்மந்தப் பெருமானின் நான்கடிப் பாடற் பதிகங்களின் தொகை 39; அவற்றின் ஓசை வாய்பாடுகள் 18; பண் 8.

39 பதிகங்களுள் 29 பதிகங்களில் 1, 3–ஆம் அடிகள் ஒருவகை ஓசைவாய்பாட்டிலும் 2, 4–ஆம் அடிகள் பிறிதோர் ஓசை வாய்பாட்டிலும் அமைந்துள்ளன. இவ்வாறு அமையும், பதிகங்கள் 'திருமுக்கால்' என்று குறிப்பிடப்பட்டுள்ளன.

சான்று: நடுநாட்டுப் பதிகங்கள் 9/7, 10, 45, 14/19
தென்கரை (காவிரி) 63/11

திருப்பிரமபுரம் பற்றிய 17 மற்றும் 25–ஆம் பதிகங்கள் தனித்தன்மை கொண்டவை. முன்னையதில்,

1,3–ஆம் அடிகள் : விளம் கூவிளம் தேமா தேமா கூவிளம் கூவிளம் தேமா தேமா.

2–ஆம் அடி : விளம் கூவிளம் தேமா தேமா கூவிளம் கூவிளம் கூவிளங்காய்

4–ஆம் அடி : கூவிளம் கூவிளம் கூவிளங்காய் கூவிளம் கூவிளம் கூவிளங்காய்

என நான்கடிகளும் மூவேறு ஓசை வகைகளில் அமைந்துள்ளன
25-ஆம் பதிகத்தில்,

1,2–ஆம் அடிகள் ; மா கூவிளம் கூவிளம் கூவிளம் மா கூவிளம் கூவிளம் கூவிளம்

3-ஆம் அடி : மா கூவிளம் மா கூவிளம்

4-ஆம் அடி : மாவிளம் தேமா மா விளம் தேமா.

என்று மூவேறு ஓசைவகை ஒரே பாடலில் இடம் பெற்றுள. இதனை 'ஈரடிமேல் வைப்பு' என்று தலைப்பிட்டு அழைப்பர். முதலிரண்டும் தொடர்ந்தாற்போல் ஒரே ஓசைவகை தழுவியதால் பின்னைய இரண்டும் 'மேல் வைப்பாகி' விட்டது.

இதனைப்போலவே திருக்கொள்ளம்பூதூர்ப் பதிகத்தின் முதற்பத்துப் பாடல்கள்

1,2–ஆம் அடிகள் : மா கூவிளம் 2 தேமா 1

3–ஆம் அடி : தேமா கூவிளம் தேமா கூவிளம்

4-ஆம் அடி : தேமா கூவிளம் கூவிளம்

என அமைந்தமையால் பின்னீரடிகளும் மேல்வைப்பாகக் கொள்ளப்பட்டன.

ஆறடிப் பாடல்கள்:

ஆளுடைப் பிள்ளையின் அருட்பாடல்களில் மூன்று திருப் பதிகங்கள் ஆறடிகளைக் கொண்டு அமைந்துள்ளன. அவற்றின் ஒவ்வொரு பாடலிலும் முதல் நான்கடிகளும் ஒரு குறிப்பிட்ட ஓசை வகையினையும் பின்னீரடிகளும் வேறுவகை ஓசையினை யும் கொண்டமைந்தன. எனவே, இப்பதிகங்கள் 'நான்கடிமேல் வைப்பு' எனப் பெயர் பெற்றன. ஒரு பதிகத்தில் மட்டும் ஆறு அடிகளுமே ஓரே ஓசையினவாக அமைந்துள்ளன.

எடுத்துக்காட்டு: திருவாலவாய் 7-ஆம் பதிகம்.

எட்டாம் பாடல்:

"நீற்று மேனிய ராயினர் மேலுற்ற
காற்றுக் கொள்ளவும் நில்லாவ மணரைத்
தேற்றி வாதுசெ யத்திரு வுள்ளமே
ஆற்ற வாளரக் கற்கும ருளினாய்
ஞால நின்புக ழேமிக வேண்டுந் தென்
ஆல வாயிலு றையுமெம் மாதியே"

இவண் ஆறடிகளுமே "மா கூவிளம் கூவிளம் கூவிளம்" என அமைந்தன. பாடல்தோறும் ஈற்றடிகள் இரண்டும் சொல்லா லும் பொருளாலும் ஓசையாலும் வேறுபாடின்றி அமைதல் மேல்வைப்புப் பதிகத்தின் இயல்பாகிறது.

இணைக்குறளாசிரியம்:

திருவெழுகூற்றிருக்கையாக வியாழக் குறிஞ்சிப் பண்ணி னால் திருப்பிரமபுரம் பற்றிப் பாடப்பெற்ற ஒரு பாடல் மட்டுமே இணைக்குறளாசிரியமாக அமையக் காண்கிறோம்.

ஒன்று, இரண்டு, ஒன்று; ஒன்று இரண்டு மூன்று இரண்டு ஒன்று; என இவ்வாறு ஒன்றுமுதல் ஏழு முடியப் படிப்படியாக

ஒவ்வொன்று ஏற்றியும் இறக்கியும் இவ்வாறு ஏழு கூறுகளிலும், எண்கள் இருக்க இயற்றப்படும் செய்யுள் 'எழுகூற்றிருக்கை' என வழங்கப்படும். இங்குப் பாடற்பொருண்மை நோக்கித் 'திரு' என்ற அடைமொழி இடப்பட்டுள்ளது. இதனை 'ரத பந்தம்' எனச் சுட்டுவது பிற்கால வழக்கு.

சம்பந்தர் 47 அடிகளைக் கொண்டு பாடியுள்ள இப்பாடலே எழுகூற்றிருக்கை என்ற இலக்கிய வகைக்கு மூல இலக்கியம் எனச் சேக்கிழார் கருதுவார்.[36]

யாப்பு நோக்கில் மேற்கூறிய செய்திகளைத் தொகுத்து நோக்கும்போது சம்பந்தர் தேவாரத்தின் பதிகங்களின் தொகை 384. ஓசை வகைகள் (4 + 89 + 18 + 3 + 1 = 115) 115, பண்கள் 23 என்று முறைப்படுத்த வாய்ப்புள்ளது. இதன் வன்மை, மென்மை பற்றிய முடிவுகள் ஆய்வறிஞர்தம் மேல் நிலை ஆய்வுப் பார்வைக்கு வைக்கப்படுகிறது. பாடல்களுக்குப் பண் அமைத்தல் என்பது முறை. பண்ணிற்காகப் பாடல் அமைவது உள்ளங்குளிர உவந்து பாடும் தெய்வநெறிப் பாடல்களில் செயற்கையாய் அமைதல் இயலாது என்ற குறிப்பும் இங்கு வைக்கப்படுகிறது. அன்றியும் சித்திர கவிகளாகப் பாடியுள்ள பதிகங்களுக்கும் பண் வகுத்துள்ளமை கருதத் தக்கது. எனவே, இசைநீர்மை கொண்ட இயற்பாக்கள் என்ற நிலையில் தேவாரப்பாடல்களுக்கான யாப்பமைதி பற்றிய ஆய்வின் தேவையை உணரலாம்.

யாப்பும் பண்ணும்

யாப்போசை வகைகட்கும் பண்வகைகட்கும் நுட்பமான தொடர்பு இருக்க வேண்டும். இத்தொடர்பு காலப் போக்கில் விளங்காமல் போய் விட்டது. சம்பந்தர்தம் பண்ணிறைந்த பைந்தமிழ்ப் பாடல்களை நோக்கும்போது குறிப்பிட்ட சில பண்கள் குறிப்பிட்ட ஓசை வகைகளில் மட்டுமே பயிலக் காணமுடிகின்றது. நாலாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல் களுக்கான பண்கள் 23 என்ற கணக்கினையும் காண்கையில், மாறி மாறிப் பண் அமைவுகள் மீள வருதல் பற்றிய குறிப்பை

யும் மனங்கொள்ள வேண்டியுள்ளது. கீழ்வரும் யாப்பும் பண்ணும் இணையும் ஒப்புமை அமைவுகள் ஆய்விற்குரியன:-

1. சம்பந்தர் தேவாரத்தில் இயற்சீர்மிகு வெள்ளைக் கொச்சக யாப்பில் இரண்டு பதிகங்கள் அமைந்துள்ளன. அவை இரண்டிற்கும் வகுக்கப்பட்ட பண் அந்தாளிக் குறிஞ்சி. இப்பண் வேறு எந்த யாப்போசையிலும் பயன்படுத்தப் படவில்லை.

2. தக்கேசிப் பண் இடம்பெறும் பதிகங்கள் 12. இப் பன்னிரு பதிகங்களும்

மாமாமா காய்

மா மா மா மா மா மாங்காய்

மா மா மா மா விளம் காய்

என்ற மூன்று யாப்போசைகளால் ஆனவை. முதலில் நான் கும் ஐந்துமாக மாச்சீர்கள் பெற்று ஈற்றில் காய்ச்சீர் கொண்டு முடிதல் இவற்றின் இயல்பாதல் கண்கூடு. தக்கேசிப்பண் இவ்வாறான யாப்போசைக்குரியதோ என எண்ண வேண்டியுள்ளது.

3. சீர் அளவொத்து வரும் பழந்தக்கராகப் பண்ணை யுடைய பாடல்கள் அனைத்தும் எவ்வாறேனும் காய்ச்சீர் பெற்று நிற்றலைக் காண முடிகிறது.

4. சீரெண்ணிக்கை ஒத்து நான்கடியான் நடக்கும் சீகாமரப் பண்ணுடைய பாடல்கள், வெண்சீர் விரவு வெள்ளைக் கொச்சகமாகவோ, தரவு கொச்சகக் கலிப்பாவாக வோ அமைந்துள்ளன. அவ்வாறமையும் ஒன்பது பதிகங்களும் காய்ச்சீர்களை மிகுதியாகப் பெற்று நிற்றல் வெளிப்படை. வெண்சீர் வெள்ளைக் கொச்சகமும், தரவு கொச்சகமும் ஓரளவு ஓசையொற்றுமை உடையனவாகலின், சீகாமரப் பண்ணிற்கு அவ்விரண்டும் உரியவாயின போலும்.

5. மேல் வைப்போடு வரும் பதிகம் ஐந்தனுள் நான்கு பதிகங்கள் காந்தார பஞ்சமப் பண்ணினை ஏற்று நிற்றல்

யாப்பிற்கும் பண்ணிற்கும் உள்ள பிணைப்பினை மேலும் அறிவுறுத்தி நிற்கும்.

6. அராகம் போல முடுகியலோசையோடு அமையும் யாழ்முரிப் பண்ணும், விளம் மா விளம் மா விளம் விளம் மா என்ற ஓசை வாய்பாட்டில் மட்டுமே குறிக்கப் பெற்ற புறநீர்மைப் பண்ணும் பிற யாப்போசைகளோடு பொருந்தா தவையாகச் சம்பந்தர் கொண்டுள்ளார்.

இவண் சுட்டப் பெறாத பிற பண்களையும் யாப்போசை களோடு உறழ்ந்து நோக்கி உறவு காணுதல் ஆய்வறிஞர் கடன். இம்முயற்சியில் பண்ணாராய்ச்சி யாப்பாராய்ச்சி ஆகிய இருதுறைகளிலும் கற்றுத் துறை போய வல்லோர் ஈடுபடின் இருதுறைகளுமே புதிய ஆய்வு முடிவுகளைக் கண்டுணர முடியும்.

சம்பந்தர் யாப்பின் தனித்தன்மைகள்:

யாப்பு வழிப்பட்ட நெறிகளில் சம்பந்தர் வகுத்த புதிய மரபுகள் தொடர்ந்து தமிழ் இலக்கிய வகைமை வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தின என்பது அவர்தம் படைப்பாக்க நெறியின் சீர்மையைக் எடுத்துக் காட்டும். இவர்க்கே உரிய சில சிறப்புநெறிகளைப் பின்வருமாறு முறைப்படுத்திக் காணலாம்:

1. யாப்போசை வேறுபாடுகளையும் பண்களையும் இயைத்துக் காட்டி இயற்றமிழுக்கும் இசைத்தமிழுக்கும் தொடர்பேற்படுத்தல்.

2. ஒரு பொருள் மேல் பத்தடுக்கிப் பாடும் பதிகப் பெரு வழி பண்டைய மரபின் வளர்நிலை ஆக்கமாக அமைந்து பத்திப் பாடல்களுக்குரிய தனிநீர்மையாக மாற்றம் பெறச் செய்தமை.

3. திருவெழுகூற்றிருக்கை தவிர்த்த பிறவாய சம்பந்தர் பாடல்கள் அனைத்தும் குறும்பாடல்களாகவே அமைந் துள்ளன. ஈரடிப் பாடல் முதல் ஆறடிப் பாடல் வரையிலான பாடல்கள் மட்டுமே பதிகங்களில் காணப்படுகின்றன.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும், காரைக்கால் அம்மையார் பாடல்களும், திருமந்திரமும் குறும்பாடல் அமைவிற்கான பாதிப்பினை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

4. பதிகப் பாடல்களில் உள்ள அடிகள் 2, 4, 6 என இரட்டைப்படை எண்களைக் கொண்டவையாகவே உள்ளன. 3, 5, 7 என்று ஒற்றைப்படை அடிகளையுடைய பாடல் எதனையும் சம்பந்தர் தம் பதிகத்தில் பாடவில்லை. இரண்டிரண்டு அடிகளாக இணைத்துப் பாடும் போக்கு அவர் காலத்தில் நிலவியிருத்தல் வேண்டும் என்பது இதனால் பெறப் படுகிறது.

5. ஈரடிவைப்பாக வரும் பாடல்கள் இரண்டும் நான் கடியுள் மூவோசை கொண்டனவாக அமைவன. காந்தாரப் பஞ்சமப் பண்ணால் இயன்ற நாலடிமேல் வைப்புப் பாடல்கள் இரண்டனுள் ஒவ்வொன்றும் ஈரோசை கொண்டமையும் முதல் நான்கடியினும் மேல் வைப்படிகள் நீட்சியுடையவாதல் இவற்றின் இயல்பு. மேல்வைப்பாக வருவன 'பல்லவி' போலப் பதிகத்தின் பாடல்தோறும் ஈற்றில் நிற்பனவாகும். பின்னைய கீர்த்தனைப் பா வளர்ச்சிக்கு இவ்வியல்பு அடிப்படையாக இருத்தல் கூடும்.

6. ஒன்பதின் சீரடி கொண்ட யாழ்முரியும் பன்னிரு சீரடி கொண்ட திருத்தாளச் சதியும் அடியீற்றுச் சீராகக் காய்ச்சீரை யும் பிறசீர்களாக மா மற்றும் விளச்சீர்களையும் எய்தி நிற்றல் குறிப்பிடத் தக்கது. பிற்காலத்து அருணகிரியார் திருப்புகழ்ப் பாக்களின் அடியீற்றில் காணப்படும் 'தொங்கல்' எனப்பெறும் காய்ச் சீரமைவிற்குச் சம்பந்தரின் இப்பாடல்கள் முன்னோடி யாக அமைந்திருக்க வாய்ப்புண்டு. இவ்விரு பதிகங்களுமே முடுகியலாய் அமைதலும் திருப்புகழுக்கு இவை வழிகாட்டி யாதலுக்கு மேலும் வலிமை சேர்க்கும்.

7. ஒரே பாடலில் குறுகியும் நீண்டும் அமைந்த அடிகளை மாறி மாறிப் பெற்றுவரும் பாடல்கள் சில, பிற்காலச் சிந்து வகைப் பாக்கட்கு வித்திட்டிருக்க வேண்டும்.

இனி, சம்பந்தர் பதிகங்களில் சோதனை முயற்சிகளாக மேற்கொண்ட சித்திர கவிகள் பற்றிய குறிப்புகளை ஒருசிறிது காணுதல் பொருந்தும்

'குன்றுடையானைக் காண என் உள்ளங் குளிருமே' எனச் சிவமாம் அருட்பெரு வெள்ளத்தில் திளைத்தாடிப் பாடிய ஞானசம்பந்தப் பெருமான், பக்தி உணர்வின் பொங்குநிலை வெளிப்பாடாகப் பண்ணிசைந்த இசைத்தமிழ் மாலைகளைப் புனைந்தது இயல்பே. ஆயின் காலப்போக்கிற்கும், பண் பாட்டுக் கலப்பினால் ஏற்படும் பிற இலக்கியப் பாதிப்பு களுக்கும் தகப் பாவலனின் படைப்பாக்கத் திறன்களில் புதுவது உருவாக்கும் போக்குகள் தலைப்படும். இளையராய், தமிழ் முழுதுணர்ந்த இசைஞானியராய் விளங்கிய ஞான சம்பந்தர், தமிழுக்குப் புதிய இலக்கிய மரபுகளைத் தந்துதவிய இலக்கியப் படைப்பாளியாகவும் தம்மை வெளிப்படுத்திக் கொள்வார். ஒரு பொருண்மை மேல் ஆயிரக்கணக்கான பாடல்களை இயற்றுகையில், சுவை புதிதாய், வகை புதிதாய், ஒரே மாதிரியான பாப்புனைவாக்கத்திற்கு மாற்றம் காணும் வகையிலும் புதிதாய் சில இலக்கியப் படைப்பாக்க முயற்சி களில் ஈடுபடுவதும் இயல்பே என்பதை உணர்தல் வேண்டும்,

வடசொற்கலை கடந்து, தென்தமிழ்க் கலை தேர்ந்த இருமொழி வாணரான ஞானசம்பந்தர், வடமொழி இலக்கியப் புதுமைகளைத் தமிழுக்குத் தகப் படைத்தருள விரும்பியதில் வியப்பில்லை. அன்றியும் தமிழுக்குப் புதிய இலக்கிய வகைகளையும் தாமாகத் தரவும் எண்ணம் கொண்டிருத்தலும் ஆற்றல்சால் அருந்தமிழ்ப் பாவாணர்க்கு இயல்பாகிறது. இப்புதுமைகாண் போக்கில் உருவானவையே திருவேக பாதம், திருவெழுகூற்றிருக்கை, மாலை மாற்று மொழி மாற்று, இயமகம், திருச்சக்கரமாற்று, மாவின் பாச்சல், திருத்தாளச்சதி, வழிமொழி முதலான புதிய இலக்கிய வகைகளாம். சித்திர கவிகள் என்றும் மறைக் கவிகள் என்றும் பின்னர் அறிவு விளையாட்டாக உணர்வின் விளைவாம் இலக்கியப் படைப்புகளில் நிலைபெற முயன்று

செல்வாக்கிழந்த இவ் இலக்கிய வகைகள் சம்பந்தப்பெருமான் காலத்து அவரால் தமிழுக்கு அறிமுகமாகிய விருந்திலக்கியங் களாயின. நாவரசரும் திருத்தாண்டகம், திருநேரிசை, திருவிருத்தம் முதலான புத்திலக்கிய மரபுகளைக் தமிழுக்குத் தந்ததையும் ஈண்டு ஒப்பிட்டுக்காணலாம்.

சம்பந்தரின் சித்திரக் கவிப் படைப்புகள் அனைத்தையும்

"மூல இலக்கியமாக எல்லாப் பொருள்களும்முற்ற

ஞாலத் துயர் காழியாரைப் பாடினார் ஞானசம்மந்தர்"

(பெரியபுராணம், திருஞானசம்பந்தர் - 277)

என்று சேக்கிழார் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு மூல இலக்கிய வகைகள் தந்த அருட்பாவலரின் படைப்பாற்றல் முன்மைத் திறத்தினைப் புகழ்வார்.

ஓரடியே பொருண்மை வேறுபாட்டில் நான்குமுறை மடித்து வந்து ஒரு பாடலாய் அமையும் திருவேகபாதம்

"விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்

விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்

விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்

விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்"

(திருப்பிரமபுரம், பண்—வியாழக்குறிஞ்சி)

இங்கு உணர்வினில் வல்லாரை உருக்கும் இறையனுபவத்தினும் உரையினில் வல்லார் அறிவுபூர்வமாய் இறைத் தத்துவத்தை அறிதற்கான அறிவு அனுபவத்தைப் பெறமுடியும்,

திருவெழுகூற்றிருக்கை பற்றி முன்னர்ச் சுட்டப்பட்டது. எண்ணைக் கொண்டு உருவாக்கும் எழுத்து விளையாட்டிது.

மாலைமாற்று என்ற அமைப்பில் ஒரு பாடலை முதலி லிருந்து நோக்கினாலும முடிவிலிருந்து நோக்கினாலும் அதே பாடலாக அமையும்படி எழுத்துக்களை நிரல்படுத்தி நுண்மை யாய், ஆழமாய்ப் பொருண்மை நலம் பெறச் சொல்கொண்டு தொடுக்கும் கவிதை யாப்பு இது.

கௌசிகப் பண்ணில் அமைந்த இப்பாடல்,

"யாமாமா நீ யாமாமா யாழிகாமா காணாகா
காணாகாமா காழியா மாமாயாநீ மாமாயா"

எனத் தொடங்கி இவ்வெழுத்துச் சேர்க்கைப் புனைகோலத்திலும் ஏனைய பதிகங்கள் போலவே இராவணன், மாலயன், சமண், சாக்கிய எதிர்ப்பு என்று நிரல்படத் திருக்கடைக் காப்பொடு 'தமிழாகரனின்' சமத்கார யாப்புப் புனைவிற்குச் சான்றாக அமைந்து படிப்போரை வியக்கச் செய்யும் தமிழ்ச் சொல் விளையாட்டுப் பதிகமாய் அமைகிறது.

'யாம் ஆமா?' எனக்கேட்டு, 'ஆன்மாக்களாகிய நாங்கள் கடவுள் என்றால் அது பொருந்துமா?' என்று ஏகான்மவாதிகளை மறுக்கும் நுட்பமான சொற்போர்த் தொடக்கமாக அமையும் இப்பதிகப் பொருளுரை விளக்கம் இன்னும் விரிவாகச் சைவப் பேரறிஞர்களால் வெளியிடப்படுமாயின் ஞான சம்பந்தர் இத்தகு கவிபுனைதற்கான நோக்கினையும் போக்கினையும் தெளிவாக அறிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கும்

திருப்பிரமபுரம் பற்றிய பதிகங்கள் இரண்டு திருச்சக்கர மாற்று என்ற புதுவகை இலக்கிய அமைப்பில் இருவகைப் போக்கில் புனையப் பெற்றுள்ளன. திருப்பிரமபுரத்திற்குரிய பன்னிரண்டு பெயர்களையும் தொடுத்து முதற்பாடல் அமைய, இரண்டாம் பாடல், முதற்பாட்டில் உள்ள இரண்டாம் பெயரை முதலாகக் கொண்டும், மூன்றாவது பாட்டில் மூன்றாம் பெயர் முதலாவதாகவும் எனச் சக்கரம் போலச் சுழன்றமையப் பாடியதாகும். இரண்டாம் அமைப்பில் இவ்விரண்டாகக் காழியின் திருநாமங்கள் முதற் பாட்டில் இணைந்து கடைசிப்பாடல்வரை பிரியாமல் வருமாறு உள்ள இணைப்புப் போக்கினைக் கண்டு வியக்கலாம். தம் பாடலுக்குரிய பெயரையும் "சக்கரஞ் சீர்த் தமிழ்விரகன் தான் சொன்ன தமிழ்" என்று சம்பந்தர் குறித்து முடிப்பதும் காணத்தக்கது.

'வழிமுடக்கு மாவின் பாச்சல்' என்று திருக்கடைக்காப்பில் குறித்துச் சம்பந்தர் இயற்றிய 'திருக்கோமூத்திரி' என்ற

சித்திரக் கவிப்பதிகத்தில் பன்னிரண்டு பாடலும் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது குறிக்கத் தக்கது

ஓரடியில் முன்வந்த சொல்லோ, தொடரோ வேறொரு பொருள்பட மீண்டும் அதே அடியில் மடக்கி வருவது 'மடக்கு. என்னும் சொல்லணி. 'யமகம்' என்பது இதன் வடமொழிப் பெயராம். இதனை 'இயமகம்' என வழங்குவார் சேக்கிழார்• திருப்பிரமபுரம் பற்றியும், திருவாலவாய் பற்றியும் வரும் இரு பதிகங்கள் இவ்வமைப்பில் வருகின்றன. சம்பந்தரின் இப் பதிகங்களே பின் நாளைய 'மடக்கு' இலக்கிய வகைமை வளர்ச்சிக்கு மூலங்கள் என்பது நினைந்து பாராட்டற்குரியதாம்

மேற்குறித்த சித்திரக் கவிகளேயன்றி,

''தொழுதுலகில் இழுகுமலம் அழியும்வகை கழுவுமுரை
கழுமலநகர்ப்
பழுதிலிறை யெழுதுமொழி தமிழ்விரகன் வழிமொழிகள்
மொழி தகையவே''

எனத் திருப்பிரமபுரம் மீது சாதாரிப் பண்ணில் அமைக்கப்பட்ட வழிமொழித் திருவிராகம்,

ஆடலுக்குரிய தாளச் சொற்கட்டுக்களைக் கொண்டு திருக்கடைக்காப்பில் உணர்த்துவதுபோல இத்திருப் பதிகத்தையே இருப்பத்தொரு பண்முறைக்கேற்றபடி தாள வகையால் மாற்றிப் பாடலாம் எனச் சம்பந்தர் கருதுவது போல அமைகின்ற திருத்தாளச்சதி என்ற பெயரில் அவர்தம் இசைப் பேரறிவினைச் சுட்டும் திருப்பாட்டு போன்ற இசைப் பொருண்மையும் இயல்சார் கருத்தாழமும் கொண்ட இலக்கிய வகைகள் சம்பந்தர் கவித்துவ மேன்மை காட்டுகின்றன.

ஈரடிமேல் வைப்பு, நாலடிமேல் வைப்பு, திருவிராகம், திருவிருக்குக்குறள், திருத்தாளச்சதி, வழிமொழிகள் போன்ற புதுவது பயக்கும் இசை இயற்பா அமைப்புகளும், சித்திரக் கவிப் புனைவுகளும் ஆன புத்திலக்கிய அறிமுகங்களில் பெரும் பாலன சீகாழி பற்றிய பதிகங்களில் பெரிதும் கையாளப் பெற்றுள்ள திறம் உன்னத்தக்கது. சம்பந்தர் அருள் ஞானப் பாலமுதம் உண்ட திருநகர். அவர் பிறந்த பதி என்ற

பற்றும், ஓர் ஊர் மீது பல பதிகங்கள் இயற்றுகையில் பல்சுவை தரும் வேறுபாடு யாப்பு அமைவுகளையும், இலக்கியப் புதுமை களையும் கொண்டு இயற்றல் உவட்டாது இனிமை தரும் என்ற உணர்வும் ஆன இவை, இவ்விலக்கியப் புதுநெறிகளுக் கான காரணிகள் ஆகலாம். நன்றியும், அன்புமாய், கசிந்த சம்பந்தர் தம் அறிவுப் புலமை வீறுகளை வெளிப்படுத்தும் நல்வாய்ப்பெனக் கொண்டும் இவற்றைப் புனைந்திருக்க வேண்டும். சம்பந்தருக்கே உரிய தனிநிகர் இலக்கிய நெறி இதுவாம்.

நடைநலன்கள்

மொழிவழி யாப்பு, இசை, புத்திலக்கிய வகைமைகள் ஒரு புறம் அமைய, பாவலனின் உயிர்ப்பு நிலையான நடைநலக் கூறுகள் அவனின் தனி ஆளுமைத் திறனை இனங்கண்டு, குறிப்பிட்ட காலத்தின் இலக்கிய வெளியீட்டுச் சிறப்பு அமை வுகளையும் கணித்திட வகை செய்யும். ஞானசம்பந்தரது நாலாயிரத்திற்கும் மிக்கு காணப்பெறும் இயல் இசை பாடல் களில் நடை விகற்பங்களை விரிவாக ஆய்வது என்பதே தனி நிலை ஆராய்ச்சியாக அமையும். தேவார ஒளிநெறிக் கட்டுரை கள் கண்ட செங்கல்வராயப் பிள்ளை அவர்கள் பகுப்பாய்வு நெறியில் இவ்ஆய்விற்கான தரவுகளை மிகச் சிறப்பாகத் தொகுத்துத் தந்துள்ளமை இங்குப் பெருமையுடன் போற்றத் தக்கது. இங்கு சொற்பொழிவு எல்லைக்கு உட்பட்டு சம்பந்தர் தம் நடைக்கூறுகள் மாதிரிச் சான்று நெறிமுறையில் சுருங்கத் தரப்படுகின்றன.

செலச் சொல்லும் சொல் வன்மையே நடை. பொருண்மைத் தெரிவிலும், படைப்பாளியின் படைப்பாக்க ஆளுமைத் தேர் விலும், காலத்தேவையின் சிறப்பு அமைவிலும் இலக்கிய நடை அமைவுகள் நிர்ணயிக்கப்படுகின்றன. படைப்பாளனும் பாடுபொருளும் இரண்டறக் கலக்கும்பொழுது நடை சிறக் கிறது. கலப்பின் செறிவுக்கேற்ப நடைநலத் திறன் உயரும் கவிஞன் தன்னை உணர்த்த வைத்துள்ள அடையாளச்சீட்டு நடை.

சொல் வழிப்பட்டன, தொடர் அமைப்பிற்குரியன, வெளியீட்டுப் பாங்கில் கூற்றுநிலைக்குரியன எனப் பல்நிலைப் பாங்கில் நடைக் கூறுகளை முறைப்படுத்த இயலும். "எழுத்து மற்றும் பேச்சில் சொற்களைத் தேர்தல், வரிசை முறைப் படுத்தல், பொருந்துமாறமைத்தல். உரியவற்றிற்கு அழுத்தம் தருதல், வேறுபடுத்தல் போன்ற உத்திகளைக் கையாளுதலே சொல்லாட்சி'' என்பார் ஹாரிஷா.[21] வெல்லும் சொல் இன்மை அறிந்து கையாளும் தேர்ந்த இலக்கியச் சொற்கள், வழக்குச் சொற்கள், படைப்பாளி தாமே உருவாக்கும் சொற் கள், பிறமொழிச் சொற்கள் என்ற பல நிலைகளில் சொல் லாட்சித் திறனை வகைப்படுத்திக் காண முடியும். கவிதை மொழி உணர்வின் மொழியாம். எனவே, பொருண்மைத் துடிப்பின் வெளிப்பாட்டிற்கேற்பச் சொல் அமைவுகளும் இயல்பாய் பாவலனைச் சென்றடையும். பாவலனின் படைப்புத் தொழில் நேர்த்தியினை அவன் சொல்லாட்சியில் காண முடியும்.

சொற்கள் இணைந்த தொடர் அமைவுகளில் இலக்கண வழிப்படும் தொடர் அமைப்புகளோடு, அடை புணர்த்து அமைக்கும் தொடர் அமைப்புகளையும் காணலாம்.

கருத்துப் பொருண்மை வெளியீட்டுப் பாங்கில் பாவலனுக்கே உரிய கூற்று நெறிமுறை உணர்வு வெளிப் பாட்டின் பல்நிலைப் போக்குகளையும் எடுத்துக்காட்டும்.

யாப்பு உறுப்புக்களாகிய எதுகை, மோனை முதலான தொடை நலக் கூறுகளும் நடைநலனை மிகுவிப்பன. பாவல னின் புனைதிறன் ஆற்றலைக் காட்டும் பாங்கின. இவையும் நடை அமைவுகளோடு இங்கு இணைத்துப் பேசப்படுகின்றன.

சொல்லாட்சி:

1. இருமொழிப் புலமைமிகு ஞானசம்பந்தர், மிகுதியும் வடசொல் வழக்குகளைப் பயிலாமை இங்குக் குறிக்கத் தக்கது. தென்தமிழ் வழக்கே தனிநிலை பெறுதல் வேண்டும் என்ற தெறிப்பான போக்கினைக் காண முடிகிறது.

2. குருண்டவார் குழல், செடிச்சியர், செதுமதி, நயங்கு, படுதம், அநாயம் போன்ற அருஞ்சொற்களை ஆங்காங்கு வழங்கக் காணலாம்.

3. முரண்படு போக்குடைய புதுச்சொல்லாக்கங்களைப் பல பதிகங்களில் சம்பந்தர் கையாளுவார். 'பிறவினோடு இறவுமானான்' என்று பிறப்பு, இறப்பு ஆகிய இரண்டையும் பிறவு, இறவு எனக் குறிப்பார். விண்ணகத்துத் தேவர்களையும் மண்ணகத்து மாந்தர்களையும் 'விண்களார்', 'மண்களார்' எனக்குறிப்பார் – "விண்களார் தொழும் விளக்கு", "மண் களார் துதித்தன்பரா யின்புறும் வள்ளல்" – (திருக்கடிக்குளம், பண்நட்டராகம்) இச் சொல்லாட்சியின் புதுமை கண்டின்புறத் தக்கது. ஒன்றுதலுக்கு மறுதலையாக அன்றுதல் எனக் கொண்டு 'அன்றிய அமணர்கள்' என்பார்.

4, உண் என்னும் வினையடியாக 'இடுபலி உண்ணி' என்று வினைப்பெயர் உருவாக்குவார். கணையெனும் பொருட் பெயரைக் கணையைத் தொடுத்தான் என்னும் பொருள்பட வினைப்படுத்து 'எயில் மூன்றும் எரியுண்ணக் கணையல் செய் தான்' (திருக்கழுக்குன்றம், பண்: குறிஞ்சி) என்றும் 'நீளுதல்' எனும் பொருளில் 'நீணுதல்' என்றும், நல்லுலகு என்பதை 'நன்னுலகு' என்றும் 'நடுநடுங்கி' என்ற அடுக்கினை 'நடு நடுத்து' என்றும் 'வேள்வியை' 'வேழ்வி' என்று வழக்கொலி மாற்றச் சொல்லாகவும் 'உண்ணுதல்' 'உண்பு' என்று புதிது கிளக்கும் சொல்லாகவும், இவ்வாறு புத்தாக்கச் சொல்லமைவு களை உருவாக்கிக் காட்டுகின்றார்.

5. பேச்சுத் தமிழ் ஒலி மாற்றங்களுக்கேற்ப சில சொற் களைப் பழகு தமிழ்ச் சொற்களாய்க் கையாள்வார். நத்தி — நச்சி, அணைத்து — அணைச்சு, மொய்த்த — மொய்ச்ச என் பவற்றைச் சான்றுகளாகக் கொள்ளலாம்.

6. இலக்கணச் சிறப்பு வழக்குகள்

அ. குற்றியலுகரப் புணர்ச்சி விதிகளை மீறிய சில புணர்ச்சி அமைவுகள் ஓசை கருதிச் சில இடங்களில் பின்பற்றப் பட்டுள்ளன.

''படையது வேந்தி'' (14/18 - 5-ஆம் பாடல்)

''ஆவது வின்னறவ'' (14/7 – 4-ஆம் பாடல்)

ஆ. ஓசை சிதையாமை கருதிப் பெயரெச்சச் சொல் ஈற்றிலும் வலி மிகுதலைக் காண முடிகிறது.

''ஒருக் கையிலே'' (14/14 – 8-ஆம் பாடல்)
இங்கு எண்ணுப் பெயரெச்ச வடிவத்தின்கண் வலி மிகுந்தது.

இ. ஒருமை பன்மை வேறுபாடு கருதாது யாண்டும் அகரம் ஆறாம் வேற்றுமையுருபாகப் பயன்படுத்தப்படுகிறது.

''தக்கன் தன சிரம்'' (14/6 - 4-ஆம் பாடல்)

''பந்தன் தன பாடல்'' (14/6 – 11-ஆம் பாடல்)

''உம தொழு கழல்'' (14/19 – முதற் பாடல்)

''உன வார் கழல்'' (4/1)

''சம்பந்தன சொல்'' (4/1)

ஈ. 'ஒருவன்' என்ற சொல் 'ஒருத்தன்' என்றாகி அதன் மேலும் 'ஆர்' விகுதி பெற்று வரும் புதுமை காணத் தக்கது.

''ஒருத்தனார்'' (3/1)

உ. 'தலைவனார் ... கடவுள் அவன் நல்லனே'
என (4/2 - 4-ஆம் பாடல்) ஒருமை பன்மை மயங்குமாறு அமைந்துள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

ஊ. இரட்டைக் கிளவிச் சொற்கள் 'என' என்ற இணைப்புச் சொற்கள் கொண்டு அமைக்காது.

''சலசல சந்தகில்'' - 12/1 – 5-ஆம் பாடல்

''கலகல நின்றதிரும்''– '' – ''

என்றபடியே அமைக்கும் போக்கு உள்ளது.

எ. இறைவனைப் பெரும்பாலும் உயர்வுப் பன்மையிலே அழைக்கும் போக்குச் சிறப்பு அமைவு எனலாம்.

''ஏறுகந்தீரிடு காட்டெரி யாடி வெண்
ணீறுகந் தீர்நிரை யார்விரி தேன்கொன்றை
நாறுகந் தீர்திரு நல்லூர்ப் பெருமணம்
வேறுகந் தீருமை கூறுகந் தீரே''

(திருநல்லூர்ப் பெருமணம், 5-ஆம் பாடல்)

ஏ. 1. 'தாழும் மனத்தால் உரைத்த தமிழ்கள் இவை வல்லார்'

2. 'தீப மனத்தார்கள்'

3. 'சங்கமலி செந்தமிழ்கள்'

4. 'நல்லார்கள் சேர் புகலி'

'பல்லார்களும் மதிக்கப் பாசுரம்'

5. 'கூறாத நாவெல்லாம் கூறாத நாக்களே'

6. 'உரைப்பனகள்'

7. 'சிறுமிமார்கள்'

8. 'பலர்கள்'

9. 'சோடைகள்' (அன்பில்லாதவர்கள்)

என்று விகுதிமேல் விகுதி பெறும் வழக்கும், 'தமிழைப்' பன்மைப்படுத்தி விகுதி சேர்க்கும் புது வழக்கும் சம்பந்தர் தம் சொல்லாக்கத் தனி இலக்கிய நெறியாகத் திகழ்கிறது.

அடைகள்

இறைவனின் பண்பு வடிவ விளக்கங்களை மிகுதியாகக் காட்டும் ஞானசம்பந்தர் அடைகொளி கொண்டதும், அடைகொளியற்றதுமாய அடைகள் பலவற்றை இறைவனுக்கு அமைத்து மொழிகின்றார். தம்மைப் பற்றியும், தமிழைப் பற்றியும் கூறுமிடங்களில் எல்லாம் அடைகள் இல்லாது வழங்குவதில்லை.

'பழியா மறை ஞான சம்பந்தன்'

'நல்ல ஞான சம்பந்தன்'

'நலமார் தமிழ்'

'பண்ணிய அருந்தமிழ்'

என்று அடைகொளி மிகு அடைகளுக்குச் சான்றுகளாய் அமைகின்றன.

'காழியர் கோன்', 'நண்ணிய நூலன்' என்று அடை கொளியின்றி அடையடுக்கும் பெயர்களையும் காணலாம். இறைவன் பற்றிய அடைகள் எல்லாப் பதிகங்களிலும் காணப் படுதல் கருதத் தக்கது.

தொடர் அமைவுகள்

ஒரு பாடலுக்கு ஒரு தொடர் எனத் தொடர்களை அமைப்பதில் சம்பந்தர்க்கு ஆர்வம் மிகுதி. குளகமாக அமையும் பாடல்களைக் காணுமாறில்லை. கதை நிகழ்வுகளாகத் தொடர்ந்து கூறும் இயல்பிற்கு இங்கு இடமில்லாதது இதற்கான காரணமாகலாம்.

விளிகளை அடுக்குதல்

"நீரார்ந்த செஞ்சடையீர் நிரையார் கழர்சேர் பாதத்தீர்
ஊரார்ந்த சில்பலியீர் உழைமானுரி தோலாடையீர்"

(திருப்பிரமபுரம் பதிகம்-13. 2)

வினையாலணையும் பெயர் அடுக்குகள் ஏனை அடுக்கு களிலும் மிக்குக் காணப்படுகின்றன. 'பரசு பாணியர்' எனத் தொடங்கும் பல்லவனீச்சுரம் பற்றிய பதிகத்தின் முதற் பத்துப் பாடல்களும் இவ்வாறமைகின்றன.

"**பவள மேனியர் திகழு நீற்றினர் பட்டினத்துறை பல்லவனீச்சரத்**
தழக ராயிருப் பாரிவர் தன்னை யறி வாரார்"

குறிப்பு வினைமுற்று அடுக்குச் சான்றாகப்

"**படையினார் வெண்மழுப் பாய்ப்புலித் தோலரை**

உடையினா ருமையொரு கூறனா ரூர்வதோர்
விடையினார் வெண்பொடிப் பூசியார் விரிபுனல்
சடையினார் உறைவிடம் சக்கரப் பள்ளியே''
(திருச்சக்கரப் பள்ளிப் பதிகம்)

என்ற திருப்பாடலைக் காட்டலாம்.

பெயர் அடுக்குகள்:

ஓரினப் பெயர்களை ஒருங்கடுக்கிக் கூறும் நெறிமுறையையும் பொருளழகு கருதிச் சம்பந்தர் கையாளுவார்.

''இப்பியும் முத்தும் மணியும் சங்கும்''

''நில நீரொடு தீ வளி காயமென''

''கோங்கிள வேங்கையும் கொழுமலர்ப் புன்னையும்
தாங்குதேன் கொன்றையும் தகுமலர்க் குரவமும்''

என அடை கொடுத்து அடுக்கலும் உண்டு.

இறை இயல்புகளையும், உருவ அமைப்புகளையும், இயற்கையழகுப் புனைவுகளையும் விரித்துக் கூற இம்முறை கையாளப் பெறுவது சம்பந்தர்தம் இலக்கிய நெறியின் தனிச் சிறப்பினைக் காட்டும்.

தொடைகள்:

செந்தமிழ் இசைப் பாடல்கள் வல்ல ஞானசம்பந்தர் தொடையழகு பெறப் பாப்புனைகையில் பெரிதும் அடியெதுகைகளை மிகச் செம்மையாக அமைத்துள்ள திறம் சுவைத்தின்புறத் தக்கதாம்.

'மை சேர், மெய் சேர்'

'மெய்வரை ஐவரை'

என வரும் போக்குகளைக் காணின் அவர் காலத்தில் 'ஐ என்ற எழுத்து 'அய்' என்றே ஒலிக்கப் பெற்றிருக்க வேண்டுமெனக் கருத இடம் ஏற்படுகிறது.

பொதுவாக இடையின எழுத்தும் மெல்லின எழுத்தும் எதுகைகளாவதில்லை. இதற்கு மாறாகத் திருக்கழிப்பாலை முதற் பதிகத்தின் ஒன்பதாம் பாடல்,

> **''நல நாரண னான்முக னண்ணலுற்க**
> **கன லானவ னேகழிப் பாலையுளாய்''**

என வருவது ஆய்தற்குரியது.

ஈரடிமேல் வைப்பு, நாலடிமேல் வைப்பு என்ற யாப்பில் முன்னடிகள் ஒரெதுகையும், மேல்வைப்படிகள் வேறு எதுகையும் கொண்டமைதலைக் காண்கையில், இவ்விரு விகற்ப அமைவே இவற்றை மேல்வைப்புப் பாடல்கள் எனக் கோடற்கு ஒரு காரணமாக அமைகிறது எனலாம்.

வழிமோனைகள் பரவலாகவே பயன்படுத்தப்படுகின்றன. நீட்சியும் மிடுக்கும் முடுகியலும் சான்ற ஓசைவகைகள் மோனைகளைப் புறக்கணித்தலுக்கும் காரணமாகலாம்.

கூற்றுவழி வெளியிடு நெறிகள்

பொருண்மை அமைவில் சம்பந்தர் பக்தி உணர்வினை வெளிக்காட்டச் சில நெறிகளைப் பயன்படுத்துவார். நிகழ்வுகளைச் சுட்டலினும் மனமுருகி இசைத்து நிற்கும் இயல் இசைப் பா நிலையில் இறைவனை வழுத்தி, இரங்கி, ஏங்கி யாசித்து, உருகிக் கரைதலே முதன்மைப் போக்கு. எனவே

1. இறைவனை வாழ்த்தி நிற்றல்
2. நெஞ்சிற்குக் கூறுதல்
3. உலகோர்க்கு உரைத்தல்
4. உபதேசம் செய்தல்
5. வினா உரையாக அமைத்தல்
6. இறைவனை நோக்கிக் கூறல்
7. தலங்களை முறைப்படுத்திப் பட்டியலிட்டுக் கூறல்
8. தலங்களை முதன்மைப்படுத்திச் சிறப்புக்களை அடுக்குதல்
9. உடன்படு நெறியில் இறைவன் சிறப்பினை அடுக்குதல்

10. எதிர்மறைப் போக்கில் வழுத்தாதார் பெறும் இடர் களைச் சுட்டல்
11. பூம்பாவையை முன்னிறுத்திப் பாடுதல்
12. மங்கையர்க்கரசியை விளித்துப் பரிவுடன் பாடுதல்
13. வழிபடு நெறிமுறைகளை வலியுறுத்திப் பேசல்
14. பொதுநிலையில் அஞ்செழுத்து உண்மை' உலகம் வாழ வேண்டுதல் போன்ற படர்க்கைப் பரவல் முறையில் பதிகங்களை அமைத்தல்.

எனப் பல்வேறு கூற்றமைவுகள் சம்பந்தர்தம் உணர்வு வெளி யீட்டுப் பாங்கு நெறிகளுக்குரிய அமைப்பு வகைகளாகின்றன. இவை பற்றிய சான்றாதாரங்களைக் காட்டி விளக்குதற்கான முறைமை இடச் சுருக்கம் கருதி மேற்கொள்ளப் பெறவில்லை. நோக்கு நிலையில் சம்பந்தர் தம் கருத்து வெளியீட்டுப் பாங்கு அமைப்புகளில் ஒருசார் போக்குகள் தவிர்க்கப் பெற்றுப் பல்வேறு உணர்வு நிலைகளில் இறையருள் பெறுதற்கான அருள்நெறிமுறைகள் வகைப்படுத்தப்பட்டுள்ள நெறியாக்கத் திறன் வியப்பூட்டுகின்றது என்ற அளவில் அமைதல் பொருந்தும்.

புனைவு நெறிமுறைகள்

அணிப் புனைவுகளும் வருணனைப் புனைவுகளும் பண்ணியல் ஞானசம்பந்தப் பக்திப் பனுவல்களுக்கு அழகு மிக ஊட்டுகின்றன. மிகுதியும் உவமையணிகளைப் பொருந்தப் பயின்றுள்ள சம்பந்தர் உருவக அமைவுகளுக்கும் உயர்வு நவிற்சிக்கும் ஆங்காங்கு இடம் தருவார்.

சிவனை வருணிக்கும் இடங்களிலும் உமையம்மையின் தோற்ற அழகினைப் புனைந்துரைக்கும் இடங்களிலும் அணி நலம் ததும்பப்பாடும் முருகியல் நெறிமுறை காணத் தக்க தாம். இளமையின் பார்வையில் உலகே அழகுமயமாய்க் காணப்படுவதில் வியப்பில்லை. இறைக் காட்சி இன்ப அழகுக் காட்சியாய்ப் பரிணமிக்கின்றது. பார்க்கும் இடமெல்லாம் இறைமையின் பொலிவுகள் இயற்கைக் கூறுகளாய் இயைந்து

நிற்கின்றன. இயற்கை ஒலிகள் அவர்க்கு இறை ஒலிகளாகவே கேட்கின்றன. வறட்சியற்ற வளமார் சூழலில் இறையுணர்வு நிறைவு பெற்றிலங்கும். பொன்னி வளந்தரு பூம்புனல் நாடும் வைகை பாயும் பாண்டித் திருநாடும் என இவர் சென்ற திரு நாடுகளில் எல்லாம் இயற்கை திருவீற்றிருக்கும் எழிலார் காட்சி களுக்குக் குறைவில்லை. எனவே குழந்தைமை வியப்புமன், இறைப்படைப்பின் அழகுகளை எல்லாம் இறைமை அழகு களாகவே கண்டு பாராட்டுகின்றார். சம்பந்தர் பாடல்களில் வழிபாட்டுணர்வும், இறைவனின் அருள்திறமும், அவன் வடிவக் கோலச் சிறப்புகளுமே மையப்படுத்துள்ளமை குறிக்கத் தக்கது. ஆகவே இறையருள் பெற விழையும் அடியார் உள்ளம் அங்கிங்கெனாதபடி எங்கும் பரந்திருக்கும் அமைதி மயமான இயற்கைச் சூழல்களில் இன்ப அன்புநிறை இறைத்தத்து வத்தைக் காணமுடியும் என்பதே சம்பந்தர் உள்ளக்கிடக்கை யாகிறது.

இப்பின்னணியில் அணியழகுமிகு இடங்களையும் வண்ணனைப் போக்கில் அமைந்த இயற்கை நலங்களையும் சில சான்றுகளில் எடுத்துக்காட்டிவிட முடியும்.

செம்மேனி அம்மானின் தோற்றத்தில் பெரிதும் ஈடுபட்டுப் பரவசமுற்றுப் பாடும் இடங்களில் இயல்பாய் உவமைகள் அமைந்து விடுகின்றன. ''ஆகம் கலந்து ஒருவர் பாகம் பிரியா'' நாயகியின் புனிதப் பேரழகுத் திறத்தினையும் தக்க உவமைகளில் பெறவைப்பார்.

> **''குழுவும் தழலும் எழில் வானும் போலும்**
> **வடிவுடையான்''**
>
> **''அத்தர் வண்ணம் அழலும் அழல் வண்ணமே''**
>
> **''பொன்போலுஞ் சடைமேல் புனல்தாங் கினனே''**

என்று இறைவனையும்,

> **''பந்துசேர் விரலாள் பவளத்துவர் வாயினாள்**
> **பனி மாமதி பொன் முகத்து**
> **அந்தமிழ் புகழாள்',**

"கரும்பொடு படுஞ்சொல் மடந்தை"

"சிங்க அரை மங்கை"

என்பன போன்ற அழகுமிகு உவமைகளால் இறைவியையும் புனைந்தழகு ஊட்டுவார்.

இயற்கை வண்ணனைகளில் மயக்க அணி தோன்றப் பாடும் இடங்கள் பல.

"ஏழை வெண்குருகு அயலே இளம்பெடை தனதெனக் கருதித்
தாழை வெண் மடற் புல்கு தண் மறைக்காடு"

என்பது சுவைத்தின்புறத் தக்கது.

"தென்றலார் அடிவருடச் செழுங்கரும்பு கண்வளரும் திருவையாறே"

"தண்டார் குவளைக் கள்ளருந்தித் தாமரைத்
தாதின்மேற் பண்தாள் கொண்டு வண்டு பாடுஞ்
செண்பை"

என்பன போன்ற அழகார் இயற்கைப் புனைவுகள் மிகப் பலவாகக் காணக் கிடைத்தல் வண்ணனைத் திறமிகு ஞான சம்பந்தர்தம் அழகியல் கோட்பாட்டுத் திறங்காட்டும்.

சொல்லாலும் தொடராலும் கற்பனையூட்டம் ததும்பச் செறிவுடன் தமிழ்மாலை தொடுப்பதில் வல்லவர் சம்பந்தர்.

'மதியம் அயலே ததும்ப'

'கந்த நின் றுலவும்'

'வினை மாயும்'

'முற்றா வெண்டிங்கள்'

'மாட நெற்றி'

இவ்வெடுத்துக் காட்டுக்களில் ஒரு வினையோ பெயரோ நின்று உருவக அமைப்பினை எடுத்துக்காட்டும் திறன் நோக்கத்தக்கது. இத்தகைய குறிப்புருவகங்கள் சம்பந்தரின் சொற் சிக்கனத்தையும் செறிவையும் படைப்புச் செய்நேர்த்தியையும் காட்டவல்லன. ஒரு சொல்லிலேயே கற்பனை அழகு நிறைவு பெற்று விடுகிறது.

பெண்கள் விழியழகினை 'மானலம் மடநோக்கு', 'காவி னேர்விழி மாதர்' என்று உவமப் புனைவுகளால் சுட்டுவது மிக்குக் காணப்படுகின்றன.

திருப்பிரமபுரம் 24-ஆம் பதிகத்தில் 11 பாடல்களிலும் முதலிரண்டடிகளில் உமையம்மையின் அழகுத் திருக்கோல வண்ணனை இடம் பெற்றிருப்பது சிறப்பாகக் குறிக்கத் தக்கது.

"வானிடை வாண்மதி மாடந் தீண்ட" என்பது போன்ற உயர்வு நவிற்சி வண்ணனைப் போக்கு அருகியே காணப்படு கிறது.

"திரைக ளெல்லாம் மலருஞ் சுமந்து
செழுமணி முத்தொடு பொன்வரன்றிக்
கரைகளெல்லா மணி சேர்ந் துரிஞ்சிக்
காவிரி கால்பொரு காட்டுப் பள்ளி

என்ற கீழைத் திருக்காட்டுப் பள்ளித் திருப்பதிகப் பாட்டின் இயற்கை வண்ணனை கற்பனை நலஞ் செறியச் சுவை பயக் கின்றது. இத்தகைய வண்ணனைப் பகுதிகள் மிகப் பலவாக இத்திருப்பாடல்களில் நிறைந்து காணப்படல் தனிச் சிறப் பாகும்.

சொற்பொருள் மேல் கரந்து குறியிடு பொருளாய் நுண்ணிதின் உணரத் தக்க குறிப்புப் பொருள் உத்தியினை இயற்கை வண்ணனையில் வைத்துக் காட்டுவார் சம்பந்தர். சங்கத் தமிழ்ப் பாடல்களின் சிறப்புநிலைக் கூறாகிய உள்ளுறை. இறைச்சித் திறன்கள் பக்திப் பாடல்களிலும் தொடர்ந்து இடம்பெறும் அருமைப்பாட்டினை உணர முடிகின்றது.

"கொங்காளப் பொழினுழைந்து
கூர்வாயா லிறகுலர்த்திக் கூதனீங்கிச்
செங்கால் வெண்குருகு பைங்கான லிரை தேடுந்
திருவையாறே"

என்பார் ஆளுடைப் பிள்ளை. வெண்குருகு நனைந்த சிறகினை உலர்த்திக் கூதல் நீங்க, மருதப் பொழிலில் நுழைந்து துன்பந் தீர்கின்றது. ஆயின் மறுபடி இரை தேடலுக்கு நெய்தற் கானலஞ் சோலையினையே நாடுகின்றது. உயிரின் இயற்கை யும் அதுதான். மெய்ம்மையினை நாடித் துன்பந் துடைத்தருள வேண்டுமென ஓடி வரும் உயிர், நன்மையடைந்தவுடன், மறுபடியும் பாசச் சுழலில் பற்றுக்களைத் தேடித்தானே நுழைகின்றது. திருவையாற்றுத் திருப்பதிகம் முழுவதும், இவ்வண்ணம் இறையும் இயற்கையும் இணைந்து குறிப்புப் பொருண்மை அமைய விளங்குவது குறிப்பிடத்தக்கதாம். அன்றியும் இதயத்தை இறையோடு இசைவிக்கும் இசையும், கண்ணில் பட்டுக் கருத்தினை நிறைவிக்கும் இயற்கையழகும், உயிர்களின் கலக்கத்தினைப் போக்கி ஆன்ம விளக்கம் பெறத் துணை நிற்கும் புறச்சூழல்களாகும் என்பதனை மனத்திற் கொண்டவராய்த் தாம் பெற்ற இறை இன்ப அனுபவங்களைப் புனைந்து பாடி மகிழ்வார் சம்பந்தர்.

இனி "துன்னிய இசையால் துதைந்து சொல்லிய" ஞான சம்பந்தரின் இன்னிசைப் பாடல்களில் அவரின் தனி ஆளுமைத் திறம் பெற வெளிப்படுத்தும் சிறப்பு இலக்கிய நெறிமுறைகள் எனச் சுட்டிக்காட்டத் தகும் போக்குகள் சிலவற்றையும் குறிக்கலாம்.

1. சம்பந்தர் பாடல்களில் பெரும்பகுதி 'ஏ' என்றே முடிவு பெறுகின்றன. விதிவிலக்காக அமையும் பாடல்கள் மிகச் சிலவே. தலமுறைப் பதிகங்களில், 10/2-ஆம் முதற் பத்துப் பாடல்கள் 'ஆர்' என்று முடிகின்றன. கோயிற் பற்றிய இரண்டாம் பதிகத்தின் இரண்டாம் பாடலும், காவிரியின் தென்கரையிலுள்ள 87-ஆம் தலத்தின் ஐந்தாம் பதிகத்தில் 1, 3, 4, 5, 7, 8, 9, 10-ஆம் பாடல்களும், திருவாலவாய் பற்றிய 8-ஆம் பதிகத்தின் 8-ஆம் பாடலும் "ஓ" என முடி கின்றன. இவற்றின் தொகை 10. "ஆ" என முடிவன காவிரித் தென்கரை 63-ஆம் தலத்தின் 13-ஆம் பதிகத்தில் 2, 9, 10 ஆகிய மூன்று பாடல்கள். திருநனிபள்ளிப் பதிகத்தில் முதற்

பத்துப் பாடல்கள் "காள்" என முடிகின்றன. திருப்புறம்பயத் தலப் பதிகத்தின் 1, 2, 3, 4, 6, 7, 8, 9 என வரும் 8 பாடல் களும் "தோய்" என இறுவன.

நான்காயிரத்திற்கும் மேற்பட்ட திருப்பாடல்களில் மேற் கூறப்பட்ட 41 பாடல்கள் மட்டுமே ஏகாரம் கொண்டு முடியாதவை. எனவே ஏறக்குறைய 99 விழுக்காடு பாடல்கள் 'ஏ' என்றே இறுகின்றன. ஆகவே ஒரு பாடலில் முடிவைத் தெரிவிக்கும் உத்தியாக ஏகாரத்தைப் பயன்படுத்துகிறார் சம்பந்தர் எனல் தகும். அன்றியும் இசையமைவு வழி பண்ணி சைத்துப் பாடுங்கால் இழுத்து இசைத்து நிலைநிறுத்த இந்த முறை இயைபுடையதாய் இருக்கலாம் எனக் கொள்ளவும் இடமுண்டு.

2. திரும்ப வருவது, திரும்பல். "திரும்பற்கூறுகள் படைப் பாளனின் விருப்ப நடைக் கூறுகளை இனங்காட்டிப் படைப் பிற்கு மேலும் சிறப்புப் பெற்றுத் தரும்." என்பார் சேப்மன். இத்திரும்பற் கூறுகள் சம்பந்தர் தேவாரத்தில் பல நிலைகளில் வெளிப்பட்டு அவர்க்கே உரிய தனி இலக்கிய நெறியாக அமையக் காணலாம்.

அ. ஒரு பதிகத்திலுள்ள எல்லாப் பாடல்களிலுமே அப் பதிகத்தால் பாடப்பெறும் தலத்தின் பெயர் தவறாது குறிக்கப் பெறும்.

ஆ. பெரும்பாலான பதிகங்களின் முதற் பத்துப் பாடல் கள் குறிப்பிடத்தக்க திரும்பல்களைப் பெற்று அமைகின்றன குறிப்பாகச் சம்பந்தர் பதிகப் பாடல்களின் முடிவுகள் ஒத்து அமைவன பெரும்பான்மைய.

1. ஒரு பதிகத்திலுள்ள எல்லாப் பாடல்களுமே ஒரே முடிவு பெறுதலை இவண் சுட்டல் தகும். திருநெல்வாயில் தலப் பதிகத்தின் முதற் பத்துப் பாடல்களுமே "உச்சியாரே" என்ற சொல்லால் இறுகின்றன.

திருப்பிரமபுரம் 18, 20, 21, 24-ஆம் தலமுறைப் பதிகங்கள் முறையே,

"வெங்குரு மேவியுள் வீற்றிருந்தாரே"

"தோணி புரமாமே"

"தோணி புரந் தானே"

"பூந்தராய் போற்றுதுமே"

எனப் பாடல் தோறும் தொடர் அமைவுத் திரும்பல்கள் ஒரு நிலைத்தாய் முடிதல் குறிக்கத்தகும். பரவலாக இம்முறை சம்பந்தரால் பெரும்பாலான பதிகங்களில் பின்பற்றப் படுகின்றது.

2. பாடல்தோறும் முதலடி இறுதி மட்டும் ஒரே தொடராக வருதலும் உண்டு. 'பரசு பாணியர்' எனத் தொடங்கும் பதிகம் பாடல் தோறும் முதலடி இறுதியாக "பட்டினத் துறை பல்லவனீச்சரத்து" என்று அமைவதோடு பாடல் முடிப்பிடம் தோறும் "இவர் தன்மை யறிவாரார்" என்று ஒருநிலைக் கூற்று அமைவும் காணப்பெறுவது தனித்தன்மை கொண்டதாகும்.

3. திருக்குருகாவூர் வெள்ளடைத் தலப் பதிகத்தில் பாடல் தோறும் மூன்றாமடி "வெள்ளடை மேவிய" என்றே அமையும்

4. பாடல்தோறும் இரண்டாமடி ஈறாகப் "பூந்தராய்" என்பதையும், மூன்றாமடி ஈறாகச் "சொலீர்" என்பதையும் திருப்பிரமபுரம் 23-ஆம் பதிகம் பெற்றுள்ளது.

5. இரண்டாமடி இறுதியாக 'ஊர்' என்பதையும் ஈற்றடி இறுதியாக "வேணுபுர மதுவே" என்பதையும் கொள்ளும் பாடல்களைப் பெற்ற திருப்பிரமபுரம் 6-ஆம் பதிகமும், இதுபோன்றே

6. 'நித்தலும் நியமம்'

'துளிமண் டியுண்டு'

'அடையார் தம்புரங்கள்'

எனத் தொடங்கும் பதிகங்கள், திருப்பிரமபுரம் பற்றிய 1, 8, 9, 14, 17-ஆம் பதிகங்கள் முதலியனவும் 2, 4-ஆம் அடியீறுகள் ஒத்தமைந்த பாடல்களைக் கொண்டுள்ளன.

7. மூன்றாம், நான்காமடி ஈறுகள் பாடல்தோறும் திரும்பத்திரும்பவரும் பதிகங்களும் சம்பந்தர் தேவாரத்தில் உள. திருப்பிரமபுரம் 2, 3, 13, 16 திருவெண்காடு 3.

8. ஒருபொருளே தரும் வெவ்வேறு சொற்களை ஈற்றில் நிறுத்தும் அமைப்பு முறையில் திருப்பிரமபுரம் 5-ஆம் பதிகத்தில் பேணுமினே, முன்னுமினே, ஏத்துமினே என்று வரும் நெறியினைக் காணலாம்.

ஒரு பதிகத்தின் எல்லாப் பாடல்களிலும் குறிப்பிட்ட தலப் பெயரேயன்றிக் குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட சொற்களும் தொடர்களும் திரும்பத் திரும்ப வந்தமையும் பாங்கு சம்பந்தர் தேவாரத் தனி இலக்கிய நெறியாகிறது.

3. எண்வரிசைப்படுத்திக் கருத்துக்களை வெளியிடும் பாங்கில் சம்பந்தர் கொண்ட ஈடுபாட்டினைப் பல பாடல்கள் எடுத்துக் காட்டும்.

> **"மேவி லொன்றர்விரி வுற்ற இரண்டினர் மூன்றுமாய்**
> **நாவின் நாலர் உட லஞ்சினர் ஆறர்ஏ ழோசையர்**
> **தேவில் எட்டர் திரு வாஞ்சிய மேவிய செல்வனார்**
> **பாவந் தீர்ப்பர் பழி போக்குவர் தம் அடி யார்கட்கே"**
> **(திருவாஞ்சியம் – 2 - ஆம் திருமுறை)**

என்று எட்டு வரை எண்ணிப் பாடும் திறம் காணலாம். முதல் திருமுறை திருவீழிமிழலைத் திருப்பதிகத்திலும் "ஈறாய் முதல் ஒன்றாய்" எனத் தொடங்கும் பாடல் 'எட்டுத் திசை தானாய் வேறாய் உடன் ஆனான்' என்று முடிதலும் காணத் தக்கது.

4. பொருண்மை நோக்கில் சம்பந்தர் புராண வழக்காறுகளையும், முருகன், கணபதிக் கடவுளரின் மாண்புகளையும் அர்ச்சுனன், அனுமன் போன்றார் சிறப்புக்களையும், தம் காலத்து வாழ்ந்த குலச்சிறையார், திருநீலநக்கர், தில்லைவாழ் அந்தணர், மங்கையர்க்கரசியார் போன்ற திருத்தொண்டர், தமக்குமுன் வாழ்ந்த கண்ணப்பர், சண்டேசுவரர், நமிநந்தி

அடிகள் முதலாம் அருந்தொண்டர் ஆகியோர்தம் சிவம் பெருக்கும் திருத்தொண்டின் நலங்களையும் வாய்ப்பு நேருமிடங் களில் பாராட்டித் தொண்டர்சீர் பரவும் தம் அன்பார் பண் பினை வெளிப்படுத்திக் காட்டும் போக்குகளையும், இவண் தனித்த வெளியீட்டுக் கூறுகளாகக் கொள்ளலாம்.

5 சம்பந்தர்தம் திருநெறிய தமிழ், தமிழ்ச் சங்க அகப்பண் பாட்டு வழியதான அகப்பாட்டு நெறியினையும் உள்ளடக்கிய திறன் போற்றற் பாலதாம். மானிடக் காதற் காமத்தினைக் கடவுட்காமமாய் செந்நெறிப் படுத்திய புதுமைப் போக்கினைச் சம்பந்தரிடம் காண்கிறோம். ‘‘ஒளியாம் பரமும், உளதாம் பரமும் அளியார் சிவகாமி யாகும் தருணம்’’ என்பார் திரு மூலர். சிவனைக் காமிக்கும் சிவகாமியராய்ப் பெண்மை நலன் அவாவி நிற்கும் காதற் காட்சி இறையன்பில் திளைக்கும் இன்பக் காட்சியாம். தன்னை அவனில் இழந்து கரைந்து ஒன்றிக் கலக்கும் இயல்பு பெண்மைக்குரியது. ‘பிரேமத்தில் பெண் பேச்சு’ என்பது ஆழ்வார்கள் காட்டும் அகநெறி. பெண்ணாந்தன்மை அவாவி அதனை ஏறட்டுக் கொண்டு ‘இறைவனைச் சேர உள்ளங் கவர் கள்வனிடம்’ தன் அன்பினை வெளிப்படுத்தி ஒன்று கலக்கத் துடிக்கும் இறைமைக் காதல் துடிப்புகளைத் தனிநிலை நெறியாய்ச் சம்பந்தர் கடைப் பிடித்துப் பக்தி இலக்கியத் துறையில் ‘நாயகன் நாயகி பாவம்’ என்ற அகப்பொருண்மைக் கோட்பாட்டினை உருவாக்க அடி யெடுத்துதவியுள்ளார்.

1. தலைவன் வந்து நலம் கொண்ட பாங்கினை,
‘‘எண்ணார் வந்தென் எழில் கொண்டார்’’
‘‘நாதர் வந்தென் நலம் கொண்டார்’’
‘‘வந்தென் நலம் வெளவினார்’’

எனத் தலைவி கூற்றில் வைத்துப் புலம்பக் காணலாம்.

2. திருவடியைக் கூடிக் களிப்பெய்த, தூதுவிடும் தலைவி யின் தூய காதல் உணர்வினைத் திருப்பாடல்கள் சில செப்பும்.

தலைவன் திருப்பெயரைச் செப்புதல், தன்னிடம் ஒரு முறை வந்து போமாறு அழைத்தல், தன் நிலையினை உணர்த்தி அவனுக்குத் தன் நினைவினைத் தோற்றுவித்தல் என்றபடியாக அமைந்துள்ள திருத்தோணிபுரம் (முதல் திருமுறை) பழந்தக்கராகப் பண்ணில் அமைந்த திருப்பாடல்கள் படித்தின்புறத் தக்கன. அளி, குருகு, வாரணம், நாரை, கபோதம், அன்னம், அன்றில், பூவை என இவற்றைத் தூது விடுத்து மடக்கிளியினை நோக்கி, "துறையாரும் கடல் தோணிபுரத்தீசன், துளங்கும் இளம் பிறையாளன்" என வாய் வெருவி இருமுறை திருநாமத்தினை வாயால் வழுத்திக் கூறி. மூன்றாம் முறை கிளியின் வாயால் 'திருநாமம் எனக்கொரு கால் பேசாயே' எனக் கேட்டின்புற விழையும் தலைவியின் காதற்கிழமை மகிழ்ந்திடும் வண்ணம் அமைகின்றது. இத் திருப்பாட்டில் வழக்கமான இராவணன், மாலயன், சமண் பூசல் என்ற நெறிமுறைமை அமையாது, ஆன்மக் காதலின் உணர்வுக் கூறுகளே தன் அனுபவமாக வெளியிடப்படும் நயத்தக்க நாகரிக நெறி எண்ணி இன்புறத்தக்கதாம்.

அறத்தொடு நிற்றல் துறையில் அமைந்த திருக்கானூர்த் திருப்பதிகம் 'மால் செய்து உள்ளம்' புகுந்து வெந்நோய் செய்த திறங்கூறி அவனைக் கூடுதற்கான அவாவினை வெளிப் படுத்தி நிற்கிறது.

பெரும்பாலான அகப்பாடல்கள் எல்லாம் தலைவி கூற்றாகவே அமைவன. தமிழ் அகநெறி வந்த இக் காதல் திருப்பாட்டுக்கள் சம்பந்தர் பண்டைத் தமிழ் மரபின் அடிப் படையில் தெய்வஞ்சார் புதுஅகமரபாக்கம் உருவாக்கிய புதுமைப்பாங்கிற்குச் சான்றுகளாய் அமைந்து சிறக்கின்றன.

விதிகளுக்குக் கட்டுப்பட்டு இலக்கியங்கள் பிறக்கலாம். ஆனால் விதிகளுக்காகவே இலக்கியங்கள் இல்லை. இன்னொரு குறிப்பினையும் நினைத்துப் பார்க்க வேண்டும். சில சமயங் களில் விதிகளை வகுப்பதும் இலக்கியப்பணிகளில் ஒன்றா கின்றது. இப்படித் தொடர்வதுதான் இலக்கிய மரபு காதல் நீர்மைபடப் பாடினும், கடவுட் பக்தி நீர்மை ததும்பப் பாடி

னும், அடிப்படையாகப் பாவலன் படைப்புத் திறனில் வெளிப் படுவது அவனுக்கே உரிய இலக்கிய வெளிப்பாட்டு நெறிகளே. ஞானசம்பந்தப் பெருமான் உள்ளத்து நற்றமிழை வித்தி, கற்ற மொழியாகிக் கலந்து, "அன்று என்னைத் தன்னாக்கி, என்னால் தன்னை இன்றமிழ் பாடிய ஈசன்" என்று ஆழ்வார் கூறுமாப்போலே அத்துவித ஞானானுபவப் பெருக்கில் திளைத் தின்புறச் செய்ததன் விளைவாய் அவர் பாடிய பண்ணும் தமிழும் பயனுமாய ஞானத்திருப்பாட்டுக்களை வெளிப்படுத்த பல்வேறு நெறிமுறைகளைப் பின்பற்றிய பாங்கு பகுப்பாய்வு அமைவில் தொகுத்துரைக்கப் பெற்றது. பாடல்நெறி தமிழ் மரபு வழிப்பட்டது. சம்பந்தர் நெறி மரபு வழிப் புதுத் தடங் கண்டு புதுமைநெறியாம் புரட்சி நெறியாம், பொருளார்ந்த இலக்கிய மரபுகளைத் தோற்றுவித்த மூலப் படைப்பாக்க நெறியாம் என்ற அளவில் **திருஞானசம்பந்தர் தம் திருப் பாடல்களில்** காணலாகும் இலக்கிய **நெறிகள்** பற்றிய வகை தொகை **அமைவியல்** ஆய்வு **நிறைவு அடை**கிறது.

அடிக்குறிப்புகள்

1. தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், 'பிறந்தது எப்படியோ' பாட்டின் *நற்செய்தி*, ப. 85.
2. தொல்., உரியியல், நூற்பா.
3. கார்த்திகேசு சிவத்தம்பி, "*தமிழிலக்கியத்தில் மதமும் மானுடமும்*" (இலக்கிய வரலாற்றாய்வு), ப. 22.
4. பதிற்றுப்பத்து, ஔவை துரைசாமிப்பிள்ளை உரை, ப. 6.
5. டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை, *தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்*, ப. 101.
6. கரைக்காலம்மையார், திருஆலங்காட்டு மூத்த திருப் பதிகங்கள், பண் நட்டபாடை, பாடல் 11.
7. மேலது (2) பண் இந்தளம், பாடல் 11.

8. பன்னிரு திருமுறைத் தெளிவு, திருஞானசம்பந்தர் திருமுறைகள், "**திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகங்களின் பண்கள்**", குடந்தை திரு.ப. சுந்தரேசன், ப.142.

9. இப் பகுப்பு நெறி, சொ. சிங்காரவேலன், "திருஞான சம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும்" என்ற நூலில் அமைத்ததாகும்.

பதிக எண்கள்

பிரிவு (1) தி.ச.தே. *36, 37, 131, 132, 133, 297* முதலியன

" (2) *127, 325* முதலியன

" (3) *128*

" (4) *5, 6, 9, 18, 53, 106, 113, 291, 294, 329, 331, 382* முதலியன

10. பெரிய புராணம், திருஞானசம்பந்த நாயனார் புராணம், பா. எண். *77, 78, 79.*

11. டாக்டர் வேலுப்பிள்ளை, முன்னூல், ப. *107.*

12. தி.ச.தே. — *39, 45, 57, 78, 90, 117, 127, 138, 142. 156, 204, 209, 210, 253, 316, 330, 368.*

13. சொ. சிங்கார வேலன், முன்னூல், ப. *74.*

14. மேலது, ப. *80.*

15. க. வெள்ளைவாரணன், **பன்னிரு திருமுறை வரலாறு** (முதல் ஏழு திருமுறைகள்), ப. 452.

16. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, **சைவ இலக்கிய வரலாறு**, பக். 94, 95.

17. இவ் யாப்பு ஆய்வு முடிவுகள் காண்பதற்குத் துணை நின்று சம்பந்தர் பாடல்கள் அனைத்தையும் தல முறைப் பதிப்பு வழி ஓசை, சீர் பிரித்துப் பட்டியலிட்டுத் தந்தவர் என்னிடம் பிஎச்.டி. ஆய்வு நிகழ்த்தி

அண்மையில் 'சிந்தாமணியின் வடிவும் நடையும்' என்ற ஆய்வேட்டை அளித்துள்ள திரு. கா. கோ வேங்கடராமன் ஆவார். நன்றியுடன் அவர் உதவி யினை இங்கு நினைவு கூர்ந்து மகிழ்கின்றேன்.

18. K.V. Dakshayani, A Critical study of Metre in Kamba Ramayanam, PP. 247—251. (unpublished ph. D Thesis)

19. கா.கோ. வேங்கடராமன், சிந்தாமணி வடிவும் நடையும், ப.386.

20. பெரிய புராணம், தி.ஞா. புராணம்—277. (unpublished ph.D Thesis)

21. Harry Shaw, Dictionary of Literary Terms, P.14.

22. A Chapman, Linguistics and Literature PP. 102-103.

2. சமுதாய நோக்கம்

ஞானசம்பந்தரின் பக்தி அனுபவ வெளிப்பாடுகளை இலக்கியப் பார்வையில் காணுகின்ற வழிமுறையில் அவர்தம் பாடுநெறிக் கூறுகளை வகைப்படுத்தும் ஆய்வு முதலில் மேற்கொள்ளப்பெற்றது. அதன்வழி, ஞானசம்பந்தரின் படைப் பாக்கத் திறன்கள் முறைப்படுத்தப்பட்டுத் தமிழ் இலக்கிய வகைமை வளர்ச்சியில் பக்தி இலக்கிய நெறிமுறைகளைக் காண்பதற்கான வாய்ப்பு அமைந்தது. சம்பந்தரின் பாடுநெறி வெளியீட்டுப் பாங்கு அமைவில் அவர்தம் இலக்கியப் புலமை நலன்களையும் பாராட்டுதற்கான வாய்ப்புக் கிடைத்தது. இனி பாடுபொருள் நோக்கம் பற்றிய ஆய்வு தொடங்குகின்றது. பாடுநெறி, நோக்கு, பொருண்மைவகைப்பாடு என்ற முத்திறப் பாகுபாட்டமைவில் இச்சொற்பொழிவுத் தலைப்பு கள் அமைந்துள்ளமையால், இரண்டாம் நிலையில் தெய்வத் தமிழ்க் கவிஞர் இயல் இசைப்பாக்களை எண்ணிறந்தன பாடுதற்கான சமுதாயச் சூழலையும், தேவையையும் அறிதல் வேண்டும். இப்பின்னணியில் அவர் பக்திப்பாடல்கள் பாடுதற்கு அடிப்படையாக அமைந்த நோக்கங்களையும் ஆராய்வதால் சமுதாயத்திற்கும் இலக்கியத்திற்குமான பண் பாட்டு உறவுக் கூறுகளை எளிதில் புரிந்து கொள்ள இயலும்.

தனிமனிதனின் அடங்கிய உணர்ச்சிகளின் பொங்கி வழி யும் வெளியீட்டுக் கலைவடிவம் இலக்கியமாகலாம் எனினும் சமுதாயத்தின் ஓர் அங்கமான கலைஞன், அதனுடன் கலந்தும், உறவாடியும், ஒதுங்கியும், தனித்தும், உயர்ந்தும், அச்சமுதாய உணர்வின் ஒரு கூறாகவும், தனக்கே உரிய ஆளுமைச் சுதந்திரத்தின் போக்குவீடாகவும் படைப்பாக்க முயற்சிகளைக் காண்கின்றான். எனவே ஒரு காலத்தின், இனத்தின், சூழலின் விளைவாக இலக்கியப் படைப்புக் கருதப்படுகிறது. அன்றியும் ஒரு கால கட்டத்தின் ஆன்ம தரிசன விளக்கமாகவும் அது அமைதல் கண்கூடு. மனித ஆன்மாவின் விளக்கமே இலக்கியம் என்பதும் கருதத்தக்கது.

"ஒவ்வொரு படைப்பாளியும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் உறுப்பினனாகவே வளர்கின்றான். அவன் ஆளுமைத் திறக் கட்டமைப்பு, வாழ்வியல் நோக்கம், உணர்வு முரண்பாடுகள், வெளியிடு பாங்கு முறைகள் எல்லாம் சமுதாயத் தன்னலஞ்சார் கொள்கை முரண்பாடுகளால் கட்டுப்படுத்தப் படுகின்றன. இத்தகு சமுதாயச் சிந்தனை ஓட்டங்களுக்கும், உணர்வுகளுக்கும் ஈடு கொடுப்பவனாகவும், மற்றவருடன் இவற்றில் பங்கு கொள்பவனாகவும் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதை அவனால் தவிர்க்க முடியாது. எனவே இக் காரணத்தால், அவன் படைப்புப் பொருண்மை, அதன் ஆழ் நிலை உணர்வுத் தரங்கள் எல்லாம் அவனுடைய சமுதாயப் பின்புலச் சூழலின் சார்பின்றி விளங்க முடியாது. தன்னை வெளிப்படுத்தும் படைப்புத் தொழிலில் கலைஞன், தன் சமுதாயத்தைப் பிரதிபலித்துக் காட்டி விடுகின்றான்'' என்று ஹென்றி பாம்போர்டு பார்க்ஸ் இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் இடையிலான பிணைப்புறவினை மிகத் தெளிவாக வரையறுப்பார்.[1] இலக்கியம் சமுதாய உற்பத்திப் பொருள். காலத்திற்கேற்ற வண்ணம் பொருள் உற்பத்தித் திறன் மாறுபாட்டைக் காண முடியும். சிறந்த இலக்கியப் படைப்புக்கள் எல்லாம் தோன்றிய காலத்திற்கும், சூழலுக்கும் உரிய உண்மைத் தன்மையினை வெளிப்படுத்திக் காட்டுவனவே. இலக்கியம் வாழ்க்கையின் வெளிப்பாடு என்றாலும் குறிப்பிட்ட காலத் தேவைகளுக்கேற்பவும், மனித வரலாற்றுப் போக்குகளுக்கேற்பவும், அதன் கருத்தமைவும், வெளியீட்டு நெறியும் உறுதிப் படுத்தப்படுகின்றன. இதனால் குறிப்பிட்ட சமுதாயத்தின் பண்பாட்டு நிலைவிளக்கமாகப் படைப்புகள் அமைதல் வெளிப்படை. ஆயின் இவ்வரையறைகளின் அடிப்படையில், தனித்தும், விலகியும், உயர்ந்தும், உலகளாவிய பொதுமைத் தன்மையில் மனித மதிப்புகளின் குறியீடுகளாய்ச் செவ்வியல் சார் உயர் பேரிலக்கியங்கள் உருவாவதையும் காண்கின்றோம். இவை கால, இன, மொழி, சமுதாய எல்லைகளைக் கடந்து மானுடம் பாடும் செம்மைசால் படைப்புகளாய் நிலைபெறுகின்றன.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்ற நம்பிக்கை உணர்வினை ஊட்டும் சமயஞ்சார் தெய்வநெறிப் பாடல்கள் இவ்வகையில், குறிப்பிட்ட சமயநெறிகளுக்கப்பால் மனிதனுக்கு உய்நெறி காட்டும் பொதுமைப் பண்புகள் கொண்டு காலங் கடந்த வழிநெறி வகைமை கொண்ட படைப்புகளாய்த் திகழ் கின்றன. தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவனாகும் பொதுமைப் பாங்கு இது.

"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்

சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி"

என்று வழிப்படுத்தி அக இருள் களைய ஒளிவடிவாய் நின்றி லங்கும் இறைவன் ஆத்திசூடி இளம்பிறை அணிந்தவனாய் பாற்கடலில் பள்ளி கொண்டவனாய், சிலுவை சுமந்தவனாய் அல்லாவெனும் திருப்பெயர் தாங்கியவனாய், அருகனாய் புத்தனாய்,

"யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே

அவ்வுரு வாகி நின்று"

அருள்புரிதல் ஒருதலை. இவ் உருவ வழிபாட்டு நெறிகள் வாயிலாக உள்ளம் சமரசமாகி ஆன்மநேய ஒருமைப்பாட்டுக் கான சமரச சன்மார்க்க நெறியாக இது வளர்ந்ததைப் பின்னர் வள்ளலார் பாடல்கள் காட்டுவது இங்கு உன்னத் தக்கது. அதன் தோற்றுவாயினைத்தான் பக்தி இயக்கக் காலத் தில் காண்கின்றோம். அவன் நாமமே சூழ்ந்து வையகம் துயர் தீர வேண்டுமென முதலடி எடுத்துத் தந்து, புதுநெறிப் பாதையினை உருவாக்கிக் காட்டுவார் சம்பந்தர். ஆகவே சம்பந்தர் தம் ஒருநெறிய உணர்வூட்டும் பெருநெறிய தமிழ்ப் பாட்டுக்கள் சைவத் திருநெறியன என்றும், அன்புவழி இறையருளை அவாவி நிற்கும் பொதுமை நெறியன என்பதை உளங் கொள்ளல் வேண்டும். இப்பின்புலமே அவர்தம் சமுதாய நோக்கினைத் தெளிவுபடுத்தும்.

"மதம் என்பது வெறும் நம்பிக்கைகளின் தொகுதியன்று. அது சமூக உறவுகளுடனும், உற்பத்தி உறவுகளுடனும்

நெருங்கிய சம்பந்தம் கொண்டது. குறிப்பாக நிலவுடைமை யமைப்பில் அது சமூக உற்பத்தி உறவின் ஒரு முக்கிய அங்க, மாகும்'' என்பார் கா. சிவத்தம்பி.[3] தமிழ் வரலாற்றுப் பண்பாட்டு நோக்கில் சாதி சமயக் கட்டுமானங்கள் காலந்தோறும் தனி மனித வாழ்வினையும், அதன்வழிச் சமுதாய மதிப்பீடுகளையும் நிர்ணயம் செய்கின்ற போக்கினை அறிகையில் சிவத்தம்பியின் கூற்றின் உண்மைத் தன்மை தெளிவாகும். சமூக ஒடுக்கு முறைகளையும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் சமய மாற்றத்தினால் மாற்றிவிட முடியும் என்ற நம்பிக்கையும் போக்கும் இன்றைய தமிழ்நாட்டு மீனாட்சிபுரங்களாலும், மண்டைக்காட்டு நிகழ்வுகளாலும் மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றன. எனவே, தமிழ்ச் சமூகத்தின் அடிநிலையில் சமயம் மிகப்பெரும் இடத்தை வகிப்பது நினைக்கத்தக்கது.

பொதுவான பண்பாட்டு வளர்நிலைப் போக்கில் சமயமும் இலக்கியமும் இணைந்து, ஒன்றையொன்று வளர்த்து வந்துள்ள தன்மையையும் இங்குக் குறிப்பிட்டாக வேண்டும். சமயம் மூன்று இன்றியமையாக் கூறுகளைக் கொண்டு விளங்குவதாம். நம்பிக்கை, வழிபாட்டு நெறிமுறைகள், நெறிமுறைகளுக்கு இன்றியமையாத தத்துவங்கள். இம்மூன்றினையும் பண்பாட்டிலிருந்தும், பண்பாட்டின் ஒரு கூறான இலக்கியத்திலிருந்தும் பிரித்து நோக்க முடியாது.

ஒரு கால கட்டத்தின் இலக்கியங்களின் மூலக் கருத்துப் பொருண்மைகளாகவும், அவை வெளிப்படுவதற்கான வடிவ அமைவுகளாகவும் சமயக் கூறுகள் விளங்கின என்பதற்குத் தமிழ் இறைப்பற்றிலக்கியங்கள் சான்றாகின்றன. எனவே, இத்தகு இலக்கிய உருவாக்கங்கள் சமுதாய மறுமலர்ச்சிக்கான ஒருவகைக் காரணிகளாகின்றன. சமூக உணர்வுகளையும், சிந்தனைகளையும், மக்களின் வாழ்வியல் உணர்ச்சிகளையும் மொழிக் குறியீடு கொண்டு விளக்கும் இலக்கியங்கள், மனித உறவுகளைச் சமன்படுத்தி மேல்நிலைக்கு உயர்த்தும் சமய உணர்வுகளை முறைப்படுத்திக் காட்டுதல் இயல்பான போக்காகின்றது. இந்த அடிப்படையில் சமய வெளிப்பாடாக

இலக்கியமும் இலக்கியம் உணர்த்தும் உண்மைகளாகச் சமயக் கோட்பாடுகளும் ஒன்றில் ஒன்று இணைந்து கலந்து விடுகின்றன. இந்த அடிப்படைத் தத்துவமே, சமய குரவர்கள் தம் பக்திப் பனுவல்களைப் படைப்பதற்கான சமுதாய நோக்கமாகின்றது. ஞானசம்பந்தர் பாடல்கள்வழி, சமயஞ்சார் இலக்கிய நோக்கங்கள் இடைக்காலத்தில் புத்துணர்வுடைப் புதுத் தமிழ்ச் சமுதாய உருவாக்கத்திற்குக் காரணங்களாய் அமைந்துள்ளமையை இனி விரிவாகக் காணல் தகும்.

பெரிய புராணத்தில் சேக்கிழார் ஞானசம்பந்தரது திருத்தொண்டின் நோக்கமாக மூன்று குறிப்புக்களைக் காட்டுவார்

1. ‘சைவ முதல் வைதிகமும்’ தழைத்தோங்கல்;
2. ‘‘அவம் பெருக்கும் புல்லறிவி னமண் முதலாம் பரசமயப், பவம் பெருக்கும் புரைநெறிகள்’’ பாழ்படுதல்;
3. ‘வண்டமிழ்செய் தவம் நிரம்பி’ அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைகளை வென்று ஓங்குதல்.

சேக்கிழார் காட்டும் இம்மூன்று நோக்கங்களையும், சமயப் பரப்பல், புறச் சமயக் காழ்ப்பு, தமிழ் பரப்பல் என்று முறைப் படுத்திக் காண்போம்.

1. சமயப் பரப்பல்

‘‘வேத நெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்கப்
பூத பரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்’’

(1899)

‘‘எல்லையிலா மறைமுதன் மெய் யுடனெடுத்த வெழுது மறை
மல்லனெடுந் தமிழாலிம் மாநிலத்தோர்க் குரை சிறப்ப ...’’

(1973)

என்ற பெரியபுராணக் குறிப்புகளால் சம்பந்தர் உட்கோள் வேதவிதிப்படி நிகழும் வைதிக ஒழுக்கம், சிவாகம விதிப்படி நிகழும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற சிவதருமங்கள் ஆகிய இருநெறிகளையும் நிலைநாட்டி அவற்றின் வழிப் பரம்பொருள் உணர்வை மக்கள் பெற்று உய்யும் வகை செய்தல் வேண்டும் என்பதாகிறது.

''வேத சிவாகமங்களிரண்டும் சிவன் திருவாக்குகள். வேதம் உலகர்க்கும் சிவாகமங்கள் சத்திநிபாதர்க்கும் அருளப்பட்டன; வேதம் பொது; ஆகமம் சிறப்பு. ''வேதமொ டாகமம் மெய்யா மிறைவனூல் ஓதும் பொதுவும் சிறப்புமென் றுன்னுக'' (திருமந்திரம்). வேதம் பசு, அதன்பால் மெய்யாகமம்'' முதலியவை காண்க வேதம் முடிந்த இடத்தில் சிவாகமம் தொடங்குகின்றது. இன்னதென்று காண முடியாதது என்று சாந்திமொழியுடன் வேதம் இணைத்து நிற்கின்ற இடத்தில் அப்பதிப் பொருள் இன்னதன்மை உடையது என்று சுட்டிக் காட்டித் தொடங்குகின்றது சிவாகமம்'' என்று சிவக்கவிமணி சி. கே. சுப்ரமண்ய முதலியார் காட்டும் உரைவிளக்கம் இருநெறிப் பொருளைத் தெளிவுறக் காட்டும்.[3] ஆயின் 'நற்பனுவல்' எனப் போற்றப் பெறும் நான்கு வேதங்களும் எழுதாக்கிளவியாய் ஆசிரியர் மாணவர் மரபு வழிச் செவி உணர் உண்மைகளாய் ஓதப் பெற்றமையின் அவற்றைக் 'கேள்வி' என்றும் 'சுருதி' என்றும் வழங்குதல் மரபு. நால்வேத நெறியினும் அறமுணர்ந்தார் வருணக்கோட்பாட்டு அமைப்பு முறையிலும் அந்தணராய் மேம்பட்டு நின்றனர். இங்கு மக்கள் எளிமையாய் இறைவழி நாட்டம் பெற்று அருள் நலம் பெறத் தடை இருப்பது இயல்பாகின்றது. எனவே தமிழகத்து வேர் கொண்ட வேதநெறி ஒருபுறம் இருக்க, மக்கள் நலம் பெற்று நற்பொருட்களைக் கற்றுணரவும், கேட்டுத் தெளிவுறவும் ஆனவழி பண்டைத் தமிழ்நெறியாய்க் கால்கொண்டு அன்பின் வழியதாய்உயிர்த்து உலவிய சிவநெறியாம். அந்நெறியினை விளங்கச் செய்தலே காலத் தேவையெனவும் உணர்ந்தவர் ஞானசம்பந்தர். எனவே, 'மறையிலங்கு தமிழ்வழி அவ்வண்ட

மிழால் எழுது மறை மொழிந்த பிரானின்' சிவ நெறியில் நின்று வழிபடுதற்கான முறைமையினை மேற்கொண்டார். சிவநெறியில் நின்று வழிபடுதற்குரிய பரம்பொருளைச் 'சைவன்' எனவும், 'சைவனார்' என்றுமே ஆளுடையப் பிள்ளை வழங்குவார். ஆகவே, மண்ணுலகில் வாழ்வார்க்கு அருளுவது இறைவனின் கருணை உள்ளம் எனக் கண்டு அவன் அருள்திறனைச் சிவாகம முறைப்படி உணர்த்தும் சைவ சமயத்தைப் பரப்புதல் ஞானசம்பந்தர்தம் முதல் நோக்கம் என்பது தெளிவு. வேத வேள்வியினையும் சிவநெறியினையும் ஒருங்கு போற்றும் கவுணிய கோத்திரத்தில் தோன்றிய சம்பந்தர் வேதமும் பொருளுமாய் விளங்கும் இறைவனை வழுத்தும் நான்மறைக் கேள்வி ஞானம் பெற்றது இயல்பே. செழுமறைகள் பயிலும் நாவரராய திருஞானசம்பந்தர் தமிழ் ஞானசம்பந்தராய்த் தமிழ்ச் சமுதாயம் உய்தற்பொருட்டு வேதப்பொருண்மை விளக்கப் பணியினைக் காட்டிலும், நடை முறையில் எளிய முறைகளில் சைவ சமய உணர்வினை ஊட்டிச் சிவம் பெருக்குதலே வாழ்வியல் தருமம் எனக் கொண்டது சமுதாயப் பரிவும் கருணையும் கொண்ட அருளாளர் செய லுக்குச் சான்றாய் அமைவதாம். எனவே, சம்பந்தரே, ''வேத நான்கினும் மெய்ப்பொருளாவது நாதனாமம் நமச்சிவாயவே'' என பழகு சமயமாய்ச் சைவமும், உணர்தல் மந்திரமாய் அஞ்செழுத்தும் அமைதல் வேண்டும் எனக் கொண்டு மிகு சைவத் துறையினை நிலைநாட்டலை வாழ்வுப் பணியாய் மேற்கொண்டார்.

அகச் சமயப் பரப்பல் முதன்மையாய் அமைய, அதற்காகச் சம்பந்தர் மேற்கொண்ட வழிமுறைகளை விரித்துரைப்பன அவர்தம் திருப்பாடல்களாம். பாடல்கள் காட்டும் அகச் சான்றுகள் சைவ சமய நிலைபேற்றிற்குச் சம்பந்தர் மேற் கொண்ட தொண்டுகளை நிரல்படுத்திக் காட்டுகின்றன.

1. தமிழோடு இசைபாடல் மறந்தறியாது, நாளும் பண் ணிறைந்த இறையுணர்வுப் பதிகங்களால் சிவனை வழிபடுதல்.

2. இறைவன் உவந்து உறைகின்ற திருத்தலங்கள் தோறும் சென்று பாட்டிசைத்துப் பரமனைப் போற்றுதல்.

3. அடியவர் கூட்டத்தாருடன் வழிநடைப் போக்கில் பாடியும் ஆலயங்களில் கூட்டுவழிபாடு நிகழ்த்தியும் சிவனெ னும் நாமம் தமக்கே உரிய செம்மேனி அம்மானின் அருளார் பெருங்கருணைத் திறத்தினை மக்களுக்கு உணர்த்தல்.

4. தலங்களின் இயற்கைக் கவின்களையும், அவ் இடங் களை நாடி இறையுறைந்து நிற்கும் தனிச் சிறப்புத் தன்மை களையும், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற சிறப்பு நிலைகளில் விளக்கி அவ் இடங்களில் உறையும் மக்களிடையே இடப் பற்றினையும், எழுச்சியையும் உருவாக்குதல்.

5. ''வாழ்தல் வேண்டும் இவண் வரைந்த வைகல்'' என் பது புறநானூறு காட்டும் தமிழர் வாழ்வியல் தத்துவம். இன்னாமையும், இயலாமையும், பொய்ம்மையும் பூசலும் நிறைந்த உலகில் முரண்பாடுகளிடையே சமன்பாடுகளைக் காணுகின்ற பரிபக்குவம் பெற்று இனிய காணும் ஆளுமைத் திறத்தை மக்கள் வளர்த்தல் வேண்டும். இறை உணர்வும், வழிபாடும் இத்தகு மனப்பக்குவத்திற்கான நெறிகளாய் அமைதல் வேண்டும். அல்லாமல் ஓடி ஒளிந்து, சிக்கல்களினின் றும் விடுபட்டுச் சமுதாயச் சூழல்களினின்றும் நீங்கித் தனிமனித ஆன்மஈடேற்றம் காணுதற்கும், வீடுபேறு அடைதற்கும் விலகித் துறத்தல் தமிழ் மரபன்று. சம்பந்தர் காலத்துச் சமணரும் பௌத்தரும் வலியுறுத்திய கோட்பாடுகளில் துறவு தலை யாயது. எனவே, அகச்சமய நிலைநாட்டலோடுப் புறச்சமயப் புன்மைகளைக் களையவும் வேண்டிய கட்டாயம் ஞான சம்பந்தருக்கு ஏற்படுகிறது. இல்லறத்தார் வாழ்வியல் தரு மங்களைக் கடைப்பிடித்து வையத்து வாழ்வாங்கு வாழும் வகையில் வானுலகப் பேற்றினை அடையும் முறைமையை எடுத்துரைக்கும் கடப்பாடும் உடையவராகிறார். வாழ்வு வேறு; சமயம் வேறு என மயங்காது வாழ்வில் சமயங் காணும் நடைமுறை நெறி கண்டு அறிவுறுத்துவார். ஆகலின் இறைவனின் எரியாடு காட்சிகளைப் பாடும்போதும் உமை காண மகிழ்ந்தாடும் நிலையைப் போற்றுவார். ஞானசம்பந்தர் காட்டும் அடிப்படை வாழ்வியல் கோட்,

பாடு பெண்ணும் ஆணுமாய் இணைந்து அறங்காத்துப் பெருமானின் அருளைப் பெறுதலாகிறது. இதனைத் திருப் பிரமபுரப்பதிகம் (மூன்றாம் திருமுறை) மிகத் தெளிவாக நமக்குணர்த்தும்.

''மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே''

என அம்மை அப்பனாய்த் திருவருள் பாலிக்கும் இறைக் கோலமே மக்கள் வாழ்விற்கு எடுத்துக் காட்டாக அமைகிறது இப்பதிகம் முழுவதும்,

''பெண்துணையாக வோர் பெருந்தகை இருந்ததே''
''பிடிநடை யவளொடும் பெருந்தகை இருந்ததே''
''பேரறத் தாளொடும் பெருந்தகை இருந்ததே''

என்று பலவாறாகப் பாடல்தொறும் உமையொருபாகனைக் கண்டு மகிழச் செய்து இல்லற மாண்பினை வலியுறுத்துவார்.

இதனால் வாழ்க்கையில் நம்பிக்கை மிகுகின்றது. சமயம் வலியுறுத்துவது இறைவனை உள்ன் என நம்புதல் மட்டுமன்று வாழ்க்கையிலும் பிடிப்பும் நம்பிக்கையும் ஏற்படுத்தல் வேண் டும் என்பதுமாகிறது.

6. இறை நம்பிக்கை ஊட்டலுக்கும், சைவசமயமே சமயம் என நிலைநாட்டலுக்கும் உறுதுணையாகச் சில அற்புத நிகழ்வு கள் நிகழ்த்தியமை பற்றிய குறிப்புகளை மூவர் தேவாரத்திலும் காண்கின்றோம் இவற்றின் மெய்ம்மை, பொய்ம்மை ஆராய்ச்சி இங்கு வேண்டுவதின்று. ஆயின் மூவர் முதலிகள் நிகழ்த்தியதாகக் குறிக்கப் பெறும் அருளார் அற்புத நிகழ்வு களுக்கு அடிப்படையான உண்மை அவர்கள் மக்களிடத்துக் கொண்ட எல்லையற்ற அன்பும் பரிவுமாகும். சிவபெருமான் திருவடிக்கே வைத்த ஒருமனத்த உயர் சிந்தனை ஆற்றல் அவர் கள் மறைமொழிகளுக்கு மந்திர ஆற்றல் அளித்தன. அருளிக் கூறினும் வெகுளிக் கூறினும் வேண்டுவ விளைக்கும் ஆற்றல்

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழிக்கு உண்டு என்பர். இனி மானுட நலங் கருதி மனம் உருகிச் செய்யும் வழிபாடுகளுக்கும் நல்விளைவுகள் ஏற்படுதலும் இயல்பே. 'தேவசக்திகளைத் தன்னுள் அடக்கிய சொல்' வேண்டுமெனப் பாரதி வேண்டுவதும் சொல்லாற்றல் கருதியே.

ஆகவே ஞானசம்பந்தர் வாழ்வில் நிகழ்ந்தனவாக அவர் அருளுரைகளாகப் பதிகத்தில் இடம் பெறும்,

(அ). ''வாசி தீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையீர் ஏசலில்லையே''

என்ற பாடல், பெற்ற காசினை வட்டம் இன்றி ஏற்றுக் கொள்ளப் பாடியது. எனினும் மழையின்றி வறன்று, பசியும் பிணியும் மக்களை வாட்டிய கொடும் பஞ்ச காலத்து, அதனை இறையருளே தீர்க்க வல்லது என்று ஒருமைப் பாட்டு ணர்வுடன் நாவரசருடன் சேர்ந்து சம்பந்தர் ஆற்றிய சமுதாய நலத்தொண்டிது எனக் கொள்ளுதல் சிறப்பாம். சமயப் பெரிய வர்கள் தம் ஆன்மச் சுடரினை ஏற்றி மகிழ்ந்து இறையுடன் ஒன்றி உடனாகும் சிவானந்தப் பேரின்பத்தைப் பெறுவதினும், மக்கட் சமுதாயம் நலமார் சமுதாயமாய் வசியும் வளனும் சுரந்து வாழ்க்கை நலன்களைத் துய்த்து மகிழ வேண்டும் என்ற அருள்நெறியைக் கடைப்பிடிப்பதே இறைத்தொண்டு எனவும் கொண்டனர். இங்கு மக்களுக்குத் தொண்டு செய்வதே மகேச வழிபாடு என்று கொள்ளும் நலவாழ்வுச் சமுதாயப் புதுமைக் கோட்பாடு உருவாவதையும் காண்கிறோம்.

(ஆ) அடியவர்கள் சுரநோய் நீங்கிடத் திருச்செங்கோட்டில்,

''அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும்
நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறாதிரு நீலகண்டம்'

என்று இறைவன் மீது ஆணையிட்டுப் பாடிய திருப்பதிகம் ஞானசம்பந்தர் தம் அருள்நிறை மனத்தில் அளப்பரும் கருணையைக் காட்டுகின்றது.

(இ) கொல்லிமழவன் மகளை வருத்திய முயலகன் என்ற நோய் தீர்க்கப் பாடிய 'துணிவளர் திங்கள்' என்ற பதிகம், திருமருகல் வணிகன் மகள் கணவன் விடந் தீர்க்கப் பாடிய 'சடையாய்' எனத் தொடங்கும் அருட்பதிகம், மறைக்காட்டின் திருக்கதவம் அடைக்கப் பாடிய திருப்பாட்டு, திருக்கொள்ளம் பூதூர் ஓடையில் ஓடம் மிதப்பிக்கப் பாடிய 'கொட்டமேகமழ்' எனும் ஒண்பதிகம், ஆண்பனை பெண்பனையாகப் பாடிய திருஒத்தூர் திருப்பாடல், மயிலைப் பாவையை உயிர்ப்பிக்கப் பாடிய திருமயிலைத் திருப்பதிகம், தந்தைக்கு வேள்வி நடத்தப் பொன் வேண்டிப் பாடிய "இடறினும் தளரினும்" என்ற அருட்பாடல் போன்றவை, மன்னுயிர் நலங் காக்கத் திரு வருளினைப் பரிந்து வேண்டி வேண்டியாங்கு எய்தி மகிழ்ந்த சமயஞ்சார் சமுதாய அருள் தொண்டுகள் எனக் கொண்டு அவற்றின் சீர்மையைப் பாராட்டுதல் தகும்.

அன்றியும் இத்திருப்பதிகப் பயன்பாடுகள் தனிமனித வாழ்வில் உறுதுயர் களைய முன்னிற்கும் சமூகத் தொண்டரின் அன்புள்ளம் காட்டும் திறத்தனவாம். எனவே, தனிமனிதத் துயர், சமுதாயப் பொதுத் துயர் எனத் துயரங்கள் எவ்வுருக் கொள்ளினும், அவை நீக்கி அன்புநலம் கனியும் அமைதிச் சமுதாயம் காண்பதே அருளாளர்தம் சமயத் தொண்டாகிறது.

7. இறைவன்மீது கொள்ளும் எல்லையற்ற காதல் தனி மனித வாழ்வுச் செயற்பாடுகளுக்குத் தடையாய் நின்று, மூடநம்பிக்கை வழிப்பட்ட செயலறு நிலையினை உருவாக்குதல் கூடாது என்ற செயலாக்கத் திருத்தொண்டாற்றுதற்கான ஊக்கத்தினை மக்களுக்குத் தம் வாழ்வின் நிகழ்வு ஒன்று வழி வலியுறுத்துவார் சம்பந்தர். இங்கு, சமயம் கண்மூடிப் பழக்கங் களையும், அறியாமையாற் பிறக்கும் நம்பிக்கைகளையும் வளர்ப்பதில்லை; வளர்க்கக் கூடாது என்று வலியுறுத்துவார் போலச் சம்பந்தர் பேசுவதைக் காணலாம். சமணரை ஒடுக்கிச் சைவத்தை நிலைநாட்ட மதுரைக்குப் புறப்படுகையில் நாவரசரே நாளும் கோளும்கண்டு கலங்கித் தடுக்கையில், ஒரு நாட்டின் மக்களின் சிக்கலைத் தவிர்க்கவும், அகச்சமயம் காக்கவுமான பொதுத் தொண்டாற்றப் புறப்படும் தொண்டர்

கள் நாள், நட்சத்திரம், கோள் என இவற்றிற்குச் சிறப்புத் தந்து பணிமுடக்கிப் பின்வாங்கல் நீதியன்று என, 'வேயுறு தோளி பங்கன்' என்ற கோளறு பதிகம் பாடும் ஞானசம்பந்தரது தன்னலஞ்சாரா இறைத் தொண்டின் ஊற்றத்தினால் தான் இடைக்காலத் தமிழ்ச் சமயம் நாட்டில் வலுப்பெற்று' அதன்வழிப் பல்துறை நலம் வளர்த்த புதுமைச் சமுதாயம் மலர்ந்தது என்பதையும் நினைத்து மகிழலாம்.

> "மறைஞான ஞானமுனிவன்
>
> தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரைசெய்
>
> ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே"

எனத் திருக்கடைக்காப்பிட்டு நிறைவுபெறும் அப்பதிகம் 'நம்பினார் கெடுவதில்லை' என்ற உண்மையை அன்றி, பக்தி உணர்வின் வலிமையால் இடர்களைந்து எண்ணிய எண்ணியாங்கு எய்தலாம் என்ற பெரும் நம்பிக்கையையும் ஊட்டுகின்றதன்றோ?

8. இனி, இறைவன் அருள் நலத்தால், அவர் பெற்ற பொற்றாளம், சிவிகை, முத்துப்பந்தர், குடை போன்ற தனிச் சிறப்புகள் சம்பந்தர்தம் அன்புத் தொண்டிற்கான திருவருட் பயன்கள் என்றமையலாம். மக்களும் இறைவழிபாட்டுப் பயன்களை எண்ணி, முனைப்புடன் அந்நெறி நிற்பின் வாழ்க்கை இன்பங்களை எளிதில் இறைவன் தந்தருளுவான் என்ற நம்பிக்கை பெறுவதற்கும் உரிய குறியீட்டுப் பயன்களாகவும் இவற்றைக் கொள்ளுதலும் கூடும்.

9. சமயப் பரப்பல் என்பது ஒரு சமயக் கோட்பாட்டினை வலியுறுத்தி மக்களைப் பின்பற்றச் செய்தலும், சமய மாற்றமும் எனக் கொள்ளுதல் பொருத்தமாகாது. தம் சமய உண்மை நிலைநாட்டம் ஒருபுறம் இருக்க, சமயக் கொள்கைகளுக்கப் பால் சமுதாயப் பொதுமை உணர்வு என்பதை வலியுறுத்தலே உண்மைச் சமயத் தொண்டாகும்.

''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே''

எனத் தாயுமானவர் மனித இன்ப நலக் கோட்பாடே சமய தத்துவம் எனக் காட்டுவார். இவர்க்கு முன்னோடியாய் முதல் நிலையில் சமய நிலைநாட்டலை மேற்கொண்ட சம்பந்தர், பக்திப் பெருவழியாகப் பொதுமை உணர்வுடைப் புதுமைச் சமுதாயம் படைக்க வழி அமையும் எனக் கண்டு உணர்ந்து பேசுவார்.

சங்க வாழ்வியற் கோட்பாட்டினை ஐங்குறுநூற்று மருதப் பாடல்கள் வழி ஓரம்போகியார் காட்டுவது தமிழ் மரபின் திறம் காட்டும். புறவாழ்வில் அன்றித் தனிமனித இன்பம் நிறைந்த அகவாழ்விலும் பொதுவாழ்வு நோக்கு பெண்ணிற்கும் உண்டு எனக் காட்டுவது ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது. தலைவன் புறத்தொழுக்கம் கொண்டு தலைவியைப் புறக் கணிக்கும் மருத ஒழுக்க வாழ்விலும் அவன் மீண்டு வருகை யில் தோழியிடம் அவர்கள் பிரிவு வாழ்வு பற்றித் தலைவன் கேட்கையில் வேட்கைப் பத்தாக, தோழி விண்டுரைக்கும் அகப்பாடல்களில்,

''நெற்பல பொலிக, பொன்பெரிது சிறக்க''

''பால் பல ஊறுக, பகடுபல சிறக்க''

''பகைவர் புல்லார்க, பார்ப்பா ரோதுக''

''பசியில்லாகுக பிணிசே ணீங்குக''

''வேந்துபகை தணிக யாண்டுபல நந்துக''

என்ற உலகநல வாழ்வில், சமுதாயப் பொதுமை உணர்வில் தனிமனித வாழ்வு சிறக்கும் என்ற மனிதநலக் கோட்பாட்டுக் குரலைக் கேட்கிறோம். இப்பொதுமைக் குரல், ஞானசம்பந்தர் திருப்பாசுரத்தில் மீண்டும் ஒலிக்கக் கேட்கிறோம்.

''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக

ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே''

என்று பல்லார்களும் மதிக்க ''நல்லார்கள் சேர் புகலி ஞானசம்பந்தன்'' தம் அன்புக் குரல் சமயஞ்சார் பொதுவுடைமைச் சமுதாய உருவாக்கத்திற்கான கொள்கை விளக்கமாக அமைகின்றது.

இக்குரல் நாவரசர் பதிகங்களில் சாதி, குல, கோத்திரச் சழக்குகள் தவிர்ந்த, நலவாழ்வுச் சமுதாயக் கோட்பாடாக மலர்கின்றது. இறைவன் படைப்பில் அனைவரும் சமம் என்று இருக்கையில் மனிதரால் உருவாக்கப்பெற்ற சாதி, குலப் பிரிவுகள் படைப்பு நோக்கினை இழிவுபடுத்தலை உணர வேண்டும் என்ற அடிப்படையில் 'ஆஉரித்துத் தின்றுழலும் புலையரும்' சிவனடியார் எனின் அவர்களை நாம் வணங்கும் நடமாடும் தெய்வங்களாவர் என நிமிர்வுடன் பேசும் நாவரசர் புரட்சிக் குரல் சமுதாய மேம்பாட்டிற்குப் பாடுபடுதலே உண்மையான சமயத் தொண்டு என்ற உண்மையினை ஒலித்து நிற்கும்.

10. தொண்டர்சீர் பரவும் திருத்தொண்டு 'அன்பரொடு மரீஇ' எனச் சைவ சமயக் கோட்பாட்டின் உயிர்நிலையாய்த் திகழ்கின்றது. மனித நலக் கோட்பாடு என்பதுதான் சமயம் காட்டும் அன்புநெறி. இந்த அடிப்படையினின்றும் விலகும் சமயங்கள் மக்கள் கூட்டத்தினின்றும் விலகியே நின்றுவிடுகின்றன. மனிதன் உயிரொடு உலவும் தெய்வ இயல்பு கொண்டவனாகிறான். அரவிந்தர்தம் மனிதம் என்ற புதுச் சமயத்திற்கு கொள்கை விளக்கம் கூறுகையில், ''மனிதன் மனிதனுக்கு புனிதமானவன்''[4] என்பார். எனவே, மனிதனை மனிதன் மதிப்பது, தன்னைப்போல் உலகினை நேசிப்பது, நேசத்தின் வழி இறைவனுடன் ஆன்ம உறவு கொள்வது என்ற நெறிகள், மக்களைப் போற்றி மக்களுக்காக வாழ்வது என்ற மானுட நலக்கோட்பாட்டினை வலியுறுத்துவதாகிறது. இவ் உண்மையினை மணிவாசகர்,

"உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரிவாய்"

என்பார். இத்தகு அடியார் வழிபாட்டு நெறிமுறைக்கு அடிகோலியவராய் ஞானசம்பந்தர் தமக்கு முன்னும் தம் காலத்தும் இருந்த அடியார்களின் திருத்தொண்டினைப் பதிகங்களுள் வைத்துப் பாராட்டி மகிழ்வதுடன், அவர்கள் இறைவாழ்வு, மானிடத்திற்கு முன்மாதிரிச் சான்று வாழ்வாய் அமைய வேண்டும் என்பதையும் குறிப்பாகச் சுட்டுவார். தொண்டருக்கும் தொண்டராய் வாழும் தன்முனைப்பற்ற அன்பு வாழ்வு இறைமை வாழ்வாய்க் கனிந்து, 'யாதும் அவன் உடைமை அவன் செயல்' என்ற தன்னலம் அழிந்த தமக்கென வாழாப் பிறர்க்குரியராம் உன்னத நிலை அடைதற்கு வழி வகுத்த திறத்தினையே பின்னர் சேக்கிழார், பெரியவர்கள் புராணமாய் விரித்துப் போற்றினார். "மாலறநேயம் மலிந்தவர் வேடமும் ஆலயம் தானும் அரனெனத் தொழுமே" என்பது சிவஞானபோதம். குலங்கோத்திர வேறுபாடுகளுக்கப் பால் சிவனடியாரைப் பணிதல் வேண்டும் என்பது ஞான சம்பந்தம். அஞ்செழுத்து, திருநீறு முதலான சிவசாதனங் களைக் கண்டதும் தொழுதல் வேண்டும். தனித்து வரினும் கூட்டமாய் வரினும் சிவனடியார் அடிக்கீழ்ப் பணிதல் வேண்டும் என்பார்.

"கச்சித் திருவேகம்ப மேயானை மேவுவா ரென்தலை மேலாரே"

"திறம் அடியார்பால் மிகக் கேட்டுகந்த வினாவுரை"

"கழலேத்தி நாடொறும் பொய்யிலா அடிமை புரிந்தார்க் கருளாயே"

''விரும்பும் அடியாரை ஆளுகந்தவனே அடைந்தார்க் கருளாயே''

''தொண்டர் தொண்டரைத் தொழுதடி பணிமின்கள்''

''மிழலையான் அடி உளங்கொள்வார் தமை

உளங்கொள்வார் வினை ஒல்லை யாசறுமே''

எனப் பலவாறாக அடியார்க்கு அடிமை செய்யும் திறம் எடுத்துரைக்கப்படும்.

அடியார்க்கு அமுதளித்தல் பெரும்பேறாகக் கருதப் பட்டமை, ''உருத்திரப் பல்கணத்தார்க்கு அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்'' என்ற சம்பந்தர் கூற்றால் தெளிவுறும். பின்னர் தொடர்ந்து இது சைவ சமயத்தின் அடிப்படைத் திருப்பணிகளில் ஒன்றாகத் கருதப்பட்டதை இளையான்குடி மாற நாயனார் போன்றார் வாழ்க்கையும் திருப்பாடல்களும் எடுத்துரைக்கும். இறைவனையே துணை யாக, பற்றுக் கோடாக, நிழலாக, செல்வமாக. சிந்தைநிறை பொருளாகக் கொண்டு வாழ்ந்தனர் அடியார்கள் எனப் பாராட்டுவார் சம்பந்தர். அடியவர்பால் அன்பும் நேசமும் கொண்டவராய், அவர்மாட்டு இறையருள் சிறக்க வேண்டு மெனப் பரவும் ஞானசம்பந்தர் தொண்டர் சீர் பரவு நெறி இவ்வாறு அமைகிறது.

11. கலைஞானசம்பந்தர் தம் 'சங்கமலி செந்தமிழ் களைக்' கொண்டு அவர் காலப் பண்பாட்டு வளர்ச்சியினைக் காணலாம். சமய வளர்ச்சியானது தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளின் பல்துறை வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும் திறம் கருதத் தக்கது. கோயில்கள் கலைநிலையங்களாய்த் திகழ்ந்தன. சிற்பம், ஓவியம், ஆடல், பாடல் என்ற கவின் கலைகளுக்குப் பிறப்பிடமாய் அவை அமையக் காணலாம். பின்னர், இராஜ இராஜ சோழன் காலத்துக் கோயில் நாகரிகம் தொடர்ந்து, தமிழர் பண்பாட்டுக் கருவூலங்களாக அவை திகழ்ந்தமைக்கு முன்னோடியாகச் சம்பந்தர் காலக் கோயில் வழிபாட்டு எழுச்சியினைக் கொள்ளலாம். நாட்பூசனைகளும்,

திருவிழாக்களும், மறையொலியும், தமிழ் இசையொலியும், வழிபாட்டு நெறிமுறை அமைப்புகள் பற்றிய செய்திகளை அறிய வழி வகுக்கின்றன. மக்கள் அகப் பண்படுத்தலுக்கு புறநிலைசார் வழிபாட்டு நடைமுறைகள் பெரிதும் துணை நின்றன. தமிழர் நாகரிகத்தின் சின்னங்களாகவும், பண்பாட்டு விளக்கங்களாகவும் கோயில்கள் பொலிந்தனம கண்கூடு. சம்பந்தர் தொடங்கி, பின்வந்த சைவசமய குரவர்களும் நாடெல்லாம் வழிப்பயணம் மேற்கொண்டு சமயத்தைப் பரப்புதற்குக் கோயில்கள் வளர்ச்சி துணை நின்றன. சமயக் கருத்துக்கள் பொதுமக்களை எளிதில் சென்றடையக் கோயிலை மையமாகக் கொண்ட சமய விழாக்களும் பூசைகளும் பெரிதும் காரணமாயின என்பதும் கருதத் தக்கது.

கவின்கலைகள் வழி மக்கள் மனத்தைக் கவர்ந்து இறைப் பற்றினை ஊட்டுதல் எளிதாயிற்று. இசையும், நடனமும் மக்கள் உள்ளங்களைக் குழைவித்து கலைவடிவான இறை யிடத்து அன்பு செலுத்த வழிவகுத்தன. அழகு மயமானவன் இறைவன். அழகுவழி அவனை அடைதல் எளிது. நல்லதும் அழகும் கடவுளின் வேறு பெயர்களாம். சிவம் செம்மையும் நன்மையும் தருவது. சுந்தரம் அழகிது, நிரந்தரமானது, சத்தியமானது, சிவமாய்ச் சுந்தரமாய் நிலை கொண்டது. அழகினை ஆராதிக்க அழகுடைக் கலைகள் இயல்பான நெறிகளாய் அமைந்ததில் வியப்பில்லை.

விழாக்கள் மக்களிடையே ஒருமைப்பாட்டுணர்வை வளர்த்தன. பல ஊர்மக்களும் கூடி இணைந்து கும்பிட்டு வழிபட்டுச் சமுதாய நல்லுறவினை வளர்த்துச் சிறந்தனர். எனவே, சம்பந்தர் இவற்றிற்கு முதன்மை தருதலைப்பெரிதும் விரும்பித் தம் பாடல்களில் குறித்துள்ள திறம் அவர்தம் நோக்கினைத் தெளிவுபடுத்தும்.

‘பண்ணின் மொழி சொல்ல விண்ணுந் தமதாமே’’

என்று இசைப்பாடற் பயன்பாட்டையும்,

“பண்ண வண்ணத்தராகிப் பாடலொடா டலறாத
விண்ண வண்ணத்தர்’’

என்று இசையாய், இசைப்பொருளாய், ஆடலாய், ஆடற் பயனாய் இறைவன் திகழும் திறங்கூறி, அவன் அடி அடைதற்கு அவையே வழி என்பதைக் குறிப்பாகவும் சுட்டுவார் சம்பந்தர்.

பூம்பாவையைப் பெண்ணாக எழுப்பிய திருமயிலைப் பதிகத்தில் புரட்டாசி முதல் ஆனி வரை நிகழும் பத்துத் திருவிழாக்களையும் வரிசைப் படுத்தல் காணலாம். ஆண்டு தோறும் விழவயர்ந்து இறைவனைச் சிறப்பிக்கும் நடைமுறை வழிபாட்டு நெறிகள் சமய வளர்ச்சிக்கு மிகுதியும் துணை நின்றன. ''ஐப்பசி ஓண விழாவும்'', ''ஆதிரைநாள் காணாதே போதியோ'', பங்குனி ''யுத்திரநாள்'' என்று குறிக்கப் பெற்ற விழாக்கள் இன்றும் தொடர்ந்து கொண்டாடப் பெறுவது அவற்றின் பழமையையும், காலந்தோறும் பெற்று வந்துள்ள செல்வாக்கினையும் காட்டும். இப்பெரு விழாக்கள் எல்லாம் வாழ்க்கை இன்பங்கள் சமயச் சார்புடன் கூடி மக்களை மகிழ் வித்ததால், சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடித்தல் என்பது கட்டுத்திட்டத்திற்குள் அடங்கிய கட்டாயங்களாகக் கொள்ளப் படாது, வாழ்வுடன் இணைந்து கலந்து வருவது என்ற உண்மை யும் வலியுறுத்தப் பெறுகிறது. எனவே, மகிழ்வூட்டும் இன்கலைகளைக் கோயில்களும், கோயில்களை மையமிட்டு இறை உணர்வினைப் பரப்பிய சமயமும் ஒருங்கு வளர்த்துத் தமிழ்ப்பண்பாட்டு வரலாற்றில் சிறப்பிடம் வகிப்பதைச் சம்பந்தர் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

2. புறச்சமயக் காழ்ப்பு

சமயப் பரப்பல், வளர்த்தல், நிலைநாட்டல் என்ற படி நிலை வளர்ச்சியில், இயல்பாக மண்ணிற்கே உரிய சமயங்கள் வளர்வதில் சில காலகட்டங்களில் புறச் சமய ஊடுருவல் தடை களை எழுப்பலாம். அப்போது சமயங்களுக்கிடையிலான முரண்படு கொள்கைகளால் பூசல்களும், போராட்டங்களும் நிகழ்வது தவிர்க்க முடியாததாகின்றது. சைவ வைணவங் களாகிய அகச்சமயங்களை நிலைநாட்டுதற்குச் சான்றோர் பல்வேறு வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டிய தேவையும் ஏற் பட்டு விடுகின்றது.

சமண,பௌத்த சமய நுழைவு தென்னகத்தில் இடைக்காலத்தில் பெரிதும் மாற்றங்களை விளைவித்தன. இச்சமயங்கள் வற்புறுத்திய நிலையாமை பற்றிய கருத்துக்கள், "கடவுள் உண்டு போலும் இல்லை போலும்'' என்று ஏதுக்களாலும் எடுத்த மொழிகளாலும் ஐய உணர்வினை ஏற்படுத்தி இறை உண்மையினைப் பற்றிப் பரப்பிய மயக்கக் கோட்பாடுகள், கடுந்துறவறம் மேற்கொள்ள வேண்டுமெனக் கொண்ட கட்டுத்திட்டங்கள் போன்றவை மக்களிடத்தில் தடுமாற்றத்தை உண்டு பண்ணின. இத்துன்பங்களினின்றும் நீங்கிக் கருணை வடிவான இறைவனின் திருவருளைப் பெறுதற்குரிய வழிகாட்டும் சமய அருளாளர்கள் தம் வருகையை அக்காலம் எதிர்நோக்கி இருந்ததென்றே கூறலாம். எனவே இந்நம்பிக்கையினை ஊட்டி, வாழ வேண்டிய நெறியைக் காட்ட முன்வந்த சமயச் சான்றோர், மாற்றுச் சமயப் போக்குகளின் புன்மைகளைச் சுட்டிக் காட்டி அகச்சமய உண்மைகளை நிலைநாட்டக் கடுமையாகப் பிரச்சாரம் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதன் விளைவுதான் சம்பந்தர், பாடல்களில் பதிகந்தோறும் பத்தாம் பாடலில் வற்புறுத்தப் பெறும் சமண பௌத்த சமயக் கண்டனங்கள். அன்றியும், வரலாற்றுவழி அச்சமயங்கள் பெற்ற அரசியல் ஆதரவு அவற்றின் செல்வாக்கிற்குக் காரணமாகியது. இதனைக் குறைக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

சம்பந்தர் வெறுத்த புறச்சமயப் போக்குகளைத் தெளிவுபடுத்தல் வேண்டும்.

சமண பௌத்தர்கள்தம் புறத் தோற்றம்.

தலையினைக் கையினால் பறித்து நின்று, உடை நீத்துத் திரிந்த சமணர்கள் தோற்றம் நாணம் தருவதாய் அமைந்தது. துவராடையால் மேனி முழுவதும் மூடித் திரிந்த பௌத்தர்கள் தோற்றமும் இம்மண்ணின் மரபிற்குமாறாய் அமைந்தது.

இனி, பல் விளக்காது, நீராடாது, நின்று உண்டு கொண்டு, ஒரு நாளைக்கு ஒருபொழுதே உண்டுகொண்டு சுடுபாறையில் கிடந்து உறங்கிய சமணர்தம் சமயக் கட்டுப்பாட்டிற்கு உட்

பட்ட ஒழுகலாறுகள் நடைமுறை வாழ்க்கையில் சாதாரண மக்களுக்கு அச்சத்தையும், வியப்பையும் ஏற்படுத்தி இருக்க வேண்டும். புலால் உண்ணாமை உயிர்க்கொலை தவிர்த்தல் என்ற அருளறங்களை வற்புறுத்தி வந்தனர். ஆயின் அக் காலத்து இவை சமுதாயப் பிரச்சனைகளாகப் பெரிதும் வலுக் கொள்ளவில்லை. இயல்பாக இவ் அறங்களை உணர்த்திய குறள் முதலான நீதி நூல்கள் மக்களைப் பெரிதும் பாதித்திருந்த தால், இவ் அறங்களைச் சமணர்வழி அறிந்து ஒழுக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கவில்லை. வள்ளலார் காலத்துத் தான் முஸ்லீம், கிறித்துவ சமயப் பாதிப்புகளால் சமுதாயப் பிரச்னைகளாக மாறிய இவ்விரு அறங்களையும் கடுமையாக வற்புறுத்த வேண்டிய தேவை ஏற்பட்டதெனலாம். அப்போது வள்ளலர்ர், ''உயிர்க் கொலையும் புலைப்பொசிப்பும் உடை யவர்களெல்லாம் உறவினத்தார் அல்லர் புறவினத்தார்'' எனக் கடுமையாகத் தாக்கும் நிலை ஏற்பட்டதை நோக்க வேண்டும்.

பௌத்தர்கள் துவராடை போர்த்த மேனியராய்த் திரிந் ததன்றி, கொல்லாமை நோன்பினை மட்டும் ஏற்றுக் கொண்டு முயற்சியின்றிப் புலால் உணவு கிடைத்தால் உண்ணுவதில் பிழையில்லை என்ன ஊனுண்ணும் பழக்கத்தினைக் கடைப் பிடித்தனர். சமணர் கையில் ஏற்று நின்றுண்டனர்; பௌத்தர் மண்டைக் கலனேந்தி இருந்து உண்டனர். அன்றாட வாழ்க்கையில் இங்ஙனம் மாறுபட்டப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்ததோடு வேதவேள்விகளையும் சைவ வைணவ சமய வழிபாட்டு முறைகளையும் இகழ்ந்து, அகச்சமயிகளை வாதிற்கழைத்து வல்வழக்காடித் திரிந்தனர்.

இவற்றிற்கெல்லாம் மேலாக மக்களின் மெல்லிய உணர் வுகளைப் பாதிக்கும் மொழிப் பிரச்சனையும் இச்சமய மோதல் களில் இடம் வகித்தது கருதத்தக்கது. மக்கள் மொழியை மதிக்காது, வடமொழியையும், தமிழையும் உருச் சிதைத்து விரவு மொழியாக்கி மணிப்பிரவாள நடையில் பேசினர். பாகத மொழியைப் பேசித் திரிந்தனர்.

இச்சூழலில் சம்பந்தர் புறச்சமய எதிர்ப்பினை இயக்கு மாகவே நடத்த வேண்டிய கட்டாயத்திற்காளானார் எனலாம். சமுதாய நல வாழ்விற்கும், மக்களிடத்து நம்பிக்கை ஊட்டிச் சமயத்தைப் பரப்புதற்கும் கடுமையாகவே போராட வேண்டிய தேவை ஏற்பட்டது. இறை அருளும், இளமை மிடுக்கும், மக்கள் ஆதரவும், அறிவுத் தெளிவும், அஞ்சாமையும், மொழிப் புலமையும் நல்லவர் ஆதரவும் கைகொடுக்கச் சம்பந்தர் புறச் சமய எதிர்ப்புப் போரில் வீரங்காட்டி வெற்றி பல கண்டார்.

''குண்டமணராகி யொரு கோலமிகு பீலியொடு
குண்டிகை பிடித்து
எண்டிசையு மில்லதொரு தெய்வமுளதென்பர்
அது என்ன பொருளாம்''

என்று கேள்வி கேட்டு அவர்கள் தெய்வமிலிக் கொள்கையை மறுத்தார்.

''பல்சமணும் புத்தரும் நின்றலர் தூற்ற''
''தொலையாதங் கலர் தூற்ற''

''நீற்று மேனிய ராயினர் மேலுற்ற
காற்றுக் கொள்ளவும் நில்லா அமணர்''

என்று அவர்கள் அகச்சமயிகளைக் கடிந்து பழித்துரைத்து நின்றதைக் குறித்து அவர்களை எதிர்க்க வேண்டிய கட்டாயத் தினைக் குறிப்பாகச் சுட்டிக் காட்டுவார். எனவே, அவர்கள் சொல்லைக் குறிக்கொள்ளாது, 'நன்றியில் சமயத்தார்' நெறியினின்றும் விலகி 'தாயானவன் உயிர்கட்குமுன் தலை யானவன்' அடிபணிந்து உய்ய வேண்டுமென மக்களை அன்பினால் வேண்டி அழைத்தார்.

''போதியாரும் பிண்டியாரும் புகழல சொன்னாலும்
நீதியாகக் கொண்டருளும் நிமலன்''

எனவும்,

''குண்டருங் குணமில்லாச் சமண் சாக்கியரும்
மிண்டர்கள் மிண்டவை கேட்டு வெகுளேன்மின்''

''சாவாயும் வாதுசெய் சாவகர் சாக்கியர்
மேவாத சொல்லவை கேட்டு வெகுளேன்மின்''

என்றும் சம்பந்தர் கூறுவன, இச்சமயப் பூசல்களுக்கு அப்பால் அமைதியான நல்வாழ்வு மேற்கொண்டு மக்கள் சமுதாயம் அன்பு வாழ்வு வாழ வேண்டும் என்ற வேட்கையைக் காட்டுகின்றன.

பாண்டிய நாட்டில் நிகழ்ந்த சமயப் போராட்டம் வரலாற்று நிகழ்வாய் அன்றைய தமிழ்நாட்டுச் சமயப் பூசல் களுக்குச் சான்றாய் அமையக் காண்கின்றோம். இங்கொரு குறிப்பு மனங்கொள்ளத் தக்கது. இல்லற நெறி கடிந்து இயற்கைக்கு மாறுபட்ட நெறிகளை வற்புறுத்தி ஒருவகையில் பெண்மைக்கு இழிவு தேடிய புறச்சமயங்களை ஒழிக்கும் போராட்டத்தில் மங்கையர்க்கரசியார், திலகவதியார் போன்ற பெண்மணிகள் ஈடுபட்டு வெற்றி கண்டது தமிழ்ச் சமுதாயத் தின் பண்பாட்டு வளர்ச்சியில் மகளிர் பெறும் சிறப்பிடத்தை யும், பங்கினையும் காட்டுகின்றது.

ஞானசம்பந்தர் புறச்சமயிகளின் தோற்ற, ஒழுகலாறு களைக் கடுமையாகப் பழித்து, அவர்களின் கோட்பாடுகளின் புன்மையை விளக்கிப் போராடிய போக்கினைப் பதிகங்கள் காட்டும். இதன்வழிக் கொள்கை எதிர்ப்புக் காட்டப்பெற்றது. அடுத்து நேரடித் தாக்குதலாய் மதுரையில் எதிர்கொண்ட நிகழ்ச்சிகளில் அவர் மேற்கொண்ட செயல்முறைகள், செயல் வழியிலான எதிர்ப்பினைக் காட்டின. ஆயின் தொண்டரடிப் பொடி ஆழ்வாரைப் போல,

வெறுப்பொடு சமணர் முண்டர் விதியில் சாக்
கியர்கள் நின்பால்
பொறுப்பரி யனகள் பேசில் போவதே நோய தாகிக்
குறிப்பெனக் கடையு மாகில் கூடுமேல் தலையை
யாங்கே
அறுப்பதே கருமங் கண்டாயரங்கமா நகருளானே''

என்று வேகமும் கடுமையுமாய் நேரடித் தாக்குதலைக் காண வியலாது. எனினும், ''புத்தர், சமண் கழுக்கையர் பொய் கொளாச் சித்தத் தவர்களாய்'' மக்கள் உண்மை அறிந்து ஒரு

நெறியில் மனம் வைத்து உய்தி பெற வேண்டும் என்பதற்கு மேற்கண்ட பணியே புறச்சமய எதிர்ப்புப் பணி எனக் கொள்ளல் வேண்டும்.

இன்று நாம் வாழும் காலத்துத் தீண்டாமை ஒழிப்பு முதலான சீர்திருத்த இயக்கப் போராட்டங்கள் இந்து சமய எதிர்ப்பாய் நிலைகொண்டு சமுதாயத்தினைத் திருத்துகின்ற முறையில் நடைபெற்றதை நினைத்துப் பார்க்கிறோம். தந்தை பெரியார் தலைமையில் சாதி, சமயச் சடங்காச்சாரங் களின் பெயரால் மனிதனை மனிதன் இழிவு செய்யும் தீண்டத் தகாதார் பிரச்சனைக்கு முடிவு காண வைதிக நெறி முறை களைக் கடிந்தும் பிராமணர் எதிர்ப்பு இயக்கமாய் வலுக் கொண்டும் சிலைகளை உடைத்தும் ஆலயப் பிரவேசம் செய்தும், பௌராணிக சமய நடைமுறைக் குறைபாடுகளைச் சுட்டியும் இப்போராட்டங்கள் அமைந்தமை நாம் அறிந்ததே. அன்று திருப்பாட்டுக்கள் செய்த பணியினை மேடைச் சொற் பொழிவுகளும், பத்திரிகைகளும் இன்று நடத்திக் காட்டின. பக்தி இயக்கம் வேறொரு பரிமாணத்தில் சமுதாய நலம் விழையும் போக்கில் காலத்திற்கேற்றக் கருத்து நிலை மாற்றத் தில் பகுத்தறிவு இயக்கமாகக் கால் கொண்டது எனலாம். எல்லாவற்றிற்குமான அடிப்படையினை ஆராய்ந்தால் மானுட நலம் பேணல் என்ற கோட்பாடே மிஞ்சுகிறது. சமயத்தின் பேராலோ, சாத்திரங்களின் துணையாலோ, அரசியல் ஆதர வாலோ, கல்வி, கலை, பொருளாதாரப் பண்பாட்டுத் தலைமை யாலோ மனிதனை மனிதன் மதிக்காது, மண்ணிற்குப் புறம் பாய பண்பாட்டு நெறிகளைத் திணித்து நிலைநாட்ட முற்படும் எந்த ஓர் ஆதிக்கப்போக்கும் எதிர்ப்பினை எதிர்கொண்டு பூசல் முரண்பாடுகளில் அழிதல் ஒருதலையாகிறது. எனவே சமயப் பூசல்கள், சாதி வேறுபாடுகள், சாத்திரச் சழக்குகள் எல்லாம் காலந்தோறும், இடச் சூழல் அமைவுகளுக்கேற்ப வேறுவேறு வரலாற்று நிகழ்வுகளாய் வடிவம் கொள்கின்றன. காலத்திற்கேற்றவண்ணம் எதிர்ப்புகளும் வேறு வேறு நிலையில் வெளிப்படுகின்றன.

3. தமிழ்மொழி நிலைநாட்டல்

சமயப் பரப்பல், புறச் சமயத் தாக்குதல் என்ற இருபெரும் தொண்டுகளுடன் இணைந்து அமைந்த நோக்கங்களில் தமிழின் சிறப்பினைப் போற்றி நிலைநாட்டலும் ஒன்றாக அமைகின்றது. "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய் அண்ணாமலை உறையும் அண்ணல் கண்டாய்'' என்று நாவரசர் இருமொழிக்குருகும் ஒருபெருங்கடவுளாய்ச் சிவனைக் காண்பார்.

> **''தம்மலரடியொன் றடியவர் பரவத் தமிழ்சொலும்**
> **வடசொலும் தாள் நிழற் சேர''**

என்று சம்பந்தரும் நாவரசர் கூற்றினையே ஏற்று மொழிவார். ஆயினும் முன் குறிப்பிட்டதுபோல வைதிக நெறி வழி இறையுணர்வு ஊட்டுவதினும் பண்டைத் தமிழர் வழிப்பட்ட சைவ நன்னெறியினைப் பரவச் செய்து அதன் மூலம் சிவஞானம் பெருக்க வந்த சம்பந்தர், மக்கள் உகக்கும் முறையில் தாய் மொழி வழியிலான பக்திப் பெருக்கத்தையே விரும்பினார்.

> **''திசையனைத்தின் பெருமையெலாந் தென்றிசையே வென்றேற**
> **மிசையுலகும் பிறவுலகு மேதினியே தனிவெல்ல**
> **அசைவில் செழுந் தமிழ்வழக்கே யயல்வழக்கின் றுறைவெல்ல**
> **இசைமுழுது மெய்யறிவு மிடங்கொள்ளு நிலைபெருக**

திருவவதாரம் செய்தார் எனப்பாடும் சேக்கிழார், சம்பந்தரின் திருப்பிறப்புத் தோற்றத்திற்கான காரணிகளில் 'வண்டமிழ் செய் தவம்' நிரம்புதலும், தமிழ் வழக்கு வழிபடு தெய்வ வழிபாட்டு முறை நிலைநாட்டப் பெறலும், நற்றமிழுக்கு இன்துணையாக அதனை மேன்மையுறச் செய்தலும் ஆன தமிழார் திருத்தொண்டுகள் சிறப்பிற்குரியன என்பதனைத் தெளிவுபடுத்துகின்றார்.

''தென்தமிழ் விளங்க வந்த திருக்கழுமலத்தோன்''

என்று தம்மைக் குறித்துப் பேசுவார் ஞானசம்பந்தர். அவர் திருத்தொண்டுகளில் ''பல ஓசைத் தமிழவையும் உண்ணின்ற தோர் சுவையுமாய்''த் திகழ்ந்து தமிழவனாய் நின்ற சிவனைப் பாடித் தமிழுக்கு ஆக்கம் தருதலும் ஒன்றாக அமைகின்றது. நாளும் இன்னிசையால் இறையுணர்வினையும் இன்தமிழ் உணர்வினையும் ஒருங்கு மக்களிடம் பரப்புதல் அவர்தம் நோக்கம் என்பார் போல, ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்'' என்று திருக்கோலக்காப் பதிகத்தில் சுந்தரர் போற்றிக் கூறுவதும் குறிக்கத்தக்கது. ''நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்'' என்று பிறிதோரிடத்தும் தாம் நல்ல தமிழைக் கற்றுணர்ந்து அதன் மேன்மையை உணர்த்த வந்தவர்போல் பாடுவார். சங்கத் தமிழாய் அகமும் புறமும் பேசி உலகியல் நன்மைகளை உகந்து உரைக்க வல்லதாய் உருவாக்கம் பெற்ற தமிழ், சம்பந்தர் வரவால் வீடுபேற்றினுக் கான வழியினைக் காட்டும் ''ஞானத்தமிழாய்'' உயர்நிலை அடைந்தது.

''சந்தங் கொள் சம்பந்தன் தமிழ்'' என்ற இசையும் சந்தமும் கொண்ட இனிய தமிழ் ஞானசம்பந்தர் மொழிக்குத் தந்த பெருங்கொடையாம். பொருண்மை நோக்கில் 'திருநெறிய தமிழாய்' வீட்டின்பம் உய்க்கவல்ல திருவார் பெருநலம் பெற்றது.

''தமிழ் நாடு ஞான சம்பந்தன்'' எனத் தம்மை அழைத்துக் கொள்வார். நாளும் தமிழ் நாட்டங் கொண்டவராய் அதன் சீர்மைகளைக் காக்கவும் புதுமைகள் சேர்க்கவும் தமிழாகரனாய் விளங்கி மொழித் தொண்டு ஆற்றிய பெருமையை இதன்வழி உணரலாம்.

''தமிழ்க் கிழமை ஞானன்'' என்று தமிழோடு தமக்குள்ள உறவையும், உரிமையையும் நிலைநாட்டுவார். ''பாரினார் தமிழ் ஞானசம்பந்தன்'' எனக் கூறி உலகளாவிய உயர்புகழ் உடையது என்று மொழியின் உயர்வினைப் பறை சாற்றுவார்.

நல்லவாய இன்தமிழ் நவிலும் ஞானசம்பந்தர் தம் திருப் பாட்டுக்களில் தமிழின் ஆக்கத்திற்கும், புத்திலக்கிய வகைமை வளர்ச்சிக்கும் ஆற்றிய படைப்பாக்கத் தொண்டுகளை 'இலக்கிய நெறிகள்' என்ற முதல் சொற்பொழிவில் விளக்க மாகக் கண்டோம். இவர் முத்தமிழுக்கு மூல இலக்கியங்கள் தந்த வித்தகராய் விளங்கிய திறமும் அங்குப் போற்றப் பெற்றது.

அருந்தமிழ்ப் பாடற் புலமையால் இறைவனை இசைவித்து அவன் அருள் பெற்றுச் சைவசமயத்தை நிலைநாட்டியது, புறச்சமயப் புன்மைகளை ஒழித்துப் போராடுகையில் தமிழின் தெய்வ ஆற்றலைக் காட்டுவார் போலப் பச்சைப் பதிகம் பாடியது, நீருக்கும் நெருப்புக்கும் இரையாகாத என்றும் உள்ள இன்றமிழின் இறைமைத் தன்மையை வலியுறுத்தியது, பண்ணார் பதிகங்கள் கொண்டு அற்புத நிகழ்வுகள் சிலவற்றை நிகழ்த்தி மக்கள் தொண்டாற்றியது போன்ற பதிகங்கள் வழிப் பெறுகின்ற சான்றுகள் எல்லாம் மொழியின் திறனை விளக்கிக் காட்டும் பான்மையன எனக் கொள்ளலாம்.

சம்பந்தருக்கு முன் தமிழின் சீர்மைகளைப் பாராட்டி அதனால் எதனையும் சாதிக்க முடியும் என்று வற்புறுத்தும் நிலை இல்லை. இவருக்குப் பின்னரும், மறுபடியும் வடமொழி, ஆங்கிலம் என்ற பிறமொழி ஆதிக்கத்தால் தமிழை நிலை நாட்ட வேண்டிய நிலை பாரதிக்குத்தான் ஏற்பட்டது. காலந்தோறும் மொழி உணர்வினையும், இன உணர்வினையும், பண்பாட்டு உணர்வினையும் மூட்டி, தமிழச் சாதிக்கு வலிமை ஊட்ட வேண்டிய நிலை ஏற்படுவதைத் தவிர்க்க முடிவதில்லை. தமிழ் இனம் போல் நெகிழ்ந்து குழைந்து பிறப் பண்பாட்டுப் பாதிப்புகளுக்கு ஆளாகித் தம் பண்பாட்டுப் பெருமைகளைப் புறக்கணித்துக் கைவிடும் ஓர் இனத்தை இந்தியாவில் காண முடியுமா என்பதும் ஆய்விற்குரியது.

இத்தனையும் இங்குச் சொல்ல வேண்டிய தேவை என்ன? என்று கேள்வி எழலாம். தமிழக வரலாற்றுப் போக்குகளில் அப்போதைக்கப்போது ஏற்படும் மொழிவழிப்பட்ட, இன வழிப்பட்ட சில முரண்படு போக்குகளின் உண்மைகளை

உணரவேண்டிய தேவை உள்ளது. முன்னர்க் குறிப்பிட்ட பகுத்தறிவு இயக்கமும் கூடத் தமிழைப் பிரச்சார சாதன மாக்கித் தனித்தமிழ் உயர்வு என்ற புதிய கோணத்தில், மக்களிடையே பகுத்தறிவுசார் சீர்திருத்த உணர்வுகளைப் பதியச் செய்ய அவ்வியக்கம் சார்ந்த கவிஞர்களும் படைப் பாளிகளும் முனைந்து நின்ற நிலையினையும் இங்கு எண்ணிப் பார்க்கலாம்.

வாழ்க்கையில் ஒரு கூறாகக் கருதப்பெற்ற இறைச் சிந்தனைக்கு வடிவமும் வாழ்வும் தந்து நிறுவன முறையிலான (Institutionalised) சமயமாக மாற்றும் புதுமை நெறிக்கு வித்திட்டு நீரும் ஊற்றி வளர்த்தவர் ஞானசம்பந்தர். புறச் சமயங்களை ஒதுக்கிச் சைவ சமயத்தை நிலைநாட்டலுக்குத் தாய்மொழியும் பெரிதும் துணைநின்ற வகையில் சமயத்தால் தமிழ் வளர்ந்த திறமும, தமிழால் சமயம் போற்றப்பட்ட முறையும் பெரிதும் பாராட்டற்குரிய புதுமைப் போக்குகள் மட்டுமல்ல, பண்பாட்டு வளர்ச்சியில் சமயமும் மொழியும் பெறும் இடத்தையும் வரையறுக்கும் திறம் கொண்டன என்பதையும் உணர்தல் வேண்டும்.

தனி இனத்திற்குரிய சமய எழுச்சி தற்சார்பு கொண்ட தாக அமையாது மானுடம் தழுவிய ஒட்பமுடையதாய் மனித மதிப்பீடுகளைப் போற்றி நின்றதும் குறிப்பிடத் தக்கது.

"மனிதனை, அவன் இயல்பினை, அவன் ஆக்கத்தின் வரலாறு, இலக்கியம், கலை ஆகியவற்றின் மையக் கருத் தாகக் கொள்ளும் மெய்யியலும் கண்ணோட்டமும் "ஹ்யூமனிஸம் (மானுடம்) எனப் பெறும்".[5] எனத் தனிநாயக அடிகளார் குறிப்பர். மனிதனுக்குரிய மதிப்பினை, அவன் ஆளுமைத் திறனை வளர்ப்பதற்குரிய சுதந்திரத்தை, அவன் பெறுகின்ற முறைகளில் அற முறைகளும், சமயச் சிந்தனை களும் துணை நிற்க வேண்டும். அவன் வளர்ச்சிக்குத் துணை யாக வேண்டியவையே அறக் கோட்பாடுகளும் சமய நெறி முறைகளுமாம். மனிதனைவிட நுட்பமான, அழகிய, அவனை விடப் பண்முகக் கோலங்கொண்ட சுவையான படைப்பு

வேறொன்றைக் காட்ட முடியாது. மனிதனே எல்லாம் என்று மானுடமேன்மையினை மாக்சிம் கார்க்கி பாராட்டி மகிழ்வார். எனவே மனிதனையே முதலும் முடிவுமாகக் கொண்டு உருவாக்கப் பெறும் படைப்புகள் சமயஞ் சார்ந்தனவாயினும் அல்லாத புறநீர்மை கொண்டவாயினும் அவனை முதன்மைப் படுத்தியே உருவாக்கப் பெறுதல் வேண்டும். மனிதனுக்காக சமயமன்றிச் சமயத்திற்காக மனிதன் அல்லன். வைணவத்தின் அடிப்படையான அவதாரக் கோட்பாடு மானுடக் கோட்பாட்டிற்கு வழிவகுப்பதைக் கம்பர்,

> *"தேறினேன் – அமரர்க்கு எல்லாம் தேவர் ஆம் தேவர் அன்றே*
> *மாறி இப் பிறப்பில் வந்தார் மானுடன் ஆகி மன்னோ?*
> *ஆறுகொள் சடிலத்தானும்; அயனும் என்று இவர்கள் ஆதி*
> *வேறு உள குழுவையெல்லாம் மானுடம் வென்றது அன்றே"*

என்று காட்டுதல் ஒப்பிட்டு அறிதற்குரியது. இம் மானுட மேம்பாட்டுச் சிந்தனையைத்தான் சம்பந்தர் சமயங்களுக்கு அப்பாற்பட்ட மானிட நேயக் கோட்பாடாக வைத்து "ஆழ்க தீயதெல்லாம்" என்று அல்லன அழிந்து நல்லனவே சிறக்கப் பெற்று அரசும் மக்களும் வாழ வேண்டும் என்ற பொதுமை அன்பில் வலியுறுத்துவதை முன்னரும் கண்டோம். சமயக் கோட்பாடு பற்றிய மூன்றாம் சொற்பொழிவில் இவ் இன்ப அன்பு நெறி, உருவ நெறியில் அழுந்திச் சிறந்து, காலந்தோறும் மாற்றம் பெற்று இந்நூற்றாண்டின் தொடக்கத்து மனித நேயத்திற்கும் அப்பாலான ஆன்மநேயமாகக் கருத்துப் பொருண்மைப் போக்கில் உயர்ந்து நின்ற படிநிலை வளர்ச்சி வாழ்வினை விரிவாகக் காணலாம். இறை அன்பு, பிறர் அன்பு என்ற இருபெரும் நெறிமுறைகளே கிறித்துவ சமயத்தின் சாரம் என்பதை விவிலியம் "இயேசு மறுமொழியாக "இஸ்ராயலே கேள்; நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே

ஆண்டவர். ஆகவே உன் கடவுளாகிய ஆண்டவருக்கு உன் முழு உள்ளத்தோடும் உன் முழு ஆன்மாவோடும் உன் முழு மனத்தோடும், உன் முழு வலிமையோடும் அன்பு செய்வாயாக'' என்பது முதற்கட்டளை. ''உன்மீது நீ அன்பு காட்டுவது போல் உன் அயலான் மீதும் அன்பு காட்டுவாயாக'' என்பதே இரண்டாம் கட்டளை. இவற்றைவிடப் பெரிய கட்டளை வேறில்லை'' என்று கூறுவது ஈண்டு ஒப்புநோக்கி மகிழத் தக்கது. இதுவே சமயங்களின் உயிரும் உயிர்ப்பும், தரும்மும் நெறியுமாதல் முறை. இம்முறையினையே நோக்கமாகக் கொண்டு திருஞானசம்பந்தர் தமிழ்ப் பாடல்கள் அமைந்து சிறக்கின்றன.

அடிக்குறிப்புகள்

1. Henry Bamford Parkes, Quoted by J. M. Mundra Dr. C. L. Sahni, "Advanced literary Essays". Literature Reflects The Spirit of the Age. p. 109.
2. டாக்டர் கா. சிவத்தம்பி, "**தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும்**", ப.9.
3. சிவக்கவிமணி சி. கே. சுப்ரமண்ய முதலியார், திருத் தொண்டர் புராணம், **திருஞானசம்பந்தர் புராணம்**, ப.6.
4. J. Feys S. J. "Sri Aurobindo, yoga, religion mysticism" (Sri, L. D. Swamipannupillai Endowment Lectures, 1975-76) P.28.
   '(Man must be sacred to man)'
5. டாக்டர் கா. சிவத்தம்பி, முன்னூல், மேற்கோளாய் ஆளப்பெற்றது, ப. 130.

3. சமயக் கோட்பாடு

> "கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
> வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
> கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

என்பது தொல்காப்பியம். இந்நூற்பாவிற்கு, "அவை மூன்றும் கடவுளை வாழ்த்தி வணங்கி நினைந்து வழிபாடாற்ற விழை வார் கொள்ளத்தகும் மூன்று வகையான கடவுள் நிலைகளாம் என்றும், அவற்றுள் கொடிநிலை என்பது உருவமாகப் திருமேனி கொண்டெழுந்தருளும் காட்சி பெற விழையும் அன்பர்கட்குக் கொடியைப் பற்றுக் கோடாகக் கொண்டு அன்பர்கள் விழைந்த வாறே உருவத் திருமேனியுடன் வரும் கடவுள் நிலை என்றும் கந்தழி நிலை என்பது யாண்டும் நீக்கமற நிறைந்து அருவமாக நின்று, தத்துவக் கூறுபாடுகள் அனைத்தும் உணர்ந்து அறிவு நெறி பற்றி நிற்பார்க்கு மெய்யுணர்வு கொள்ளச் செய்யும் கடவுள் நிலை என்றும், வள்ளிநிலை என்பது அவர்கட்கு வீட்டின்பம் வழங்கும் அருள் நிலையான கடவுள் நிலை என்றும்"[1] பொருள் காண்பார் டாக்டர் மொ. அ. துரை யரங்கனார். இதனால் பண்டைத் தமிழ் இறைநெறி உருவ நிலையிலும், அருவ நிலையிலான தத்துவப் பொருண்மை நிலை யிலும், பயன்பாட்டு முறையிலான அருள்நிலையிலும் ஆக முத்திறக் கூறுகளைக் கொண்டு அமைந்த திறம் உணர முடிகின்றது. ஆயின் சமய நிறுவன அமைப்பாட்டு வகையில் இம்முத்திற நெறிகளும் கால்கொண்டு, அவற்றுவழி வழிபடு நெறிக்குரிய கோட்பாடுகளையோ, தத்துவப் பொருண்மைக் குட்பட்ட கொள்கைகளையோ வரையறுத்துக் காணும் நிலை அன்று இல்லை. தீயில் வெம்மையாய்த் திங்களில் தன்மை யாய், இயற்கையில் பல்திறக் கூறுகளின் இயல்பாய்க் கண்டு ணர்ந்து போற்றிய பரிபாடல் தெய்வ வழிபாட்டு நிலை, வாழ்த்து முறையாய் அமைந்தது.

> "யாமிரப்பவை பொன்னும் பொருளும் போகமுமல்ல
> நின்பால் அருளும் அன்பும் அறனும்"

என்று வேண்டும் அன்பர்களின் உள்ளக்கிடக்கை உலகியல் தடத்தினின்றும் உயர்ந்து, பயன் எதிர்நோக்கா பண்புநிலை

வெளிப்பாடாக அமைந்த திறமும் எண்ணி வியப்பதற்குரிய தாம். பின்னரும் கோட்பாட்டு உருவாக்க நிலையில் சமயத் தொடர்நிலை வளர்ச்சியைத் தமிழகத்தில் முறையாகக் காண இயலவில்லை. எனினும் மணிமேகலை, சைவவாதியின் கூற்றாகச் சிவனின் பண்புகளை முதன் முறையாக வரையறுக்கக் காண்கின்றோம்.

"இருசுட ரோடு இயமானன் ஐம்பூதமென்
றெட்டு வகையு முயிரும் யாக்கையுமாய்க்
கட்டி நிற்போனுங் கலையுருவி னோனும்
படைத்து விளையாடும் பண்பினோனும்
துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனும்
தன்னில் வேறு தானொன் றிலோனும்"[3]

என்று சிவன் அநாதி காலம் தொட்டுத் 'தோற்றிய திதியாய், 'அவன் அவள் அது' எனும் உயிரும் உலகமுமாய் நின்று, படைத்தல், காத்தல், அழித்தல் என முத்தொழில் புரிந்து, உயிர்களின் துயர் துடைத்துத் தன்னைத் தவிர பெரியோன் ஒருவனைத் தான் பெற்றிலனாய், யாண்டும் நீக்கமற நிறைந்து இலங்கும் இயல்பினை விளக்குகின்றது. இறை, உயிர், கட்டு என்ற சித்தாந்தப் பொருண்மையின் மூலக்கூறுகளை இங்கு அறிந்து கொள்ள முடிகின்றது. பின்னர் எழுந்த திருமந்திரம் முதல் தத்துவ நூல் என்று பெயர் பெறினும், மக்களைச் சென்றடையும் கொள்கை விளக்க நூலாக அமையாமை நோக்குதற்குரியது. காரைக்கால் அம்மையார் திருப்பாடல் களில் இறை இயல்புகளையும், வழிபடு முறைமைகளையும் இறைமை அருள்திற நலன்களையும் ஆங்காங்குக் கண்டு மகிழ முடிகின்றது. ஆயின் திருஞானசம்பந்தர் காலம் தொடங்கியே வேறுவேறு சமய நிலைபாடுகளுக்கிடையில் நிறுவன முறை யிலான சைவ சமய நிலைபேற்றிற்கான சூழலும், தேவையும் எழுந்தமையால் சமயக் கோட்பாடுகள் பற்றியும் சிந்திப்பதற் கான நிலை அன்று தொடங்கி ஏற்பட்டது எனலாம். சம்பந்தர் திருப்பாடல்கள் வழி அறியலாகும் சமயக் கோட்பாடுகளை அவர் சித்தாந்த அடிப்படையில் வரன்முறைப்படுத்தி சாத்திரப்

படைப்பாக்கத்திற்கு வழிகோலினார் என்று முடிவு காண இயலாது. அவர்தம் திருப்பாடல்களின்வழிச் சைவ சமயத்தின் அடிப்படை உண்மைகளையும், நெறி முறைகளையும் காண்பதற்கான வாய்ப்புக் கிடைக்கிறது என்றே கொள்ள வேண்டும். ஆகம நெறியினைப்பெரிதும் வலியுறுத்தும் சம்பந்தர் மக்கள் சமயமாகச் சைவத்தை முறைப்படுத்த மேற் கொண்ட நெறிகளின் வாயிலாகச் சிவநெறியின் கோட்பாடு களை வகைப்படுத்த முடியும். அன்றியும் பின்வந்த பண்டார சாத்திரங்கள் பதினான்கும் அறிவுபூர்வமாக வரையறைப் படுத்திய சித்தாந்தப் பொருண்மைகளுக்கான மூலவித்துக் களை அவர்தம் பாடல்களில் தெறிப்பாகச் சில இடங்களில் காணும் வாய்ப்பும் கிடைக்கின்றது. எனவே சமய நிறுவன நிலைபாட்டில், கொள்கை உருவாக்கம் என்பது இயல்பாகத் தோன்றுகின்ற தன்னிலை வளர்ச்சி என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டிய வழிபாட்டு நெறிகள், தத்துவப் பொருண்மை நோக்கில் அமைகின்ற கோட்பாட்டு நெறிகள் என்ற இருவகைப் போக்கில், சம்பந்தர் திருப்பாட்டுக்கள் முன்னதன் கூறுகளை மிகுதியும் கொண்டி லங்குகின்றது. அன்பு நிலை, அறிவு நிலை, அருள் நிலை என்ற வெளியீட்டு நிலைகளில் அன்பு வடிவமாகவும், அறிவு மயமாகவும், அருள் உருவாகவும் இறைவனைக் கண்டு உணர்ந்து பயன்பெற முடிகிறது. அறிவு நிலையில் 'கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி'யாக இறைவனை அறியும் வாய்ப்புக் கிடைக்கின்றது. ஆயின் சமயம் மக்களைச் சென்றடைந்து அவர்களின் இவ்வுலக நல வாழ்விற்கான வழிகாட்டியாகவும், மறு உலகப் பேறு அடைதற்கான நெறி காட்டுவதாகவும் அமைய வேண்டுமென்றால், அது காட்டும் இறைவன் அவர் களால் எளிதில் உணரக் கூடியவனாகவும், அருளாளனாகவும் அமைந்திருத்தல் வேண்டும். உருவ வழிபாட்டின் உட்கிடக்கை இதுவாகும். எனவே, உருவ நெறிப்படு சமயக் கோட்பாடு கள் நாளும் கடைப்பிடிக்க வல்ல வழிபாட்டு நெறிகளை

முறைப்படுத்துவனவாக அமைய வேண்டும். இறைவன் எளியனாகவும், கருணையாளனாகவும், 'எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியாருக்கு இங்கே என்றருளும் ஆதிப்பிரான்'' என்றபடி, தானாக வந்து தலையளி செய்வான் என்ற நம்பிக்கையை ஊட்டுதல் இன்றியமையாத தாகும். வைணவர்கள் இவற்றை முறையே சௌலப்யம் என்றும், வாத்சல்யம் என்றும் குறித்து மகிழ்வர். அன்றியும் நல்லவர்களைக் காக்க அல்லாதாரை ஒறுத்தருளும் மறக் கருணையும் இறைவனிடம் கண்டு மகிழ்தல் இயல்பாகிறது. இங்கு இறைபற்றிய புராண நிகழ்வுகளின் தேவை உணரப்படுகிறது.

இறை உண்மையை வலியுறுத்தல், இறைப்பற்றினை ஊட்டுதல், இறையருளை நாடுதற்கான நெறிமுறைகளை உருவாக்குதல் என்ற படிநிலை வளர்ச்சியின் மேல்நிலைத் தளத்தில் இறைத்தத்துவம் ஞானபரமாக நிலைநாட்டப் பெறும். வேறுவேறு சமயங்களும் இப் படிநிலை வளர்ச்சியில் ஒன்றியும், வேறுபட்டும், தனித்தும் கோட்பாடுகளை உருவாக் கியுள்ள திறன்களை நாம் நூல்கள் வழி அறிகின்றோம். ஜைனம் வீட்டின்பத்தையே பெரிதும் வலியுறுத்தி அதை அடைய நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் என்ற "இரத்தினத் திரயத்தை'' மிகுதியும் வலியுறுத்துகின்றது. பிதாவாய்க், குமாரனாய்ப் பரிசுத்த ஆவியாய் ஒன்றிய மூன்றின் திரித்துவ வடிவில் இலங்கும் பரம்பொருளைப் புகழ்தல், தன் பாவங்களுக்காக மானிடன் கழிவிரக்கம் கொண்டு வருந்துதல், இறை மன்னிப்பினை இறைஞ்சி நிற்றல் அவன் தன்னையே பலி கொடுத்து உலகரைக்காத்த நன்மைக்கு நன்றி பாராட்டல் என்று கிறித்துவ சமயம் இறை உண்மை யையே பெரிதும் வலியுறுத்தி அவன் அன்பையும், அருளையும் முதன்மைப் படுத்தக் காணலாம்.

இறைவன் ஒருவனே. அவனிடத்தும் தேவதூதரிடத்தும் நபிகளிடத்தும் நீங்காத அன்பு கொள்ளுதல், மதச்சடங்குகளை முறையாகக் கடைப்பிடித்தல், நல்லொழுக்கம் ஆகிய மூன்றும் சேர்ந்ததே தீன் எனும் இஸ்லாமிய சமய சாரம். இவற்றோடு

குரான் ஓதி வழிபடுதலையும், தருமம் செய்தலையும் வற்புறுத்திச் செல்லும் இஸ்லாம். உருவ வழிபாட்டினை மறுத்தும், பின் ஒரு பிரிவாகப் பிரிந்து ஏற்றுக் கொண்டும், உலகத் துன்பங்களை முதன்மைப்படுத்தி,

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும் பேரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோர் உறுவது அறிக"

என யாக்கை நிலையாமையை வற்புறுத்தி உலகத்துப் பொருள்களெல்லாம் கணந்தோறும் தோன்றியழிவன என்ற புத்தசமயக் கோட்பாடு வாழ்வியல் நடைமுறைக்கப்பாலான பற்றறுக்கும் துறவினையே வலியுறுத்தியது. ஜைனமும் கடுமையான கட்டுப்பாடுகளை வரையறுத்து உலகினைத் துறந்து வாழும் துறவு வாழ்க்கையையே மிகுதியும் ஆதரித்தது. இவ்விரு சமயங்களின் கண்ணோட்டத்தில் வேத வேள்வி களும், சிவ, வைணவ தெய்வ வழிபாட்டு நெறிமுறைகளும் கண்டனத்திற்கும் இகழ்ச்சிக்கும் ஆளானதில் வியப்பில்லை. உயிர்க் கொலை தவிர்த்தல், அன்புவழி நிற்றல் என்ற மனிதா பிமானப் பார்வை இவ்விரு சமயங்களின் அடிப்படைக் கூறு களாய் அமைந்திருந்தாலும், வாழ்க்கை பற்றிய அவநம் பிக்கை, துறவு, கடுமையான ஒழுக்க வரன்முறைகள் எல்லாம், இன்ப அன்பின் இறையருளை நாடிப் பயன்பெற வேண்டு மென்ற அகச் சமயக் கோட்பாடுகளுக்குமுன் செயற்கை யாய்த் தோன்றின. வாழ்வுடன் சமயத்தைக் கலந்து இணைக்கும் போக்கில் தமிழ்வழிச் சமயங்களான சைவ, வைணவத்துக்கு இணையாகக் கிறித்துவ, இஸ்லாம் நெறி களை எண்ணிப் பார்க்கலாம். இன்றளவும் உலகளாவிய செல்வாக்கும் நடைமுறை வாழ்வும் கொண்டனவாக இச் சமயங்கள் நிலைபெற்றிருப்பதும் மானுட நோக்கிலான அடிப்படை நியதிகளைக் கொண்டமையாலாகும் என்பது ஒருதலை. எனவே சமயம், சமய அறிவு, சமய நடைமுறை கள் எல்லாம் சமுதாயப் பயன்பாட்டு நோக்கில் செயற்

படுகையில்தான் அவற்றின் தேவை உணரப்படுகிறது. இந் நிலையில் சமயம் பற்றிய கொள்கைகளும், பருப்பொருண்மைக் காட்சி நிலையிலும், கருத்துப் பொருண்மை வழிப்பட்ட தத்துவ உருவாக்கத்திலும் முறைப்படுத்தப்படுகின்றன.

நெறிகளுக்கெல்லாம் மிக உயர்ந்த நெறி அன்பின் வழி இறைவனை வழிபடுதலாம். அறிவு வழியானது உண்மை, இன்மை எனும் பொருள் வாதச் சிக்கலில் தடுமாறி, நாத்திகமாயும் வடிவம் பெறலாம். ஏதுக்களாலும், எடுத்த மொழி வாதங்களாலும் இறைவன் சோதிக்கப்படும் பொருளாய் விடுகின்றான். இன்னொரு நிலையில், இறை உண்மை தத்துவங்களாக எழுத்து வடிவங் கொண்டு கற்றவர், ஞானியர்தம் உயர்ஞான முதிர்ச்சிக்குச் சான்றுகளாய் நிலைபேறு அடைகின்றன. இதுவும் வேண்டுவதே.
இறைவன்,

> ''கரைந்து கைதொழுவாரையுங் காதலன்
> வரைந்து வைதெழுவாரையும் வாடலன்''

எனத் தேவாரம் செப்புவது போன்று அன்பு நெறியாயினும், மறுதலை நெறியாயினும் 'வேண்டுதல் வேண்டாமையிலானாகிய' அவன் எவ்வழிப்பட்டார்க்கும் அவ்வழி நின்று அருளுவதே இயல்பு என்பது சமயங்கடந்த பொது உண்மையாகும். ஆகவே, வாழ்த்தல், வெறுத்தல், அன்பில் அகங் குழைதல், அறிவில் ஞானநிலை நின்று ஓர்தல் என எவ்வகை நெறியினும் காணலாம் திறன் உடையான் இறை எனக் கொள்ளின், கோட்பாடுகள் பற்றிய அறிவெல்லாம் அவரவர் மனவிருப்பத்திற்கும், சமுதாயச் சூழலுக்கும் ஏற்ப மாறுபடும் தன்மையுடையது எனக் கொண்டமைவோம்.

பக்தி, அன்பு என்ற சொற்களெல்லாம் உணர்த்துவது ஒன்றே. இறையுணர்வு பெறல் என்ற மனநலம் வாய்க்கப் பெறுதலே அடிப்படை. வழிபாட்டு மனப்பான்மை இதயத்தின் இயல்பான பண்பாகும். ஏட்டினைப் புரிந்து கொள்ள எழுத்துக் கல்வி வேண்டும். இதயத்தை உணர்ந்து கொள்ள அன்பு பயில வேண்டும். உத்தமன் உறையும் கோயில்

இதயம். இதனை அறியவும் அன்பல்லாது வேறு வழியில்லை அன்பின் வழிப்பட்ட வழிபாட்டு முறையால் இறையன்பு மெருகேற்றப்படுகிறது. புறச்சடங்குகள், தவவிரதங்கள், வேள்வி ஞானங்கள் என்ற நடைமுறைகளுக்கப்பால் நிலைத்து நிற்பது முதிர்நிலை அன்பாகும். "அன்பு மார்க்கத்தைப் பின்பற்றியவர்களே ஆண்டவனை அடைந்தனர்" என்பார் குருகோவிந்தசிங். அன்புவழிப்பட்ட சீக்கிய மதத்தின் இன்றைய நிலையை நினைத்துப் பார்க்க வேண்டும். சமயக் கோட்பாடுகளை வரையறுத்துக் காலந்தோறும், மீண்டும் மீண்டும் மக்களுக்கு உணர்த்த வேண்டிய கட்டாயத்தினை இங்கு உணர்கின்றோம். 'யோகியாகட்டும் துறவியாகட்டும், ரிஷியாகட்டும், தபோதனர் ஆகட்டும் இவர்களுள் எவரும் அன்பின்றி அருள் தொண்டரின் வீட்டினை அடைய முடியாது" எனக் கபீர்தாஸர் கூறுவதும் அன்பின்வழி ஆண்டவனை அடையும் நெறியை வற்புறுத்தும் வகையாக அமைகிறது.

கூடும் அன்பினில் கும்பிட்டு வழிபாடு செய்யும் அடியார் கள் முதலும் முடிவுமாக விரும்புவது திருவடிப்பேறு ஒன்று தான். இதற்கான வழிமுறைகள் சமயக் கோட்பாடுகளின் நடைமுறைத் தன்மையை வெளிப்படுத்தி நிற்கும்.

ஆதிசங்கரர் பக்தி என்ற பதத்திற்கு விளக்கமும் பக்தி யின் இலட்சணமும் கூறும் வகையில் சிவானந்த லஹரி 61-வது சுலோகத்தில் உணர்த்தும் உரைமொழிகள் சிந்தையை மகிழ் வித்துத் தெளிவுபடுத்த வல்லன.

பரமேசுவரனுடைய திருவடித் தாமரைகளை மனது நாடி அடைந்து எப்பொழுதும் நிலைத்து நிற்கிறது. நிலைத்து நின்றால்தான் பக்தியென்று சொல்லப்படும். நாடும் வழியாது என்பதற்கான விடை தரும் வகையில் ஐந்து உவமைகளைக் கூறித் தெளிவு படுத்துவார்.

அழிஞ்சல் மரத்தின் விதைக்கூட்டம் மீண்டும்
அம்மரத்தைச் சென்று அடைந்து நிலை நிற்பதுபோல:
இரும்பு ஊசியானது காந்தக் கல்லை நாடி ஒட்டிக்
கொண்டு பிரியாது இருப்பது போல:

கற்புடை நங்கையின் மனம் கணவனிடத்தன்றி
வேறிடத்து இசையாதது போல;

கொடியானது அருகிருக்கும் மரம் நாடிப் பிணைந்து
பிரியாது சுற்றிக் கொள்வதைப் போல;

நதியானது பலகாதம் ஓடிக் கடலில் சென்று கலந்து
ஒன்றுவது போல,

மனமும் வினைக் கேடுகளால் பிரிந்து அலைந்து திரியினும் மீண்டும் உடையவனிடம் வந்து சேர்கின்றது. இரும்பைக் கவரும் காந்தமாய் இறை, உயிர் இவற்றின் பிணைப்புப் பிரிக்க முடியாக் கலப்பாய் ஒருங்கிணைகின்றது. உயிர் இறையன் பால் கவரப்படும் திறம் இது. புறம் புறம் திரியும் இயல் புடைய மனம் திரியாது கற்புடையாள் போல இறையனுபவம் ஒன்றிலேயே நாட்டங் கொண்டு ஒடுங்கி நிற்கின்றது. சார்ந்த தன் வண்ணமாகும் உயிர் சார்பு கெடச் சார்புகளினின்றும் நீங்கி, கொழுகொம்பைச் சுற்றிப்படரும் கொடியாய் இறைவனைச்சார்ந்து சுற்றித் தன்னைப் பிணைத்துக் கொள் கிறது. பலதிசையும் பலப்பட இயங்கும் உயிர், நதி கடல் கலப்பாய், இறுதியில் இறைவனிடத்து ஒன்றி உடனாகின்றது. இங்ஙனம் ஒருமனம் வைத்து, புறமே போகாமல் ஒன்றிய நினைவில், பற்றற்றான் பற்றினைப் பற்றிச் சார்ந்து ஒன்று கலக்கும் உறவு நிலையை அடையவே பக்தி செய்ய வேண்டும் என்ற உண்மையை உணர்வோம்.

பக்தி செய்தல் என்றால் அன்பினைக் கொடுப்பது, அருளினைப் பெறுவது. 'கொடுக்ககில்லா வரமும் கொடுத் தருள்வான்' என்பார் சம்பந்தர். வாழும் வாழ்க்கைக்குப் பொருள் உண்டு. இறையுணர்தல் என்பதே அப்பொருண்மை யாம். "வாழ்ந்த நாளும் இனி வாழும் நாளும்" பொருளு டையனவாக, பொருளற்று வீழ்ந்த நாள் பற்றி நினைந்து அழியாது, இறையினைச் சூழ்ந்த உள்ளம் உடையராய் வாழப் பழக வேண்டும் என்பதும் அருளாளர் கண்ட வாழ்வுக் கோட்பாடாகிறது.

இப்பின்புலத்தில் வாழ்வுடன் நெருங்கிய உறவு கொண்டு மக்களை நெறிப்படுத்திய சைவ சமயக் கோட்பாடுகள் பற்றிச் சம்பந்தர் திருப்பாடல்கள்வழிக் காண்பதற்கு முன் ஒரு குறிப்பினை மனங் கொள்ள வேண்டும். முன்பு சுட்டிக் காட்டியது போல, நிறுவன அமைப்பு முறையில் வரையறுக்கப் பட்ட கோட்பாடுகளின் விளக்கங்களாக ஆளுடைய பிள்ளை யின் பாடல்கள் அமையவில்லை. சமய வரையறைகளை முறைப்படுத்தும் புதிய பாதை கண்டது சம்பந்தர் சிறப்பாகும். எனவே அடிப்படைச் சமய உண்மைகளை மனங்கொண்டு மக்கள் பின்பற்றுதற்கான வழிவகைகளை நிரல்படுத்திக் கூறுகின்ற திருப்பாடல்களினின்றும் கொள்கைகளை முறைப் படுத்திக் கொள்ளலாம்.

பத்துப்பாடல்களில் காணப்படும் புறச்சமயக் காழ்ப்பு, சமயக் கோட்பாடன்று. காலத் தேவை கருதிச் சமய நிலை நாட்டலுக்கான வெளியீட்டு முறை எனக் கொள்ளுதல் பொருந்தும். மாலயன் பற்றிய குறிப்பும், ஒருவகையில் வைணவ சமயக் குறையினைச் சுட்டிச் சிவத்தின் முதன்மை யினை நிலைநாட்டலே ஆகும். இங்கும் சமயம் பற்றிய கொள்கை இது எனக் கொள்ள வேண்டியதில்லை. இராவணன் செருக்கழிவு உயிரின் ஆணவமல ஒடுக்கத்தினை உணர்த்தும் குறுயீட்டு விளக்கமாம். இது தத்துவ நெறியில் அடங்கும். ஆகவே முன்னைய ஏழு பாடல்கள் காட்டும் கருத்துக்கள் மூலமாகச் சம்பந்தர் நெறிப்படுத்திய சைவசமயக் கோட்பாடு களை வகைப்படுத்திக் காணலாம். சைவத்தின் பொதுமைக் கூறுகளையும், ஞானசம்பந்தர் அவற்றுவழி விளக்கும் தனி நிலைக் கோட்பாட்டுக் கூறுகளையும் பாடல்கள் மூலம் அறிய முடிகிறது. இவை பின்வந்த சாத்திர உருவாக்கத்திற்கான மூலங்களாவதும் முன்னர் சுட்டப்பட்டது. இவ்வகையில் சம்பந்தர் கண்ட சைவ சமயக் கோட்பாடுகளைக் கீழ்க்காணும் வகைப்பாட்டில் விளக்கும் முறை மேற்கொள்ளப்படுகிறது.

1. நடைமுறைச் செயற்பாட்டு வழியன;
2. தத்துவப் பொருண்மையன.

நடைமுறைச் செய்ற்பாட்டு வழியில் அமைவன அன்பு நிலை பற்றியன. அருளை வேண்டுதற்கான நெறிகளை முறைப்படுத்துவன. உருவ வழிபாட்டுப் போக்கில் அமைவன. இவை மக்களால் எளிமையாக நடைமுறைப்படுத்தற்கேதுவான செயல் திறங் கொண்டன. தத்துவ நோக்கில் அமைவன. சிவஞானப் பொருண்மை சுட்டுவன.

> "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
> பவமதனை யறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம்
> உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
> தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்"

என்று சேக்கிழார், ஞானப்பாலுண்ட நிலையில் சம்பந்தர் தெளிந்த நல்லறிவு பெற்றவராய்ச் சிவம் பெருக்கும் திருத் தொண்டாற்றுதற்கான தகுதிப்பாடு அடைந்தமையைக் காட்டுவார். இவ் ஞானானுபவமே பிள்ளையாருக்குச் சமய நெறிகளை முறைப்படுத்தற்கான திறனையும் தெளிவையும் கொடுத்திருக்க வேண்டும். இறை உணர் நிலையில் பெற்ற இன்ப அனுபவம் கலைவளர் காட்சியதாய் வெளிப்பட்டதும் இயல்பாகிறது.

மூவர் முதலிகள் தம் திருப்பாடற் பொருண்மைகளை முறைப்படுத்தும் அகத்தியர் தேவாரத் திரட்டு குருவருள், திருவெண்ணீறு (பஙரயின் வரலாறு), அஞ்செழுத்துண்மை, கோயிற்றிறம், சிவனுருவம், திருவடி, அருச்சனை, அடிமை நிலை என எட்டுவகையில் அவற்றைத் தொகுக்கக் காணலாம். உமாபதி சிவாச்சாரியாரால் தொகுக்கப்பெற்ற 'திருமுறைத் திரட்டில்', 99 தேவாரப் பாடல்களைத் தொகுத்து அவற்றை பதிமுதுநிலை, உயிரவை நிலை, இருண்மல நிலை, அருளது நிலை, அருளுரு நிலை, அறியும் நெறி, உயிர் விளக்கம், இன்புறு நிலை, அஞ்செழுத்தருள் நிலை, அணைந்தோர் தன்மை எனப் பத்துவகையாக விரித்துரைப்பார். இங்குத் தேவாரத் திருப்பாக் களின் பொருட் பயனாய் அமைவது சைவ சித்தாந்தப் பேருண்மைகளாம் என்பது பெறப்படுகிறது. அகத்தியர்

தேவாரத் திரட்டு நடைமுறைச் சிவநெறிக் கொள்கைகளைச் சிந்திக்க வழிவகுக்கும் செயற்பாட்டு நெறி காட்டுவது. திருமுறைத் திரட்டு சித்தாந்தப் பொருண்மை காட்டும் தத்துவ நெறியது. இவ்விரு தொகுப்பு நூல்களுமே, தேவாரத் திருப் பதிகங்களின் மூலப் பொருண்மைக் கூறுகளை ஆராய்ந்து அவற்றுவழிப் பெறலாகும் சைவசமயக் கோட்பாடுகளை முறைப்படுத்தும் அறிவியல் அணுகுமுறைப்பட்ட தொகுப்பு மூலங்களாக அமைகின்றன. ஆயின் அகத்தியர் தேவாரத் திரட்டு முறைப்படுத்தும் பொருண்மை அமைப்பு, மிகுதியும் சைவ சமயத்தின் நடைமுறை வழிபாட்டுக் கூறுகளை மைய மாகக் கொண்டு அமைவது, சமயத்தின் செயல்வழி அமைவுகளை முறைப்படுத்துவதாகிறது. இவ் அமைப்பே ஞானசம்பந்தர் காட்டும் சமயக் கோட்பாடுகளுக்கான வகை நிலை, தொகுநிலை முறைமைகளாக ஏற்றுக் கொள்ளவும் வழி வகுக்கின்றது. உருவ நிலை, திருவடிச் சிறப்பு, அடியார் ஆண்டவனை அடைதற்கான வழிகளாகக் கோயில் சிறப்பு, அருச்சனை, அஞ்செழுத்து ஓதுதல், அடிமை நிலையில் அருள் வேண்டிப் பரவல் என்ற அடிப்படைச் சமயப் பாங்குகளை உட்படுத்தி அகத்தியர் தேவாரத் திரட்டு அமைந்துள்ளமை சிறப்பான வகைப்பாடாக உள்ளது. இப் பொருண்மைக் கூறுகளே செயற்பாட்டு வழிப்பட்ட கோட்பாடுகளைக் காணத் துணை நிற்பனவாம். இப்பொருள்நிலை அமைவுகள் சம்பந்தர் தேவாரத்தில் அமையும் பாங்கு தொடர்ந்து விளக்கப் பெறும்.

நடைமுறைச் செயற்பாட்டு வழியன

செயல்வழி இறைப்பற்றினை ஊட்டிச் சைவ சமய உண்மைகளை நெறிப்படுத்தும் போக்கில் சம்பந்தர் திருப் பாடல்கள்

பொதுநிலையில்,

அ. அஞ்செழுத்து உண்மையினை வலியுறுத்தல்;

ஆ. அஞ்செழுத்தினைப் பரவுதல்;

இ. திருநீற்றுப் பெருமையினைப் பாராட்டல்;

ஈ. வினை நீங்க வேண்டுதல்;

உ. பொதுமை உணர்வில் மானுடம் பேணல்

என்ற பாகுபாட்டில் அமைகின்றன.

இனித் தனிநிலையில்,

அ. திருவுருவ அழகினை வண்ணித்துப் புனைதல்;

ஆ. ஆடற் கோலத்தினைப் பாராட்டல்;

இ. இறைவன் அருள் வடிவினைக் காட்டுதல்;

ஈ. இறைவன் மறக்கோலத்து வீரத்தைச் சுட்டுதல் (அட்ட வீரட்டம்);

உ. இறைவன் பண்புகளை விதந்து உரைத்தல்;

ஊ. தலச் சிறப்புகளைப் புகழுதல்;

எ. வழிப்பாட்டு நெறிகளை எடுத்துரைத்தல்;

ஏ. அடியவர் திறம்பேணல்;

ஐ. அருள்நிலை பராவல்;

ஒ. அறிவுறு நிலையில் உபதேசித்தல்

என்ற பத்து வகைப் பொருள்பாகுபாட்டில் சம்பந்தர் பாடல்களை வகைப்படுத்தி அவற்றுவழிப் பெறப்படும் சமயக் கோட்பாடுகளை இறுதியில் முறைப்படுத்திப் பார்க்கலாம்.

வெளியீட்டுப் பாங்கு நெறிமுறைகளில், பாடுபொருள் அமைவுகளை 'இலக்கிய நெறிகள்' என்ற முதற் கட்டுரை விளக்கியது. இங்கு, கொள்கை விளக்க நிலையில் கருத்தமைவு களே முதன்மைப்படுத்தப்படுகின்றன.

பொதுநிலை

பேராயிரம் உடைய பெருமானின் திருநாமங்களைச் சொல்லி உருவேற்றுதல் என்பது வாழ்த்து நிலையில் முதற் படியாகின்றது. நமசிவாய நாமத்தை ஓதி உணர்வதன் இன்றியமையாமையினை நமச்சிவாயத் திருப்பதிகத்தில் சொல்லி உருகி நிற்பார் சம்பந்தர். பற்று நீங்கி வீட்டு நெறி

பெற ஐந்தெழுத்து ஓதல் கடன். வெறும் வாய் ஒலிப்பாக அமையாது ஒருநெறியில் மனம் வைத்துக்

''காத லாகிக் கசிந்துகண் ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப் பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே''

என்று அன்பினால் அகங் குழைந்து, நெக்கு நெக்கு உருகிப் பெருகி வரும் கண்ணீரதனால் ஆனந்த பரவசம் மேலிட ஓது வது அஞ்செழுத்து ஓதுநெறி என இலக்கணப்படுத்துவார். நான்மறைகளும் தேடி அறிய ஒண்ணாத இறைவன் ஆகலின் அவன் திருநாமம் அவற்றைக் காட்டிலும் சத்தியப் பொருளாய் நித்தியத் தன்மையதாய் அமைந்து விடுகிறது.

உருகும் அடியவரேயன்றிக் கொலைத்தொழில் புரிந்து குணங்கெட்டு நலங்கெட்டுத் திரிபவரும் நாமத்தை உரைக்க வல்லவர்தாம். உணர்ந்து உரைப்பராயின் 'எல்லாத் தீங்கையும் நீங்குவர்' என்று ஓதும்வழிப் பெறலாகும் பயன்பாட்டினைத் தெளிவுறுத்துகின்றார். வினை நீங்கி இவ் உலகச் செல்வமும் பொலிந்து, அம்மை உலக இன்பம் பெறப் பந்த பாசங்களையும் அறுக்க வல்லாராவர் அஞ்செழுத்து ஓதுவார் எனத் திருநாமப் பயன் கூறிச் சிவனை மறவாச் சிந்தையராய் உலகோர் வாழ உறுநெறி காட்டுவார்.

வைதிக நெறிக்குட்பட்ட பூணூல் அணிவிக்கும் சடங்கில் வேத மந்திரங்களினும் அஞ்செழுத்து மந்திரமே உயர்ந்தது; உகந்தது என வலியுறுத்திப் பாடிய பஞ்சாக்கரத் திருப்பதிகம் ஞானசம்பந்தர் கொண்ட தென்தமிழ் வழக்கின் சீர்மையையும், சிவநெறி தமிழர்க்குரிய தனிநெறி என்ற மேன்மையையும் எடுத்துக் காட்டுவதாக அமையும். நல்லூர் பெருமணத்தில் தமக்குத் திருமணச் சடங்குகளைப் புரிவித்த அந்தணர்கள் தீவலம் வரச்சொன்னபோது, ''யான் விருப்புறும் அங்கியாவார் விடை உயர்த்தவரே'' எனச் சடங்கு முறையிலான

தீயினை வலம் வராததும் இங்கு நினைக்கத்தகும். தமிழ்ச் சைவ நிலை நாட்டலில் ஞானசம்பந்தர் கண்ட கருத்துப் புரட்சியும் செயற்புரட்சியுமாக இவற்றைக் கொள்ள வேண்டும்.

உறங்கும்போதும் விழித்துலவும்போதும் நெஞ்சகம் நைந்து உரைத்தற்குரியது திருவைந்தெழுத்து.

யோக நிலையில் இறையுடன் ஆன்ம உடன் உறவு கொள்ளும் அத்துவித இன்ப உச்சநிலைக்கு இட்டுச் செல்வதும் இத்திருவைந்தெழுத்தே என்பாராய்,

"ஊனிலு யிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்
தேனைவழி திறந்தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன அஞ்செ ழுத்துமே"

(பஞ்சாக்கரத் திருப்பதிகம்,
3-ஆம் திருமுறை - பாடல் 3)

எனப் பாடிப் பணிவார். வாழ்த்த நாவினைப் படைத்த இறைவன் தன் திருநாம வாழ்த்தினையே கேட்டுவக்கின்றான்.

இனி, சைவர்கள் தோற்றப் பொலிவில் சிவனுடன் உறவுடைய கேண்மையர் என்ற உறுதியினைக் காட்டவும், மக்களுக்கு எல்லா நன்மைகளையும் தரவல்ல திருநீற்றின் பெருமையினைப் பரவவும் திருநீற்றுப் பதிகம் பாடுவார் சம்பந்தர். "பூசப் பூசப் பொன்னிறம் தருவது" நீறு என்று பவளமேனியில் வெண்ணீற்றராய்க் கோலங் கொள்ளும் சிவன் வழிப்பட்டார், அவனைப் போல நீறு அணிந்து நெடிது பொலிய வழிப்படுத்துவார். பிற சமயத்தவரிடத்திருந்து வேறுபடுத்திச் சைவ நெறியினர் என அடையாளங் காட்டற்கும் இது தேவையாகிறது. காலத்தில் விளைந்த சமய நாகரிகக் கூறுகளில் ஒன்றான இது காலங்கடந்தும் நிலைபெற்றது. பாண்டியன் வெப்பு நோய் தீர்க்க அருமருந்தாகச் செயற்பட்டதும் திருநீறே என்பது வரலாறு காட்டும் உண்மை. 'சுந்தரமாவது', 'காண இனியது', 'பூச இனியது' என்று

திருநீற்றின் வண்ணப் பொலிவினையும், 'போதந்தருவது' 'புன்மை தவிர்ப்பது', 'முத்தி தருவது', 'பத்தி தருவது', 'ஆசை கெடுப்பது', 'இன்பம் தருவது' என்று பலவாறாக அதன் பயன் பாட்டினையும் எடுத்து விளக்கிப் பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை தரும் நீற்றினைப் பூசுவது சைவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை நெறி என வரையறைப்படுத்துவார்.

அடுத்து, திருநீலகண்டப் பதிகம், கோளறு பதிகம் ஆகிய இரண்டன் வழி வினை வந்து மக்களை அணுகாவண்ணம் புரந்து நிற்பது நீலகண்டம் என உறுதிப்படுத்துவார். திருநீலகண்டப் பதிகம் அடியார் நளிர் சுரம் நீக்கியதும் வரலாற்று நிகழ்வென்பதும் உன்னத்தக்கது. அடுத்துத் தீவினைகள் அடரும் போதும் அஞ்சாது, மக்கள் கொண்ட பணியினைப் போற்றி நிறைவேற்ற இறைவன் தோன்றாத் துணையாய் உள்நின்று வழி நடத்துவான் ஆகலின் நாளும் கோளும் கண்டு வெருவி செயலற நிற்றல் வேண்டா என நம்பிக்கை மந்திரமாய்க் கோளறு பதிகம் பாடித் தெருட்டுவார். உறுதியான இறைப்பற்று, மனித வாழ்வின் இன்ப துன்ப நிகழ்வுகளில் நல்லனவே நடக்கப் பெரிதும் துணை செய்யும் என்று சமயஞ்சார் பக்தி உணர்வினை அழுத்தமாக மக்கள் மனத்தில் பதிக்கச் செய்வார்.

பொதுநிலையில் இறுதியாகக் காண்பது சமயங்கடந்த பொதுமை நிலையில் மானிடநல வாழ்வினை வலியுறுத்தலாம். இது பற்றிச் 'சமுதாய நோக்கத்தில்' விரிவாகப் பேசப்பட்டது. சமயக் கோட்பாடு என்பது குறிப்பிட்ட தெய்வஞ்சார் கொள்கைப் பிடிப்பு என்பதற்கும் மேலே மக்களுக்காகச் சமயம் எனும்போது மானுட மதிப்பீடுகளைப் பெருமைப்படுத்தி, மனிதம் என்ற உலகளாவிய பொதுமைப் பண்பில் உலகம் சிறக்க நெறிப்படுத்துவது என்றாகிறது. இதுவே சம்பந்தர் திருப்பாடல்களில் சைவசமயக் கோட்பாடுகளுக்கப்பால் அழுந்திய நிலையில் அடிநாதமாக ஒலிப்பது.

தனிநிலை

'தமருகந்தது எவ்வுரு அவ்வுரு வாகக் காட்சியளிப்பான் சிவன்'. ஞானசம்பந்தர் சிவனின் செவ்வண்ணத் திருமேனிப் பொலிவினைத் திருவடி நலன் தொடங்கிப் பிறை சூடிய திருமுடிச் சிறப்புவரை வண்ணித்துப் புனைந்து மகிழ்ந்து களிப்பார்.

> **"பொங்கு நற்கரி யுரியது போர்ப்பது புலியதன் அழல்நாகம்**
> **தங்க மங்கையைப் பாகம துடையவர் தழல்புரை திருமேனிக்**
> **கங்கை சேர்தரு சடையினர் கடிக்குளத்துறை தரு கற்பகத்தை**
> **எங்கு மேத்திநின் றின்புறும் அடியரை இடும்பைவந்**
> **தடையாவே"**

(திருக்கடிக்குளம் – 2-ந்திருமுலற, 3).

என்று மேனி வண்ணம், தோலாடை, மங்கைபாகம், கங்கை வார் செஞ்சடை என்று திருக்கோல அழகுகளை ஒருங்கிணைத்துப் பாடிப் பரவசமடைவார்.

''ஒண்மலரடி', 'பவளம்போல் உருவினர்', 'விடைமிசை சேர்வதோர் விட்டில கழலொளி', 'புலியதள் அரை' 'சுடர்க் கண்', 'நஞ்சமது செய்த மணிகண்டன்', 'பரசு பாணியர்', 'கொடியுயர் மால் விடையூர்தினான்', 'தோடுடைய செவியன்', 'மின் போலும் புரிநூல்... வேதியன்', 'செம்பவளத் திருமேனி வெண்ணீறணி செல்வன்' என்றெல்லாம் எழிற்கோல அழகு களைப் பலபடப் பேசுகின்ற இடங்களில் எல்லாம் நிரந்தர அழகின் நிலையான இருப்பிடமாக இறையைக் காணும் உண்மையை உணர முடிகின்றது.

'ஈரெழிற் கோல' மென உமையொரு பாகனின் மலையான் மகளொடு ஒருங்கிணைந்து உயிர்கட்கு அருள் புரியும் திருவார் கோலம் பற்றிய புனைந்துரைகள் "தாயாகித் தந்தை யுமாய்த் தாங்குகின்ற தெய்வத்தின்" கருணை வடிவினைச் சித்திரிக்கின்றன.

பருமை நிலையில் உருவக் கோலங்களைப் புனைந்து மகிழ்தல் போல முரண்படு பண்புகளின் வெளிப்பாடாக இறைவன் நிற்கும் நிலையைப் பரவுவார். 'நுண்ணியன், பரியவன்', 'பெருமையும் சிறுமையும் ஆன பேராளன்', 'தண்மையும் வெம்மையும், ஆனவன் என எடுத்துரைக்கும் இடங்களில் இன்ப துன்பக் கலவையான வாழ்வின் விளக்க வடிவமாக அவன் திகழும் குறிப்பினைச் சுட்டக் காணலாம்.

''விண்ணோர் அமுதுண்டும் சாவ யாவரும்
உண்ணாத நஞ்சுண்டு இருந்து அருள் செய்குவான்''

என நீலமணி மிடற்றனின் அருள்திறத்தினைப் பாடிப் பரவும் சிலப்பதிகாரம். தீமையை ஏற்று நன்மையை வழங்கும் தியாக வெளிப்பாடு இதுவாம். இறைவனின் பலிதேர் கோலமும் இவ் உட்கிடக்கையையே விளக்கி நிற்கும். 'அழகாக நாடுலாவிய பலிகொளும் நாதனார்' என்று பாடும் சம்பந்தர் வெண்டலைக் கையேந்தி வீடுதோறும் பலி ஏற்கும் இறைச் செயலின் உள்ளார்ந்த பொருள்,

''மனமுலாம் அடியவர்க்கு அருள்புரிகின்ற
வகையலால் பலிதிரிந்து உண்பிலான்''

என்று அடியவர்க்கு அருளும் அன்பார் செய்கை என எடுத்துரைப்பார். மக்கள் பாதகமே சோறாய் ஏற்று அருள் பாலிக்கும் தியாகத் திருவுருவின் ஒருபெருங் கருணைத் திறம் இது.

அருள்நலம் கனியும் இறையின் அன்புத் திருவுருவக் காட்சி ஒருபுறம் இருக்க, தீயோரை அழித்துப் பீடுற நிற்கும் மறச் கோலம் அட்ட வீரட்டம் என்ற வகையில் எட்டு ஊர்களில் அமைந்துள்ள சிறப்பினை வியந்து பாராட்டிப் புகழ்வார் சம்பந்தர்.

''அமரரானவர் ஏத்த அந்தகன்தன்னைச் சூலத்தில்
ஆய்ந்ததே''

என அந்தகாசுரனை அழித்தமை,

''கண்ணிற் கனலாலே காமன் பொடியாகப்
பெண்ணுக் கருள்செய்த பெருமான்''

என்று காமனை வென்றமை,

''ஓர்காலனைக் கடுத்தடிப் புறத்தினால் நிறத்துதைத்த
காரணம் எடுத்தெடுத் துரைக்குமாறு வல்லமாகின்
நல்லமே''

என்று காலனைக் கடிந்தமை,

''சலந்தரனை அழியும்வகை ஆழியினால் ஈரும்வகை
செய்து அருள் புரிந்தவன்''

எனச் சலந்தரனை வென்றமை,

''தக்கனார் பெருவேள்வியைத் தகர்த்துகந்தவன்''

என்று தக்கன் வேள்வி சிதைத்தமை,

''முப்புரங்கள் எய்துகந்த எம்பெருமான்''

எனத் திரிபுரம் எரித்தமை,

''வெங்கண் மால்வரைக் கரியுரித் துகந்தவன்''

எனத் தாருகாவனத்து யானையை வென்று உரித்துப் போர்த்தமை,

''பெண்ணமர் கூறுடையான் பிரமன்தலையிற் பலியான்''

என்று பிரமன் தலை கொய்து பலிகொண்டமை,

ஆகிய எட்டு வகை வீரங்களையும் விதந்தோதி, நல்லவர்க் கருள் புரிய மறக்கோலம் பூண்டு வீரமார் திருச்செயல்கள் புரியவல்லான் என்று விளக்கி இறைவனின் வீரக் திருக்கோலங் களை வியந்தேத்திப் பாராட்டி நிற்பார்.

அட்டவீரட்டத் திருக்கோலமன்றி, எண்வகை எழிலார் கோலமாய் நிற்கும் அட்டமூர்த்தம் பற்றியும் சம்பந்தர் குறிப்பார்.

''பல்கதிரோன் மதி பார் எற்றுநீர் தீக்காலு மேலை
விண் இயமானனோடு முற்றுமாகி வேறுமானான்''

என்று, இறைவன் எண்வகை உலகின் எல்லா நிலைகளாய் அவற்றில் கலந்தும், தனித்தும் நிற்கும் திறத்தினைப் பாராட்டு வார். சைவ சித்தாந்தம் காட்டும் இறை, உயிர், கட்டு எனும் முப்பொருள் தத்துவத்தின் வித்தகக் கோலம் இது.

ஞானசம்பந்தர் காட்டும் இறைவன் திருவழகுக் கோலங்கள் புறவடிவச் சிறப்புகளையும், அகப்பண்பின் ஆளுமையையும் ஒருசேரக் காட்டும் திறத்தன என்ற அளவில் அமைந்து மேலே சிவனின் ஆடல் திறத்தினை அவர் எடுத்துரைக்கும் பான்மை யினைக் காணல் தகும்.

''சிவபெருமான் ஆடும் திருநடனத்தின் அடிப்படைச் சிறப்புகள் மூன்று. திருவாசிக் கோலம் வழியாக, உலக இயக்கம் நடைபெற அவனின் தாளம் தவறாக் கூத்து நடை பெறுகிறது என உணர்கிறோம். மாயையினின்றும் எண் ணிறந்த பல்லுயிர்களை விடுவிக்க அவன் திருக்கூத்து ஆடு கின்றான்; கூத்தாடுமிடமான சிதம்பரம், உலகின் மையப் பெருவெளி மனிதனின் மனமெனும் அரங்கமேயாகும்''[3] என்ற ஆனந்த குமாரசுவாமியின் ஆய்வுரை அம்பலத்தாடு வான் திருக்கூத்து நோக்கினையும், போக்கினையும், பொருளை யும் ஒருசேர விளக்கும். அந்தி சந்தி வேளைகளில், புறங் காட்டில், முதுகானில், திருப்பதிகளில் என்று பல்வேறு நிலை களில் ஆடும் திறனை வண்ணித்து,

''ஆடும் எனவும் ... கேட்டீராகில்
நாடுந் திறத்தார்க் கருளல்லது நாட்டலாமே''

என அடியவர்க்கருள் புரிந்து, உலகம் வாழ நின்று ஆடு கின்றான் எனக் குறிப்பாகச் சுட்டி நிற்பார்.

'அடியார் தமக்கினியான்', 'தேனொத்தினியான்', 'உயிர்க் குயிராய்' நிற்பவர். 'மான வாழ்க்கையதுடையார்', 'ஓதி நன் குணர்வார்க் குணர்வுடை ஒருவர்', 'உத்தமன்', 'இன்பன்', துயருநோயு மிலராவர்' என்று இறைவனின் பல்திறப் பண்பு களையும் கூறி, இன்ப அன்பின் எழில் நலஞ்சேர் அருள் உருவினன் என்பதைக் குறிப்பாகத் தெளிவுறுத்துவார்.

இனி, இறைவன் உறைகின்ற தலங்களின் சிறப்பு. இயற்கை வளம், அங்கு இறைவன் உறைந்து அருள் பாலிக்கும் திறம் இவற்றைப் பலபடப் பாடி மகிழ்வது தேவாரம் உணர் வார் அறிந்த ஒன்றாகும். இத்தலங்களில் குடி கொண்டமர்ந் திருக்கும் தெய்வத்தினை வழிபடுதற்குரிய நெறிமுறைகளை வகுத்துரைப்பார்.

"நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே"

(திருச்சாய்க்காடு - 2-ஆம் திருமுறை - 3)

என்று நித்தமும் மலர் தூவி, துதி பாடி, வலஞ் செய்து,

"காலையும் மாலையும் போய்ப் பணிதல் கருமமே"

என்றும்,

"பாடுதல் கை தொழுதல் பணிதல் கருமமே"

என்று மனத்தகத்து உறைவானைத் திருக்கோயிலகத்துக் கண்டு வாயாரப் பாடியும் ஆடியும் பரவசராய் வழிபடுதல் வேண்டுமென வழிகாட்டுவார். கண்ணும், நாவும், செவியும், வாழ்வும் அவனைக் காண, வழுத்த, புகழ் கேட்க, அவர்க்கே ஆட்பட்டு வாழ என்று கூறிப் பிறவி எடுப்பதன் பயனையும் திருஆமாத்தூர் பதிகத்தில் விளக்கி உரைப்பார்.

முன்னர்க் குறித்தது போல் தொண்டர் சீர் பரவும் அடித் தொண்டும் சிவநெறிக் கோட்பாடாகிறது. இவ்வாறு பல்வேறு நெறிமுறைகளால் உருவ நெறியில் தலைப்பட்டு நிற்றல் மக்களின் கடன் என வலியுறுத்தும் சம்பந்தர், இதன் பயன் பாட்டினையும் தெளிவுறுத்தி இறைவனைப் பற்றி வாழ்வதன் உண்மையையும் பெற வைப்பார்.

"வினைக்கு அஞ்ச வேண்டா; வினைகள் சிற்றறிவுடைய உயிர்களால் செய்யப்படும் செயல்வகைகளே; அவை எல்லாம் வல்ல இறைவன் திருவருளின் முன், ஒளிமுன் இருள் போல

அழிந்தொழியும்; திருவருள் துணையுடையார்க்கு வினைப்பகை ஒரு பொருளாகாது'' என்று அறிவுறுத்தி, அருட்பேற்றுக்கு வாயிலாகிய அன்பு நெறியை (பத்தி நெறியை) நன்கு வற்புறுத்தினர்.''[4] என்று ஔவை. துரைசாமிப் பிள்ளை அவர்கள் சம்பந்தர் காட்டிய அன்பு நெறியின் உட்பொருளை அவர் பாடல்வழி விளக்கிக் காட்டுவார்.

''கையால் தொழுது தலைசாய்த்து உள்ளம் கசிவார்கள்
மெய்யார் குறையும் துயரும் தீர்க்கும் விகிர்தனார்''
''...தம்பெருமை பேசும் அடியார்மெய்த்
திண்ணமரும் வல்வினைகள் தீர அருள் செய்தலுடையான்''

என்றும் சம்பந்தர் மக்கள் திருவருள் நெறியில் நின்று வழி படுதலால் பெரும் இன்பங்களைத் தெளிவுறுத்திக் காட்டுவார்.

மக்கள் அறிந்து சிந்தித்துத் தெளிவுறும் நிலையில் உடன் பாட்டு நிலையிலும், எதிர்மறைப் போக்கிலும் வற்புறுத்திச் சிவவழிபாட்டின் மேன்மையை எடுத்துரைப்பதும் இங்கு எண்ணத்தக்கதாம். பொதுப் பதிகங்களில் ஒன்றான திருவிருக்குக் குறளில்,

''கல்லார் நீழல், அல்லாத் தேவை
நல்லார் பேணார், அல்லோம் நாமே''
''கொன்றை சூடி நின்ற தேவை
அன்றி யொன்று நன்றிலோமே''
''கல்லா நெஞ்சில் நில்லான் ஈசன்
சொல்லா தாரோ டல்லோம் நாமே''

என்று பாடும் வகையில், சிவனுக்குமேல் தெய்வமில்லை என்று ஒருநெறியில் மனம் வைக்க வேண்டுமென்றும், கல் போன்ற நெஞ்சில் கருணைத் தேவினைக் காண ஒண்ணாது ஆகையால், அன்பு வடிவான இறைவனை, அகங் குழைந்த அன்பினராய்க் காணுதல் வேண்டுமென்றும் வலியுறுத்தி மக்கள் கூட்டம் சிவம் பெருக்கும் திருத்தொண்டாற்ற அறிவுறுத்தி அழைக்கின்றார்.

தத்துவப் பொருண்மையன:

"ஒரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா வின்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவ சித்தாந்தத்
தேனமுது ...."5

என்று குமரகுருபரர், வேதாந்தப் பொருள் முடிவில் அதன் மேற்பொருளாய், சாரமாய் விளங்கும் சைவ சித்தாந்தம் என்று சிவவழிச் சிந்தாந்தப் பெருமையினைப் போற்றுவார். அறிவு நெறியில் இறையின் அருவ, அருவுருவப் பான்மைகளைத் தத்துவப் பொருட் கூறுகளாய்க் கண்டு கருத்துப் பொருண்மை வடிவில் முறைப்படுத்தப்பட்ட இறைச் சிந்தனைகளையே சித்தாந்தம் என்றும், அதனை முறைப்படுத்தும் அறிவு நூல் களைச் சாத்திரங்கள் என்றும் அழைக்கின்றோம்.

புறத்தே உலகியற் பொருள் வாயிலாகவும், அகத்தே மனத்தின்கண் ஞான ஒளியாகவும் அருள் புரியும் பரம் பொருளின் திருவருளைப் பெற்று உய்தற்கு அன்பு நெறிப் பட்ட வழிபாடே சிறந்தது எனக் காட்டிய சைவ சமய குரவர்களின் திருப்பாட்டுக்கள் இறைவன், உயிர், உலகம் என்ற முப்பொருள் உண்மைகளைப் பற்றியும் எடுத்துரைக் கின்றன. அறிவு வழியிலான சிந்தனைகளால் இவற்றிற்கான தொடர்புகளையும், படைப்பின் நோக்கத்தையும், உயிரின் இயல்பையும், இறையின் அருள் நலத்தையும் அறிய வாய்ப்பு ஏற்படுகின்றது. கண்ணிற் காணாது எங்கும் நிறைந்த பொருளைக் கண்ணிற் காட்சியாய்க் காணும் திறத்தில் உருவ முறையில் கண்டு வழிபடுவது அன்பு நிலையாகிறது.

"எவ்வுயிரும் நீங்கா துறையும் இறை சிவனென்று
எவ்வுயிருக்கும் அன்பா யிரு"

என்பதே சைவக் கோட்பாடாகிறது. இனி, அருவப் பொருளாய் ஞானமயமாய்த் திகழும் இறைத் தன்மையை உணரவே அறிவுவழி பயன்படுகிறது. அறிவின் முடிவாக உள்ள

இறைவனின் தத்துவக் கூறுபாடுகளைக் காட்டுவதே சைவ சித்தாந்தம் என்பது தெளிவு.

தற்சார்பின்றிச் சமுதாயம் தழுவிய நன்மை கருதி வழிபடும் அடியார்கள், தொண்டு நெறி (தாச மார்க்கம்), மகன்மை நெறி (சற்புத்திர மார்க்கம்), தோழமை நெறி (சக மார்க்கம்) ஒன்று நெறி (சன்மார்க்கம்) என நால்வகை நெறியில் நின்றொழுகுவார்கள். நாவரசர் தொண்டு நெறியிலும், சம்பந்தர் மகன்மை நெறியிலும், சுந்தரர் தோழமை நெறியிலும் நின்றனர் என்பர். ஆயின் இந்நால்வகையும் கலந்த இறை நெறியே இவர்கள் பொது நெறியாகும். புறவயப்பட்ட செயற்பாடுகளுக்கப்பால் இருவினைத் தொடக்கு, மலத்து அழுந்தல், பாச நீக்கம், பதியினைச் சேர்தல் என்ற அறிவு பூர்வமான உண்மைகளைப் பற்றிச் சிந்தித்தும் ஞான குரவர்கள் தம் திருப்பாடல்களில் ஆங்காங்கே அவற்றைச் சுட்டிக் காட்டியிருப்பதால் இங்கு, சிவஞானம் தழுவிய சித்தாந்த உண்மைகளைக் காணுதல் இயல்பாகின்றது.

"வீடும் ஞானமும் வேண்டுதி ரேல்விர தங்களால்
வாடி ஞானமென் னாவது"

என்று வினாவி,

"நாடி ஞான சம்பந்தன் செந்தமிழ் கொண்டிவை
பாடும் ஞானம் வல்லாரடி சேர்வது ஞானமே"

என்று திருவலஞ்சுழிப் (2-ஆம் திருமுறை) பதிகத்தில் தம் ஞானமார் தெய்வப் பாடல்கள், உள்ளத்து ஞானச் சுடர் ஏற்றி ஊளத்திருளை ஒழிக்க வல்லன என்று எடுத்துக் காட்டுவார்.

இனி, சம்பந்தர்தம் ஞானப்பாடல்கள்வழிச் சைவ சித்தாந்த முப்பொருள் உண்மைகளைக் குறிப்பாகச் சுட்டுதல் பொருந்தும்.

இறைவன் உருவம், அருவம், அருவுருவம் என்று சொல்லப் படும் மூன்று அமைப்புகளில் அடங்கியும், அடங்காதும்

தனித்தும், இணைந்தும், கலந்தும் ஆக ஒருருவம், ஒரு தன்மை, ஓரியல்பெனக் கொள்ளற்கரியனாய் எங்கும் நீக்கமற நிறைந் திலங்கும் அருளாளன் என்பதை,

"மண்ணகத்திலும் வானிலும் எங்குமாம்
திண்ணகத்திரு ஆலவாயாய்"

எனக் கூறிப் பரவுவார்.

இவர் எவ்வகையார் என்று அறிவது? என்ற கேள்விக்கு விடை தேடும் ஞானவழியில் சம்பந்தரும் நின்று,

"இன்னவுரு இன்னநிறம் என்று அறிவதேல்
அரிது நீதி பலவும்
தன்ன உருவாம் என மிகுத்த தவன்" என

ஒருவாறு விடை காண்பார்.

இறைவன் ஞானத் திரளாய் நிற்பவன் எனக் காண்பார் சம்பந்தர். ஆயின் ஊனக் கண்ணால் உணர முடியாத அன்பர்கள் ஞானக்கண்ணாற் சிந்தையில் நாடினால் தேனொத்த பிரானாய்த் தெவிட்டாது காட்சியருள்வான். மற்றவர்க்கு, உள்குவார் தரம் நோக்கி விரும்பும் வண்ணம் அவரவர் உகந்த உருவில் அன்பிற்கெளியனாய் உருவத் திரு மேனி கொண்டிலங்குவான்.

இனி உயிரானது இருவினைத் தொடக்குக் காரணமாய்ப் பிறப்பெடுத்துப் பாசத் தளையிற் கட்டுண்டு, அவன் அருளால் அறிவு பெற்று, கட்டு நீக்கி இரண்டறக் கலக்கும் தூயநிலை கொண்டது. "பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம், சித்தமலம் அகல்வித்துச் சிவமாக்கி" ஆளும் காலத்து உயிர் திருவடிப் பேற்றினைப் பெற்றுய்கின்றது. வினைகள் தாமே சென்று செய்தோனை அடைவதில்லை என்பது தேவார ஆசிரியர்கள் அறிந்த உண்மை. உயிர்கள் செய்த வினைப்பயன்களை அறிந்து அவை செய்த முறையே இன்பதுன்பங்களை நுகரச் செய்பவன் இறைவனே. வினைப் பயனை நுகரச் செய்வான், வினை நீக்கம் பெறுதற்கும் அருள் கின்றான்.

“இனியன அல்லவற்றை இனிதாக நல்கும் இறைவன்”

“பாவங்கள் தீர்தர நல்வினை நல்கி”

என்று உயிர்கட்கு இருவினை நுகர்விப்போன் இறைவன் எனக் காட்டுவார் சம்பந்தர். இருவினை புரிதற்கும் காரணம் மும்மலமாகிறது. ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றின் இயல்பினின்றும் விடுபட்டு இறைவனை அடைய, அவனே வழியாகிறான்.

“விளையாததொர் பரிசில்வரு பசுபாச வேதனை ஒண்
தளையாயின தவிரவ்வருள் தலைவ்ன்”

என்பார் சம்பந்தர். ‘விளையாததொர் பரிசில் வரு வேதனை ஆணவம் என்றும், பாச வேதனை என்பது இருவினை என்றும், ஒண்தளை என்பது மாயை என்றும் க. வெள்ளைவாரணம் அவர்கள் சிறப்பாகப் பொருள் கொண்டு விளக்கி மும்மலத் தொடக்கினை ஞானசம்பந்தர் குறிக்கும் திறனை விளக்குவார். ‘மலனாய தீர்த்தெய்தும் மாதவத் தோர்க்கே’ என்று ஆளுடைப் பிள்ளையார் உயிரின் இருள் மலம் கெடுப்பது இறையருள் என முடிந்த முடிபாகப் போற்றுவார்.

மேற்கூறிய விளக்கங்களால் சித்தாந்த நெறிப்படு முப்பொருள் உண்மைகள் ஞானசம்பந்தர்தம் அருள் ஞானப் பாடல்களில் அமைந்துள்ள திறங்கண்டு தெளிகின்றோம்.

ஆக, சம்பந்தர் முறைப்படுத்தும் சைவசமயக் கோட்பாடுகளாக அமைவன:-

1. சிவனல்லால் பிறிது தெய்வமில்லை எனும் இறை உண்மைத் தெளிவு
2. திருவைந்தெழுத்தின் சீர்மை உணர்ந்து ஓதுதல்
3. திருநீற்றின் செம்மை அறிந்து பூசி மகிழ்தல்
4. இறை உறையும் திருத்தலங்களை வலம் வந்து வழிபாடாற்றுதல்.
5. வினைத் தொடக்குற்று மல இருளில் தவிக்கும் உயிர், இறையருளைச் சிந்திக்க மலமாயை கன்மம் நீங்கித் திருவடிப் பேற்றினை அடைதல்.

6. நித்திய வழிபாட்டு நெறிமுறைகள்வழி அகந்தூய்மை யராயும், புறந்தூய்மையராயும், மலர் தூவி, திரு நாமம் வாழ்த்தி, ஆடியும், பாடியும் அன்பராய் வலம் வருதல்

7. தொண்டருக்கும் தொண்டராய் அடிமைத் தொழில் புரியும் அன்பர் பணிக்கு ஆளாகி நிற்றல்.

இவற்றுவழிச் சமயங் கடந்த மானுட மேன்மையுணர்ந்து, எங்கும் நிறைந்திலங்கும் இறைமயமாய் உலகினைக் கனிந்து நோக்கி, நலவாழ்வுச் சமுதாயம் காண்கின்ற நிலையில் வாழ்வில் சமயத்தையும், சமய உணர்வில் வாழ்வியல் மேன்மை களையும் கண்டு இன்புற்று வாழ்தல் அடிப்படையான, உயிர் நிலைக் கோட்பாடாக அமைகின்றது.

"உலக மக்களுக்கு எக்காலத்தும் திருத்தகவிற்றாய உள்ள நிலைமையை வழங்குதற்குரிய அருள் நூல்களே திருமுறை களாம்" என்பார் க. வெள்ளைவாரணர். இங்கு 'திரு' என்பது "இன்ப துன்பம். இரண்டையும் ஒப்பக் கருதும் மனச் செம்மை" என்ற பேராசிரியர் உரையும் உன்னத் தக்கது. திருமுறைகள் இன்ப துன்பத்தைச் சமமாகக் கருதும் மனப்பக்குவத்தையும், அதனால் பெறும் மனநிறைவையும், அமைதியையும், ஆனந்தத்தையும் பெற்றுத்தர வல்லவை. தமிழில் இலக்கியத் திருவிற்குக் குறைவில்லை. எனினும் உண்மையான திருவை வளர்க்கும் தமிழ் இலக்கியங்கள் பக்தி இலக்கியங்களே. இன்றைய பொருள்முதல் வாத உலகில், மன அமைதிக்கு. உய்யும் நெறிக்கு உயிர் நிலையாவன பக்தி இலக்கியங்களே இவை காட்டும் உயிர் நெறி தன்னலங் கருதாத் தொண்டு நெறியே ஆகும்.

"என் கடன் பணி செய்துகிடப்பதே" என்பார் நாவரசர். இங்கு, கிடப்பது என்ற சொல் தொண்டு செய்தேன் என்ற உணர்வு தானுமின்றிப் பயன் கருதா உளப்பாங்கினைக் காட்டுவதாம். 'சும்மா கிட' என்பதுபோல், ஆரவாரமின்றி, செயல் முடிவில் அடங்கி அமைந்து விடுதலாகும். இதுவே பயன் கருதாப் பணியாம்; பரமனுக்குகந்ததாம். நிஷ்காமிய

கர்மம் எனக் கீதை புகல்வதும் இதுதான். ''கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா'' வீறும் இதுதான். அன்பு வழி நின்று சமுதாய நலம் காணுகின்ற அருள் தொண்டாகச் சைவசமய குரவர் தம் தமிழ்த் திருப்பணி அமைந்த சீர்மை மனங்கொள்ளத் தக்கது. தமிழர் பண்பாட்டு வாழ்வில், சமய வளர்ச்சியுடன் மொழி வளர்ச்சியும் கலை வளர்ச்சியும் கலந்து நின்ற பாங்கும் அறிந்து இன்புறத் தக்கதாம். வாழ்வியல் தத்துவங்களைச் சமய உண்மைகளோடு எடுத்துரைக்க மொழி ஒரு கருவியாயிற்று. மொழியின் இசைக் கூறுகள் வெளிப்பாட்டு நெறிக்கு வழிகாட்டின. வழிபாட்டு நெறிமுறைகளுக்குக் கலையின் வடிவான கோயில்கள் தக்க இருப்பிடங்களாயின. ஆக, மொழியும், கலையும், சமயமும் எல்லாம் மக்கள் நலவாழ்விற்குரிய அடிப்படைகள் என்பதும் நிலைநாட்டப் பெறுகின்றது. இவற்றால் பெறப்படுவது நிறைவான அமைதிப் பெருவாழ்வாம்.

நிறைவு இருவகைப்படும். செயல் நிறைவு ஒன்று; மற்றது ஆன்ம நிறைவு. செயல் நிறைவு உலகியல் சார்ந்தது. ஒரு வகையில் தன்னல நோக்கில் அமைவது. ஆயின் ஆன்ம நிறைவோ இறையியல் வழிப்பட்டது. பொதுநலப் பாங்கில் அமைவது. பயன் கருதாமல் வெளிப்படையாகச் செய்த நன்மை நல்ல பயனைத் தருவதால் ஏற்படும் உள்ள நிறைவே ஆன்ம நிறைவு. இது மனிதனின் ஆன்மீக விடுதலை அல்லது முத்தி நிலையாகும். மனித சமூகத்திற்கு வலிமையும் பொலிவும் தருவது இது.

நேர்மை என்பதும், அன்பு என்பதும் ஆணவத்தை விட்டொழித்து ஆன்மா பற்றற்று இருப்பதுதான். தூய்மையான பரம்பொருளுடன் ஈடுபட்டு இணைந்து ஒன்றாகி விடுவதே ஆன்ம நிறைவு என்றும் விளக்கம் தரலாம். இந் நிறைவு பெறத் தகுதியுடையவன் மனிதன். இறையுடன் ஒன்று கலக்கும் தகுதியும், பெருமையும் கொண்டவன் மனிதன் என்பதால்தான்,

''**மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே**''

என்றார் நாவரசர். மேலும் அவர், ''என்னில் இனியான் என்னுளே இருப்பதால் என்னைக் காட்டிலும் இனியவன் யாருமிலன்'' என்று இனியனாயும் இருக்கும் தகுதிப்பாடும் மனிதனுக்கே உரிமை என்பார். அவனால் விரும்பப்படும் உலகப் பொருள்களைக் காட்டிலும் அவனே உயர்ந்தவன் ஆகிறான். எனவே அவன் முத்தி நிலையை அடையச் சித்தத்தை நெறிப்படுத்த வேண்டும். இத் திருநெறியாம் ஒரு நெறி யினைக் காட்டும் திருவினைத் தருவதே மூவர் தமிழ்.

பழுத்த பழத்தின் காம்பு தளர்ந்து விடுகிறது. பழத்தின் உட்பாகம் மிருதுவாக இருக்கிறது. ஆனால் அதிலுள்ள விதை கள் இறுகி மறுபடியும் உயிர் பெற்று வாழ்வதற்கேற்றபடி அமைகின்றன. முதுமையால் நம் உடலின் வெளிப்புறம் பழுதடைய, அடைய, உள்ளுக்குள்ளே உரம் பெற்று வரு கிறோம். எனவே மனிதனுடைய அந்தரங்கத்தில் சிறப்புடன் ஒளிர்வது அவனுடைய ஆன்ம சக்தியே.

ஆன்ம சக்தி வலுப்பெற்று நிறைவு அடைய மேற் கொள்ளும் ஆன்மப் பயணம் வாழ்வு. தனிமனிதன் > மனித சமூகம் > உலகம் > பரம்பொருள் என்ற குறியீட்டில் இது அமைகிறது. இவ்வாழ்வுப் பயணத்தின் முடிவு இறையுடன் ஒன்றி உடனாவது என்பது பெறப்படுகிறது.

இவ்வழிப் பயணத்தில் ஆசைகளாலும், அவலங்களாலும் அவன் எதிர் கொள்ளும் தடைகளைத் தகர்க்க அன்பு கை கொடுக்கின்றது. அன்பு, துன்பங்களை ஏற்றுக் கொள்கின்றது. அவைகளைக் கடந்தும் நிற்கின்றது. அன்பின் வழியதே சமயம். இதுவே ஆன்ம நிறைவின் உயிர்நிலை. இதை அடைய வழி காட்டும் சத்திய மொழிகளே மூவர் தமிழ் மொழிகள். எனவே திருஞானசம்பந்தர் தம் திருப்பாடல்களின் சமயக் கோட் பாட்டின் உயிர்நிலை அன்புவழியும் ஆன்ம நிறைவுமாக அமைகிறது என்று கூறி மகிழ்வோம்.

அடிக்குறிப்புகள்

1. டாக்டர் மொ. அ. துரையரங்கனார், "அன்புநெறியே தமிழர் நெறி'', ப. 244.

2. மணிமேகலை.

3. Ananda, K. Coomaraswamy' 'Dance of Shiva' (on Indian art and culture) p.77.

''The essential significance of Shiva's Dance is three fold: First it is the image of his Rhythmic play as the source of all movement within the Cosmos, which is represented by the Arch; Secondly, the purpose of his Dance is to release the countless souls of men from the share of illusion; Thirdly, the place of dance, Chidambaram the centre of the universe within the heart.

4. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, "சம்பந்தர் தேவாரத்தில் சித்தாந்தக் கருத்தும், திருவடிப் புகழும்", பன்னிரு திருமுறைத் தெளிவு, திருஞானசம்பந்தர் திருமுறைகள், ப. 248.

5. குமரகுருபரர், பண்டார மும்மணிக்கோவை, 32-35.

துணை நின்ற நூல்கள்

மூல நூல்கள்

சங்க இலக்கியம், தொகுதி 1, சைவ சித்தாந்த சமாஜப் பதிப்பு, பாரி நிலையம், சென்னை, 1967 (இ. ப.).

சங்க இலக்கியம், தொகுதி 2, சைவ சித்தாந்த சமாஜப் பதிப்பு. பாரி நிலையம், சென்னை, 1967 (இ. ப.).

திருவாசகம், திருவாவடுதுறை ஆதின, வெளியீடு, 1964

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (தலமுறை), ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் 26-ம் நினைவு நாள் வெளியீடு, 1971.

தேவாரம், 1-7 திருமுறைகள் - தலமுறை, திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமட வெளியீடு, 1968.

நாலாயிரப்பிரபந்தம், பி. இரத்தின நாயகர் பென் ஸன்ஸ், திருமகள் விலாச அச்சகம், சென்னை, 1959.

பரிபாடல், கழக வெளியீடு, 1964 (இ. ப.).

பன்னிரு திருமுறைத் தெளிவு, திருஞானசம்பந்தர் திருமுறைகள், ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் வகையறா தேவஸ்தானம், மதுரை, 1964.

ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு, திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம், 1961 (நா. ப.).

ஆய்வு நூல்கள்

அருணாசலம், ப., பக்தி இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1973.

இராசமாணிக்கனார், மா., சைவசமய வளர்ச்சி, ஔவை நூலகம், சென்னை, 1958.

சிங்கார வேலன், சொ., திருஞான சம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும், கழக வெளியீடு, 1969.

சிவத்தம்பி, கா., தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1983. (மு. ப.).

சுந்தரமூர்த்தி, கோ , சைவ சமயம், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1977. (மு. ப.).

சுப்பிரமணிய முதலியார், சி. கே., சிவக்கவிமணி, உரை திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் (4-ம் பகுதி, கோவைத் தமிழ்ச் சங்கம், கோவை, 1971, (இ. ப.)

சுப்பிரமணிய முதலியார், சி. கே., சிவக்கவிமணிஉரை)

திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் (5-ம் பகுதி), கோவைத் தமிழ்ச் சங்கம், கோவை, 1973, (இ. ப.)

செங்கல்வராய பிள்ளை, வ. சு., ராவ்பகதூர், தேவார ஒளி நெறிக் கட்டுரை, முதல் தொகுதி, கழக வெளியீடு, 1958. (இ.ப.)

செங்கல்வராய பிள்ளை, வ, சு., ராவ்பகதூர், தேவார ஒளி நெறிக் கட்டுரை, இரண்டாம் தொகுதி, கழக வெளியீடு.

துரைசாமி பிள்ளை, சு. ஔவை., சைவ இலக்கிய வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு, 1958 (மு. ப.)

மீனாட்சி சுந்தரனார், தெ. பொ., தமிழா நினைத்துப் பார் சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1978, (இ. ப.).

மீனாட்சி சுந்தரனார், தெ. பொ., பிறந்தது எப்படியோ? சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1978 (நா. ப.).

வெள்ளைவாரணன், க., வித்துவான், பன்னிரு திருமுறை வரலாறு - முதற் பகுதி (முதல் ஏழு திருமுறைகள்) அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு, 1972

வேங்கடராமன், கா. கோ., சீவக சிந்தாமணியின் வடிவமும் நடையும் - ஓர் ஆழ்நிலை ஆய்வு, சென்னைப் பல்கலைக் கழகம், 1985 (வெளியிடப்படாதது).

வேலுப்பிள்ளை, ஆ., தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1978 (இ. ப.).

ஆங்கில நூல்கள்

Chapman. R, *Linguistics and Literature*, London, Edward Arnold, 1973

Coomaraswamy, k. Ananda, *Dance of shiva*, Sagar Publications New Delhi, 1982.

Dakshayani. K.V, *A Critical study of Metre in Kambaramayanam* Ph. D. Thesis, Annamalai university, (unpublished)

Dorai Ranga swamy, M. A, *The Religion and Philosophy of Tevaram*, Book. II, Madras University 1959.

Feys. J. *Sri Auro bindo yoga, Religion, Mysticis* Madras university, 1977.

Harry shaw, *Dictionary of Literary terms*. Megraw Hill Book, Company, New york, 1972.

Mundra, J. N of Sahni. C. C. Dr. *Advanced Literary Essays* Prakash Book Depot, Borcilly, 1977 (9th Edition).

சம்பந்தர் தேவாரம் — யாப்பும் பண்ணும்

ஓசை வாய்பாடு	பண்	தலமுறைப் பதிகம்
(1)	(2)	(3)
(1) ஈரடிப் பாடற் பதிகங்கள்		
1. தேமா 7	கௌசிகம் (மாலை மாற்று)	வ. 14/47
2. 1: மா கூவிளம் 4 (எண் சீரடி) 2: மா கூவிளம் மா கூவிளம் மா கூவிளங்காய் (அறுசீரடி)	(ஈரடி)	தெ. 61/12
3. 1: புளிமா கூவிளம் 4 (எண்சீரடி) 2: புளிமா கூவிளம் புளிமா கூவிளம் புளிமா கூவிளங்காய் (அறுசீரடி)	பழம்பஞ்சுரம்	வ. 14/66
4. மா கூவிளம் 3 கூவிளம் 2 (எண் சீரடி) மா கூவிளம் 3 கூவிளங்காய் (ஐஞ்சீரடி)	பழம்பஞ்சுரம்	வ. 10/2

(1)	(2)	(3)
(2)		
அ. வஞ்சித் துறை 4	2	9
1. தேமா தேமா	கொல்லி	பொ. 5
2. புளிமா தேமா	கொல்லி	தொண். 1/3
3. மா கூவிளம்	குறிஞ்சி	பா. 1/1; வ. 22; வ. 14/58; தெ. 63/5
4. மாகாய்	குறிஞ்சி	தெ. 87/1, நடு. 9/3, தெ. 30/2
ஆ. வஞ்சி விருத்தம் 4	3	18
1. மா 2 புளிமாங்காய் 1 (பெரிதும் புளிமா)	தக்க ராகம்	வ. 14/36, வ. 51/1
2. விளம் 2 விளங்காய் 1	வியாழக்குறிஞ்சி	தெ. 30/3, தெ. 67/2, வ. 18, வ. 14/28, வ. 11/2, தொண். 10
3. மாங்கனி கூவிளம் தேமா (கட்டளை 9/10)	தக்க ராகம்	தெ. 61/3, தெ. 39/1, தெ. 73
4. புளிமா 4/மாங்கனி கூவிளம் கூவிளங்காய்	இந்தளம்	தெ. 80/2, தெ. 117, தெ. 94/1, வ. 60/1, வ 4/1, தெ. 38, தெ. 29/1

(1)		(2)	(3)
இ. கலி விருத்தம்	23	14	116
1. மா 3 கூவிளம் 1		தக்க ராகம்	வ. 15, தெ. 42
2. மா 1 புளிமா 3		இந்தளம்	வ. 14/7
3. மா 3 புளிமாங்காய்		தக்க ராகம்	வ. 65/1, பா. 6, வ. 14/35, தெ. 13, தெ, 20
4. மா 1 கூவிளம் 3		கௌசிகம்	வ. 4/2, வ 54/3, பொ 7. பொ 6 வ. 14/46, பா 1/4, வ. 110, ப 1/5, தெ. 87/5
5. மா கூவிளம் தேமா கூவிளம்		இந்தளம்	வ. 14/23, வ 2, வ. 14/11, வ 3/1
6. மா / விளம் விளம் 3		கௌசிகம்	தெ. 18
7. விளம் 2 மா 1 தேமா 1		பழம் பஞ்சுரம்	வ. 60/3
8. விளம் 2 தேமா 2		வியாழக் குறிஞ்சி	தெ. 77

(1)	(2)	(2)
9. மாகாய் மாகாய்	குறிஞ்சி	வ. 1/1, தெ 82/1, பா 2, நடு 4, வ 14/37, நடு 16, தெ. 63/4, தெ 58/1, தெ. 34, தெ 20/1
	தக்க ராகம்	நடு 7
10. விளம் 2 மா 1 கூவிளம் 1	காந்தார பஞ்சமம்	வ. 69, தெ 115, வ 14/26, தொண் 14, பொ. 4, வ 61, வ 47, வ 11/3, தெ 54, தெ. 33, வ 11/2
	இந்தளம்	தொ 7
11. விளம் 4 (பெரிதும் கூவிளம்)	கொல்லி	வ. 42, வ 99, தெ 107, பா. 10, தெ 9, வ 14/55, வ. 9/6, தொண் 19/1, வ. 54/2, தெ 17, தெ 15
	இந்தளம்	தெ. 102, தொண் 1/2 தெ. 35
12. விளம் 4 (பெரிதும் கருவிளம்)	கொல்லி	பா. 4

(1)	(2)	(3)
13. விளம் 4 (கலப்பு) (ஏகபாதம்)	வியாழக்குறிஞ்சி	வ 14/60
14. விளம் 1 கருவிளம் 3	வியாழக்குறிஞ்சி (திருவிராகம்)	வ 121/2, தெ 63/6, வ 67/3, வ 51/2, வ 6/1
15. விளம் விளங்காய் 2	வியாழக்குறிஞ்சி	வட 1
16. காய் 2 மா 1 தேமா 1	வியாழக்குறிஞ்சி	தொண் 18
17. விளங்காய் கூவிளங்காய் 2 தேமா 1	இந்தளம் } திருவிராகம் }	வ 27, வ 55, வ 51/5, வ 46, வ 14/12, தெ 52/3
18. காய் 2 விளம் 1 புளிமாங்காய் 1	பழந்தக்க ராகம்	தெ 8
19. மாங்கனி 1 கூவிளம் 2 மா 1	இந்தளம்	தெ 98, வ 125/2, தொண் 6, தெ 31
	தக்க ராகம்	தெ 30/1, வ 57, வ 14/9
20. மாங்கனி 1 புளிமாங்கனி 2 மா 1	நட்டபாடை	தெ 108, பா 5, நடு 22/1, வ 19, வ 52, வ 14/6, தெ 61/1, தெ 16
21. இயற்சீர் மிகு வெள்ளைக் கொச்சகம்	அந்தாளிக் குறிஞ்சி	வ 5/1, வ 13/1
22. வெண்சீர் விரவு வெள்ளைக் கொச்சகம்	சீகாமரம்	தெ 96, நடு 21, தொண் 24, தெ 46

(1)		(2)	(3)
		இந்தளம்	தெ 119, வ 25, வ 14/39
		மேகராகக் குறிஞ்சி	தெ 41
23. தரவு கொச்சகக் கலிப்பா		பழந்தக்க ராகம்	தெ 79/1, தெ 123. வ 14/19
		பஞ்சமம்	தெ 79/2, தெ 92, தொண் 5, தெ 49
		சீகாமரம்	வ 122, வ 16, வ 9/2, வ 11/1, வ 14/2
		கௌசிகம்	தொண் 25/2
		காந்தாரம்	வ 14/8
ஈ. கலித்துறை	22	13	70
1. மா 4 காய் 1		காந்தாரம்	தெ 66, வ 14/41, வ 9/5, தொண் 16, வ 11/2, தெ 56
		குறிஞ்சி (பெரிதும் புளிமா)	வ 14/38
		தக்கேசி (பெரிதும் தேமா)	வ 14/33

	(1)	(2)	(3)
2.	மா தேமா கூவிளம் தேமா மாங்காய்	குறிஞ்சி	பா 11/1
3.	மா தேமா விளங்காய் கூவிளம் கூவிளங்காய்	பழந்தக்க ராகம்	நடு 6
4.	மா 1 விளம் 3 மா 1 (பெரிதும் கூவிளம்)	காந்தாரம் இந்தளம்	வ 85/1 வ 9/1
5.	மா 1 விளம் 2 மா புளிமாங்காய்	நட்டபாடை	நடு 9/1
6.	மா கூவிளங்காய் தேமா 1 கூவிளம் 2	காந்தாரம் செவ்வழி	வ 14/42 நடு 18
7.	மா கூவிளங்காய் கூவிளம் 3	இந்தளம்	தெ 70, வட 3
8.	மா 1 கருவிளம் 1 விளம் 1 புளிமா 1 கருவிளங்காய் 1	நட்டபாடை	வ 43
9.	மா காய் புளிமா தேமா மாங்காய்	தக்க ராகம்	தொண் 15
10.	மா 1 கூவிளம் 4	இந்தளம்	தொண் 25/1, வ 54, வ 51/4, வ 38, தெ 50, தெ 25/1

	(1)	(2)	(3)
11.	விளம் 1 கூவிளம் 4	குறிஞ்சி	தெ 82/2
		செவ்வழி	வ 75/2, வ 14/45, வட 4, தொண் 32, வ 14/14, தெ 29/2, தெ 5
		காந்தார பஞ்சமம்	பா 7, பா 8, வ 14/16, தெ 63/8, தெ 53/3, தெ 47
12.	விளம் 1 கருவிளம் 4	சாதாரி	வ 14/32, தெ 63/10, தெ 52/4
		சாதாரி (திருவிராகம்)	தெ 95, தெ 90
13.	விளங்காய் 1 கூவிளங்காய் 3	சாதாரி (திருவிராகம்)	தெ 100, வ 14/20
	தேமா 1 விளங்காய் 4 மா 1	சாதாரி	தெ 20/3
14.	விளம் மாவிளம் மா புளிமாங்காய்	குறிஞ்சி	தெ 6, பா 3, வ 17, வ 14/31, தொண் 28
15.	விளம் 1 கூவிளம் 1 தேமா 1 கூவிளம் 2	காந்தாரம்	தெ 126
16.	காய் 2 மா 2 மாங்காய் 1	காந்தாரம்	வ 94/2, வ 14/13, தெ 45, தெ 30/6, தெ 20/2

(1)	(2)	(3)
17. மா தேமாங்கனி தேமா தேமாங்காய் கூவிளம்	செல்வழி	வ 58
18. விளம் கூவிளம் விளங்காய் புளிமா புளிமாங்காய்	பழம்பஞ்சுரம்	தெ 44
19. விளம் 1 கூவிளம் 3 கூவிளங்காய் 1	பஞ்சமம்	தெ 112, தொண் 30
20. விளம் 1 தேமா 2 புளிமாங்காய் 1	வியாழக்குறிஞ்சி	பொ 1
கூவிளங்காய் 1		தெ 26
	பஞ்சமம்	
21. விளம் 4 விளங்காய் 1	பஞ்சமம்	தெ 81, தொண் 20, வ 39, வ 14/5
	சாதாரி	வ 23
22. கட்டளைக் கலித்துறை	வியாழக்குறிஞ்சி	வ 14/59
		94
2. அறுசீரடி ஆசிரிய விருத்தம் 22	10	
1. மா 3 × 2	காந்தாரம்	தெ 48
2. மா 5 மாங்காய்	தக்கேசி	தெ 65/2, நடு 22/2, வ 14/30, வட 5/1 வ 63, வ 56, வ 50, தெ 28

(1)	(2)	(3)
3. மா 4 விளம் காய்	பழந்தக்க ராகம்	தெ 21/1, தெ 52/2, வ 14/27, நடு 9/2, வ 41
	தக்கேசி	வ 14/57, பா 11/1, வ 10/1
4. விளம் 4 மா 1 தேமா 1	சாதாரி	பா 14, வ 14/50 வ 49, தெ 55/3
5. மா தேமா கூவிளம் 2	கொல்லிக் கொவாணம்	தெ 106
	கௌசிகம் (திருவிராகம்)	வ 60/2, பா 1/6
	நட்டராகம் (திருவிராகம்)	வ 37, நடு 11
6. மா கூவிளம் கூவிளம் × 2	காந்தாரம்	நடு 12, தெ 40,
	திருவியமகம்	தெ 63/13
7. விளம் விளம் மா × 2	காந்தாரம்	கொ 6, வ 53, வ 14/3, தெ 4, பா 1/2, வ 34
8. விளம் விளம் காய் × 2	நட்ட ராகம்	தெ 124
	பழம்பஞ்சுரம்	வ 14/67

	(1)	(2)	(3)
9.	கருவிளம் 3 × 2	நட்டபாடை (திருவிராகம்)	தெ 67/1, வ 125/1 வ 14/51, தெ 61/2
10.	காய் 3 × 2	பழந்தக்கராகம்	நடு 2
11.	விளம் 1 கூவிளம் 3 தேமா புளிமாங்காய்	நட்டபாடை	வ 14/1
12.	மா 1 விளங்காய் 1 கூவிளம் 2 தேமா புளிமாங்காய்	நட்டபாடை	தெ 75/1, தொண் 21
13.	விளம் கூவிளம் 3 தேமா மாங்காய்	பழம்பஞ்சுரம்	வ 33/3, வ 33/2
14.	விளம் 2 மா 2 புளிமாங்காய்	பழம்பஞ்சுரம்	தெ 101, பா 8/2, வ 8/1
15.	விளம் 2 தேமா 2 கூவிளம் கூவிளங்காய்	பழம்பஞ்சுரம்	வ 14/21
16.	விளம் 1 கூவிளம் 3 மா 1 தேமா 1	காந்தாரம்	தெ 87/3

	(1)	(2)	(3)
17.	விளங்காய் 4 தேமா புளிமா	சாதாரி	தெ 14, தெ 39/2
		சாதாரி	வ 85/2, வ 125/4,
		(திருவிராகம்)	வ 14/65, வ 14/34, நடு 17, வ 19/2, தொண் 7, துளு 1, வட 5/2, வ 48, தெ 63/9, தெ 23
18.	மாகூவிளம் மா விளம் 2 மா	பியந்தைக் காந்தாரம்	தெ 76, தெ 116, வ 125/3, வ 29/2, வ 14/49, வ 14/43, நடு 1, தொண் 31.
19.	கூவிளம் 1 மா 4 புளிமாங்காய் 1	பழம்பஞ்சுரம்	தெ 25/3
20.	மா விளம் 4 புளிமாங்காய்	நட்டராகம்	தெ 55/2, தெ 25/2, தெ 109, தெ 74, வ 84, தெ 111, ஈ 2, வ 14/29, வ 58
21.	காய் 4 மா தேமா	காந்தாரம்	பி 13/2, கொ 3, வ 14/64, வ 14/63 வ 14/62
		மேகராகக்குறிஞ்சி	நடு 9/4, வ 14/54, வ 51/3, தெ 63/7
22.	மா கூவிளம் 4 கூவிளங்காய் 1	மேகராகக்குறிஞ்சி	தொண் 11/1

(1)		(2)	(3)
ஊ. எழுசீரடி விருத்தம்	6	5	17
1. மா தேமா 5 கூவிளம்		நட்டராகம் திருவிராகம்	வ 14/44, தெ 37, தெ 87/4
2. மா கூவிளம் தேமா கூவிளம் தேமா கூவிளம் 2 (கட்டளை 18/19)		கொல்லி	பா 1/3, வ 14/4
3. விளம் மா விளம் மா விளம் விளம் மா		புறநீர்மை தக்கராகம்	ஈ 1, பா 1/9, வ 35, வ 31, வ 14/56, தெ 63/14 தெ 64, தெ 59
4. விளம் 3 தேமா 1 விளம் 2 தேமா 1		தக்கராகம்	வ 62
5. விளம் கூவிளம் தேமா 2 விளம் 2 கூவிளங்காய் 1		நட்டபாடை	தெ 80/1
6. புளிமாங்காய் தேமா × 3 + புளிமா		பியந்தைக் காந்தாரம்	வ 7/1, வ 14/48

(1)		(2)	(3)
எ. எண்சீரடி விருத்தம்	6	5	15
1. மா 1 கூவிளம் 3 × 2		பழம்பஞ்சுரம் (திருவியமகம்)	பா 1/8, தொண் 1/4
2. விளம் 3 புளிமா 1 × 2		குறிஞ்சி	வ 14/52, தொண் 13, தொண் 27.
3. விளம் கூவிளம் தேமா 2 × 2		நட்டபாடை	வ 12/1, தெ 21, தெ 52
4. மாங்கனி கூவிளம் மாதேமா × 2		இந்தளம்	பொ 2
5. கூவிளம் புளிமா கூவிளம் புளிமா கூவிளம் 3 தேமா 1		குறிஞ்சி	தொண் 29, வ 14/18
6. விளம் 1 தேமா 2 புளிமாங்காய் 1 தேமா 1 புளிமாங்காய் 1 தேமா 1 புளிமா 1		பியந்தைக் காந்தாரம்	தெ 65/3, வ 33/1, பொ 3, தெ 43
ஏ. ஒன்பதின் சீரடி விருத்தம்	1	1	1
1. கூவிளம் 7 மா 1 கூவிளங்காய் 1		யாழ்முரி	தெ 51.

	(1)		(2)	(3)
ஐ.	பன்னிரு சீரடி விருத்தம்	1	1	1
	மா 5 கூவிளம் 1 மா 4 கூவிளம் 1 கருவிளங்காய் (பெரிதும் தேமா)		வியாழக்குறிஞ்சி (திருத்தாளச்சதி)	வ 14/53
3.	சீரெண்ணிக்கை ஒவ்வா நான்கடிப் பாக்கள்	18	8	31
	1. 1, 3: மா கூவிளம் மா கூவிளம் 2, 4: மா கூவிளம் கூவிளம்		நட்டராகம்	பா 9
	2. 1, 3; மா 1 கூவிளம் 3 2, 4: மா 1 கூவிளம் 2		பழந்தக்க ராகம்	தெ 91, வ 8 தொண் 11/1 தொண் 23, வ 59.
			மேகராகக்குறிஞ்சி	தெ 3
	3. 1, 3: விளம் 4 2, 4: விளம் 2 மா 1		சாதாரி (திருமுக்கால்)	நடு 9/7, நடு 10 வ 45, வ 14/19, தெ 63/1, தெ 60

		(1)	(2)	(3)
4.	1, 3:	விளம் 1 கூவிளம் 3 கூவிளங்காய்	வியாழக்குறிஞ்சி	கொ 4
	2, 4:	விளம் கூவிளங்காய் காய் 2		
5.	1, 3:	மா 1 கூவிளம் 3 × 2	காந்தாரபஞ்சமம்	1/2, 14/24
	2, 4:	மா கூவிளம் 3 கூவிளங்காய்		
6.	1, 3:	விளம் 3 மா 1 விளம் 1 மாங்காய் 1		
	2, 4:	விளம் கூவிளங்காய் மா கூவிளங்காய்	வியாழக்குறிஞ்சி	தெ 87/2
7.	1, 3:	விளம் கூவிளம் 4 மாங்காய் 1	வியாழக்குறிஞ்சி	தொண். 12
	2, 4:	விளம் கூவிளம் 3 கூவிளங்காய் 1		
8.	1, 3:	கருவிளம் 4	வியாழக்குறிஞ்சி	தெ 30/4
	2. 4:	கருவிளம் 3 புளிமா1	(திருவிராகம்)	தெ 30/5
9.	1, 3;	கூவிளம் 4 தேமா 1 விளங்காய் 1		
	2, 4:	கூவிளம் 3 தேமா 1 விளங்காய் 1	வியாழக்குறிஞ்சி	தெ 104

		(1)	(2)	(3)
10.	1, 3:	கூவிளம் 3 தேமா 1 கூவிளம் 2 கூவிளங்காய்	தக்கராகம்	வ 2/1
	2, 4:	கூவிளம் 2 தேமா 1 × 2		
11.	1, 3:	தேமா கூவிளம் × 4	சீகாமரம்	தெ 105, நடு 21/2
	2, 4:	மா காய் மா காய்		
12.	1, 3:	மா கூவிளம் × 4	சீகாமரம்	தெ 53/1
	2, 4:	மா கூவிளம் 2 மா காய்		
13.	1, 3:	தேமா கூவிளம் ×4	சீகாமரம்	வ 14/40, நடு 20
	2, 4:	மா 1 கூவிளம் 3 தேமா 1		
14.	1, 3:	விளம் 1 கூவிளம் 2 தேமா 1 கூவிளம் 2 தேமா 1	தக்கராகம்	வ 29/1
	2, 4:	விளம் கூவிளம் தேமா × 2		
15.	1, 3,	கூவிளம் 5 காய் 1	வியாழக்குறிஞ்சி	வ 14/10
	2, 4:	மா காய் × 2		

(1)	(2)	(3)
16. 1, 3: விளம் கூவிளம் தேமா 2 கூவிளம் 2 தேமா 2 2: விளம் கூவிளம் தேமா 2 கூவிளம் 2 கூவிளங்காய் 4: கூவிளம் 2 கூவிளங்காய் × 2	நட்டபாடை (வினாவுரை)	வ 14/17
17. 1, 2: மா 1 கூவிளம் 3 3: மா 1 கூவிளம் × 2 4: மா விளம் தேமா 2	காந்தார பஞ்சமம் ஈரடிமேல்வைப்பு	வ 14/25
18. 1, 2: மா கூவிளம் 2 தேமா 1 3: தேமா கூவிளம் 2 4: தேமா 1 கூவிளம் 2	காந்தார பஞ்சமம் ஈரடிமேல்வைப்பு	தெ 11³ (விலக்கு 11)

4. சீரெண்ணிக்கை ஒத்த ஆறடிப்பா

1. 1–4: மா 1 கூவிளம் 3 5–6: மா 1 கூவிளம் 3	நாலடிமேல்வைப்பு பழம்பஞ்சுரம்	பா 1/7 (விலக்கு 11)

(1)	(2)	(3)
5. சீரெண்ணிக்கை ஒவ்வா ஆறடிப்பாக்கள்		
1. 1–4: விளம் 2 விளங்காய் 1 5–6: புளிமாங்கனி காய் கூவிளம் கருவிளங்காய்	நாலடிமேல்வைப்பு காந்தார பஞ்சமம்	தே. 36
2. 1–4: கருவிளம் 2 கூவிளங்காய் 1 5–6: புளிமாங்கனி கூவிளம் கருவிளம் கருவிளங்காய்	நாலடிமேல்வைப்பு காந்தார பஞ்சமம்	வ 14/15
6. இணைக் குறளாசிரியம்		
திருவெழுகூற்றிருக்கை	வியாழக்குறிஞ்சி	வ 14/61

("மூவர் தேவாரம் — தலமுறை" (அடங்கல் முறை)
பன்னிரு திருமுறை பதிப்பு நிதி வெளியீடு.
ஸ்ரீ குமர குருபரன் சங்கம், ஸ்ரீ வைகுண்டம்.
காசிமட வெளியீடு — 14—1—1966.)

சுருக்க விளக்கம்

வ	—	காவிரியின் வடகரைத் (சோழநாடு) தலங்கள்
தெ	—	,, தென்கரைத் (,,) தலங்கள்
பா	—	பாண்டிய நாட்டுத் தலங்கள்
தொண்	—	தொண்டை நாட்டுத் தலங்கள்
வட	—	வட நாட்டுத் தலங்கள்
நடு	—	நடு நாட்டுத் தலங்கள்
ஈ	—	ஈழ நாட்டுத் தலங்கள்
கொ	—	கொங்கு நாட்டுத் தலங்கள்
மலை	—	மலை நாட்டுத் தலங்கள்
துளு	—	துளு நாட்டுத் தலங்கள்
பொ	—	பொதுப் பதிகங்கள்

சம்பந்தர் தேவாரப் பண்கள் (23)

1. அந்தாளிக் குறிஞ்சி
2. இந்தளம்
3. காந்தாரம்
4. காந்தார பஞ்சமம்
5. குறிஞ்சி
6. கொல்லி
7. கொல்லிக்கெளவாணம்
8. கௌசிகம்
9. சாதாரி
10. சீகாமரம்
11. செவ்வழி
12. தக்க ராகம்
13. தக்கேசி
14. நட்டபாடை
15. நட்டராகம்
16. பஞ்சமம்
17. பழந்தக்க ராகம்
18. பழம் பஞ்சுரம்
19. பியந்தைக் காந்தாரம்
20. புறநீர்மை
21. மேகராகக் குறிஞ்சி
22. யாழ்முரி
23. வியாழக்குறிஞ்சி

AUP

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
நூல் வெளியீட்டுத் துறை